விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 29 வியாழக்கிழமை (14.09.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 269

## நாடு முழுவதும் கவனத்தை ஈர்த்த
# வித்தியா படுகொலை வழக்கின் தீர்ப்பு 27ஆம் திகதி அறிவிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)
புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியா கொலை வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 27 ஆம் திகதி புதன் கிழமை ட்ரயல் அட்பார் நீதிமன்றி னால் வழங்கப்படவுள்ளது.

இந் நிலையில் இந்த வழக்கின் தீர்ப்பு எவ்வாறாக அமைய போகின் றது என அனைவரிடையேயும் பெரும் எதிர்பார்ப்பை தோற்றுவித் துள்ளது. புங்குடுதீவு பாடசாலை மாணவியான சிவலோக 24

## வவுனியா மூன்றுமுறிப்பில் மூன்று கைக்குண்டுகள் மீட்பு


23

## நீதிமன்றில் முன்னிலையாக துணிவின்றி
# தீர்ப்பின் பின் மகிந்த குற்ற ஒப்புதல் பேச்சு
## மோசமான நடிப்பு எனச் சாடுகிறார் அமை.துமிந்த



(கொழும்பு) சீத்தைத் துணி விநியோக வழக்கில் தீர்ப்பளிக்க முன்னரே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நீதிமன்றத்தில் முன்னிலையாகி குற்றத்தை ஒப்புக்கொண் டிருக்கலாம் என்று தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான துமிந்த திஸநாயக்க, மாறாக அதனை செய்யாமல் தீர்ப்பளிக்கப்பட்டு குற்றவாளிகள் இருவரும் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் நிலையில் குற்றத்தை ஒப்புக்கொள்வது மோசமான நடிப்பு எனவும் சாடியுள்ளார். (04ஆம் பக்கம் பார்க்க)

## வித்தியா வழக்கு
## கடும் நிபந்தனையுடன் லலித்திற்கு பிணை

(யாழ்ப்பாணம்)
புங்குடுதீவு மாணவி கொலை வழக்கின் பிரதான எதிரியான சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் தப்பிச் செல்ல உதவினார் எனும் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் வட மாகாண பிரதிப் பொலிஸ் 24

## திருடர்கள் மூவர் மடக்கிப்பிடிப்பு

(யாழ்ப்பாணம்)
கோப்பாய் - நீர்வேலி பூதர்மடம் பகுதியிலுள்ள வீடு ஒன்றினுள் திரு டும் நோக்குடன் உள்நுழைந்த மூன்று நபர்களை அப்பகுதி மக்கள் ஒன்று சேர்ந்து மடக்கி பிடித்து பொலி ஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேற்படி பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் நேற்று மாலை 23

## தமிழர் என்றாலே சிலருக்கு இன ரீதியில் காழ்ப்புணர்வு
### பந்துல குறித்து ராஜித கருத்து



(கொழும்பு)
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச் சின் ஆலோசகர் ஆர்.பாஸ்கரலிங் கம் தமிழர் என்பதனா 04

## இளைஞன் மீது வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)
இனந்தெரியாத நபரொருவரின் வாள்வெட்டுத் தாக்குதலால் இளை ஞன் ஒருவர் படுகாயமடைந்துள் ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9.00 மணிக்கு 23

## வித்தியா படுகொலை வழக்கில் எதிரிகள் தரப்பு தொகுப்புரை

- வித்தியாவின் தலையில் துப்பாக்கியால் தாக்கிய காயம் காணப்பட்டது
- அரச தரப்பு சாட்சிகளில் முரண்பாடு
- குற்றத்தை நிரூபிக்க ஆதாரம் இல்லை
- இயலாமையின் வெளிப்பாடே பயங்கரவாத தடைச்சட்டம்
- அனைவரும் நிரபராதிகளே!

(யாழ்ப்பாணம்)
வித்தியாவின் தலையின் பிடரி பகுதியில் காணப்படுகின்ற காயம் துப்பாக்கி ஒன்றினால் தாக்கப்பட்ட காயமாகும்.

சட்டமா அதிபர் திணைக்களம் வித்தியாவின் வழக்கை பொய்ச் சாட்சிகள் கொண்டு நடத்துகின் றது. திரைப்பட கதைகள் போன்று இந்த வழக்கையும் சட்டமா அதிபர் திணைக்களம் புனைந்துள்ளது.

பிரதான சாட்சியாக கருதப் படும் இம்லா என்பவர் மீது ஏற்க னவே 17 வழக்குகள் வேறு நீதிமன் றில் உள்ளன. அவர் ஒரு மோசடி நபர். அவரை எவ்வாறு ஒரு சாட்சி யாக சட்டமா அதிபர் திணைக்களம் கருதியது? அரச தரப்பு சாட்சிகள் இடையே பல முரண்பாடு உள்ளது.

எதிரிகள் அனைவரும் குறித்த குற்றத்துடன் தொடர்பு அற்றவர் கள். எனவே அவர்கள் அனைவரை யும் விடுதலை செய்ய வேண்டுமென புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கின் எதிரிகள் சார் பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணி கள் ரயல் அட்பார் (நீதாய) விளக்கத்தில் தொகுப்புரையை சமர்ப்பணம் செய்துள்ளனர்.

புங்குடுதீவில் வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவியான 23

## தம்பதியரை தாக்கி பணம், நகை அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)
இனந்தெரியாத குழுவொன்று வயோதிபத் தம்பதியினரைத் தாக்கி அச்சுறுத்தி ஒரு தொகைப் பணம் மற்றும் தங்க நகைகளை அபகரித்துச் சென்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று புதன் கிழமை அதிகாலை 1.30 23

## 2018ஆம் நிதியாண்டிற்கான
# அரசின் மொத்த செலவு ரூ.3,982 பில். மதிப்பீடு

(கொழும்பு)
அரசாங்கத்தின் கொள்கை மற் றும் முன்னுரிமையின் அடிப்படை யில் 2018 - 2020 ஆம் ஆண்டு வரையிலான இடைக்கால பகுதிக் கான வரவு செலவுக் கட்டமைப்பை அடிப்படையாக எடுத்துக்கொள்ளக் கூடிய மொத்த வளத்தை 04

## கறுப்புக் கண்ணாடி அணிந்து விசாரணை

(யாழ்ப்பாணம்)
புங்குடுதீவு பாடசாலை மாணவி கொலை வழக் கின் ட்ரயல் அட்பார் நீதிமன்றின் நீதிபதிகளில் ஒருவரான மா.இளஞ்செழியன் நேற்றைய வழக்கு விசாரணையின் போது கறுப்புக் கண்ணாடி அணிந்து சுவிஸ்குமாரின் சட்டத்தரணியை பார்வையிட்டிருந்தார். 23

## மயங்கி வீழ்ந்து சிறுவன் மரணம்



(மல்லாவி)
வன்னியில் இடம் பெற்ற இறுதிக் கட்ட போரின் போது தாய், தந்தையினை இழந்த நிலையில் மாம 04

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

VIEXCO

**Vijayalanka Auto Spare Parts**

Div. Of Vijayalanka Exports & Contracts Co. Pvt Ltd

## மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை நிலைய திறப்பு விழா

இல.08, மணியம் பில்டிங், பருத்தித்துறை வீதி, புத்தூர் கிழக்கு, புத்தூர் என்னும் முகவரியில் அமைந்துள்ள எமது வியாபார நிலையம் 14.09.2017 வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் விஜயலங்கா நிறுவனத்தின் அதிபர் திரு. பெரிய விக்னேஸ்வரன் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது. வாடிக்கையாளர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**சகலவிதமான மோட்டார் சைக்கிள் மற்றும் மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், பற்றரிகள், சகல விதமான ஒயில் வகைகள், ரயர்ரியூப் வகைகள், தலைகவசங்கள் போன்றவற்றை மிகமலிவான விலைகளில் எம்மிடம் பெற்றுக்கொள்ளமுடியும்.**

**Vijayalanka Auto Spare Parts**

Point Pedro Road, Puttur East Puttur.

**T.P : 021 722 3228**

**www.vijayalanka.lk**

(354)

# சமிஞ்ஞை மொழி சட்டமூலம்; அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

சமிஞ்ஞை மொழி சட்டமூலத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அங்கவீனம் தொடர்பான தேசிய கொள்கையின் மூலம் சமிஞ்ஞை மொழியானது விசேட தேவையுடைய நபர்களின் தொடர்பாடல் மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட மொழியாக சமிஞ்ஞை மொழியினை ஏற்படுத்துவதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில், முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சமிஞ்ஞை மொழி சட்டமூலத்தை தயாரிப்பது தொடர்பில் சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் மலைநாட்டு உரிமைகள் தொடர்பான அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கவினால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டது. (செ-11)

## ST. JOHN'S COLLEGE, JAFFNA

## VACANCY

Applications are hearby invited from qualified persons to teach :

**Tamil & Tamil Literature - Grade 10 & 11**

please send your complete CV including the contact details of two non - related referees by post on or before 21st September 2017 to the address below. Only shortlisted candidates will be called for interview.

**The principal,**
**St. John's College,**
**Jaffna.**

(C-9630)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**

## கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு - கேள்வி அறிவித்தல்

தவிசாளர் மாவட்டபெறுகைக்குழு கமநல அபிவிருத்தித் திணைக்களம் முல்லைத்தீவு சார்பாக உதவி ஆணையாளரால் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள கட்டடம் புனரமைப்பு வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

01. விலைக்கேள்வியானது தேசியபோட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

02. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

03. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் **கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு** எனும் முகவரியில் 14.09.2017 தொடக்கம் முற்பகல் 9.00 மணியளவில் இருந்து **மாலை 3.00** வரை விலைக்கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம் என்பதுடன் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

04. ஆங்கிலமொழி மூலமான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியினை முல்லைத்தீவு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 14.09.2017 முதல் 25.09.2017 வரை வேலை நாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000.00 கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

05. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர், மாவட்ட பெறுகைக் குழு, கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 25.09. 2017 ஆம் திகதியன்று பி.ப 02.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுதபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர மற்றும் கேள்வி இலக்கத்தினை தபால் உறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகை தரவிரும்பும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் 25. 09.2017 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி **தனியாகவும் நகல் தனியாகவும் இரு உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.**

06. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

07. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கேள்வியானது (Bid) கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியில் இருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் வித்தில் கேள்விப்பிணை பொறுப்பு (Bid Security) 25.11.2017ஆம் திகதி வரை செல்லுபடியானதாகவும் இருத்தல் வேண்டும்.

08. VAT பதிவு பத்திரம் உள்ளவர்கள் (Bid) உடன் இணைக்கவும். இணைக்காத பட்சம VAT கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது என மனவருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறேன்.

| கேள்வி இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | கேள்விப் பிணைத் தொகை செல்லுபடிக்காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை | கமநலசேவை நிலையம் |
|---|---|---|---|---|---|---|
| MU/DAD/Tender/2017/39-08 | கமநல சேவை நிலைய கட்டம் | 4.30Mn | 25.11.2017 | C 8 அல்லது அதற்கு மேல் | 44,000.00 | புதுக்குடியிருப்பு |

**தவிசாளர் / உதவிஆணையாளர்,**
மாவட்ட பெறுகைக்குழு,
**கமநல அபிவிருத்தித் திணைக்களம்,**
**முல்லைத்தீவு.**

(C-9631)

## பெறுகை அறிவித்தல்

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
02. பெறுகையானது பொதுநிதிச்சுற்றறிக்கை 04/2016(1) இற்கமைவாக வட மாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமானதரத்தில் இக்ராட் பதிவுள்ளவராகவும், கறுப்புப்பட்டியலில் பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
03. தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
04. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ஆங்கிலமொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.எஸ்.வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 14.09.2017 தொடக்கம் 28.09. 2017 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 14.00 மணி வரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபாய்.2000/= செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
05. பெறுகை ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து 28.09.2017-ம் திகதி 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வி யானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
06. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 20.09.2017 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும். கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை மில்லியனில் (VAT,TAR நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை வைப்பு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| 01. | களஞ்சிய அறை அமைத்தல் தலைமையலுவலகம் | 1.82 | 03 மாதம் | C9/C8 | 19,000.00 |
| 02. | நூலகக்கட்டடம் விஸ்தரித்தல் சுன்னாகம் | 1.79 | 03 மாதம் | C9/C8 | 18,000.00 |
| 03. | சுன்னாகம் உப அலுவலக கூரை மாற்றம் | 1.34 | 02 மாதம் | C9/C8 | 14,000.00 |
| 04. | தெருவிளக்கு வழங்கல்- 340 NOS | 1.00 | 07 நாட்கள | - | - |
| மீள் கேள்வி வேலைகள் | | | | | |
| 05. | நீர்த்தாங்கி அமைத்தல், கொல்களம் | 0.45 | 02 மாதம் | C9/C8 | 5,000.00 |
| 06. | சுற்றுமதில் அமைத்தல் மல்வம் இடுகாடு | 0.69 | 02 மாதம் | C9/C8 | 7,000.00 |
| 07. | அரசடி குறுக்கு வீதி, மல்வம் உடுவில் | 1.13 | 02 மாதம் | C9/C8 | 12,000.00 |
| 08. | காளி வீதி இணுவில் | 1.10 | 02 மாதம் | C9/C8 | 12,000.00 |
| 09. | துன்மினியத்தோட்ட 3-ம் வீதி, சங்குவேலி | 1.05 | 02 மாதம் | C9/C8 | 11,000.00 |
| 10. | பேச்சியம்மன் வீதி, உடுவில் | 0.64 | 02 மாதம் | C9/C8 | 7,000.00 |

**தவிசாளர்**
**பிரதேசசபை பெறுகைக்குழு**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை**
**சுன்னாகம்.**

(C-9632)

# இறுதிப் போரில் பங்கேற்ற 18 இராணுவ அதிகாரிகள் ஐரோப்பா செல்லத் தடை!

இறுதிக்கட்டப் போரில் பங்கேற்ற 18 இராணுவ அதிகாரிகள் ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணங்களை மேற்கொள்வதற்குமுடியாதநிலைமை ஏற்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை தீர்மானங்களை அமுல்படுத்துமாறு, ஆணையாளர் செயிட்ராட் அல்ஹூசைன் உறுப்பு நாடுகளிடம் கோரியுள்ளார். இந்த கோரிக்கைக்கு அமைய வன்னிப் போருடன் தொடர்புடைய 18 இராணுவ அதிகாரிகளுக்கு, ஐரோப்பிய நாடுகளுக்கு பயணங்களை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை தீர்மானத்திற்கு அமைய குறித்த இராணுவ அதிகாரிகள் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டால் அவர்களை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்த முடியும்.

அத்துடன் சர்வதேச நீதிமன்ற பிரகடனத்தை அமுல்படுத்துமாறு செயிட் அல் ஹூசைன் கோரிக்கை விடுத்துள்ளதாகவும், உறுப்பு நாடுகளின் அனுமதியின்றி இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த ஊடகம் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த விடயம் குறித்து இலங்கை அரசாங்கம் இதுவரையில் பதிலளிக்கவில்லை. இந்த பிரகடனத்திற்கு அமைய யாரை கைது செய்ய வேண்டும் என்ற பட்டியலை ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னாள் அதிகாரி யஸ்மீன் சூகா, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையிடம் சமர்ப்பித்துள்ளார் என்றும் அந்த ஊடகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ-7)

# அர்ஜூன் அலோசியஸை வற்புறுத்த முடியாதாம்

## ஜனாதிபதி ஆணைக்குழு

பேர்ப்பச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜூன் அலோசியஸ், குறித்த விடயத்தில் சாட்சியமளிக்க வேண்டுமென்பதுடன் அவர் சாட்சியமளிக்க விரும்பவில்லையாயின் அவரை வற்புறுத்த முடியாதென ஜனாதிபதி ஆணைக்குழு அறிவித்துள்ளது.

சர்ச்சைக்குரிய பிணைமுறி விநியோகம் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில், பேர்ப்பச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜூன் அலோசியஸ் நேற்று முன்னிலையானார். இந்நிலையில் ஆணைக்குழு இவ்வாறு தெரிவித்துள்ளது. (இ-7)

# பதவி பறிக்கப்பட்ட அருந்திக ஜனாதிபதியுடன் சந்திப்பு



பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பிரதியமைச்சர் அருந்திக பெர்னாண்டோ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்றுக் காலை இச்சந்திப்பு இடம்பெற்றது.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத விவகாரங்கள் பிரதியமைச்சராக இருந்த அருந்திக பெர்னாண்டோ நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் பிரதியமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு ஆதரவான கூட்டு எதிர்க்கட்சியுடன் இணையப் போவதாக அண்மையில் அருந்திக பெர்னாண்டோ பகிரங்கமாக அறிவித்தல் விடுத்திருந்த நிலையில் அவரது பதவி பறிக்கப்பட்டிருந்தது.

தான் பிரதியமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்ட போதிலும் சுதந்திரக்கட்சியில் தொடர்ந்தும் நிலைத்திருக்கப் போவதாக அருந்திக பெர்னாண்டோ நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் அவர் நேற்றுக் காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பு குறித்து எத்தகவலும் வெளிவரவில்லை. (இ-7)

# மோசடி செய்து சிறை செல்பவர்களுடன் அரசாங்கம் ஒப்பந்தம் செய்துள்ளதா?

## அசாத்சாலி கேள்வி



கடந்த அரசாங்கத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு நீதிமன்றம் தண்டனை வழங்குகின்ற போதிலும், அவர்களை வைத்திய சாலையில்அனுமதிப்பது தொடர்பில் அரசாங்கம் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டுள்ளதா என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி கேள்வியெழுப்பியுள்ளார்.

குறிப்பாக பசில் ராஜபக்ஷ மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த போதிலும், அவர்கள் சிறைச்சாலையில் தங்கவைக்கப்படவில்லை.

மாறாக சிறைச்சாலை வைத்தியசாலைகளிலேயே தங்க வைக்கப்பட்டிருந்தனர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். எனவே, இது குறித்து தேடிப்பார்க்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அரசியல்வாதிகள் தவறிழைத்து, அவர்களுக்கு நீதிமன்றம் தண்டனை விதித்தால் அவர்கள் சிறையில் ஒருநாள் கூட கழிக்காமல் சிறைச்சாலை வைத்தியசாலை வைத்தியர்களின் ஒப்புதலுடன் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்நிலையில், சிறு தவறுகளை செய்த கைதிகள் மாத்திரம் நீதிமன்ற தண்டனையை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் கடந்த அரசாங்கத்தில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட பலருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அவற்றின் சில வழக்குகளில், நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது. எனினும், தண்டனை விதிக்கப்பட்டவர்கள் சிறையில் தங்கவில்லை. மாறாக சிறைச்சாலை வைத்தியசாலைகளிலேயே தங்கி வந்துள்ளனர்.

தற்போது சில் துணி விநியோகம் தொடர்பில் லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு நீதிமன்றம் கடூழிய சிறைத் தண்டனை விதித்துள்ளது.

எனினும், தீர்ப்பளிக்கப்பட்ட அன்றைய தினமே அவர்கள் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோசடிகளில் தொடர்புபட்டவர்களுக்கு நீதிமன்றம் சிறைத்தண்டனை வழங்கும் போது அவர்களை வைத்தியசாலையில் அனுமதிப்பது தொடர்பில் அரசாங்கம் ஒப்பந்தம் ஏதேனும் செய்துள்ளதா என தேடிப்பார்க்க வேண்டும்.

இந்நிலையில், வெளிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களில் கைகளில் உண்மையான நோயாளிகள் யார் என்பதை அடையாளம் காண்பதற்கு அரசாங்கம் வைத்தியர் குழு ஒன்றை அனுப்பி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# லலித்துக்கு சிறைக்குள் சீன உணவுகளுடன் இராஜ உபசாரம்

## பிரதியமைச்சர் ரஞ்சன் குற்றச்சாட்டு



சில் துணி மோசடியில் ஈடுபட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் பணிப்பாளர் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு சொகுசு ஹோட்டலிலிருந்து சைனீஸ் சாப்பாடு வருவதாக பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார். திருடர்களை காப்பாற்ற சில பிக்குமார் பணம் திரட்டுவதாக குறிப்பிட்ட அவர், சிறைச்சாலைகளில் வசதியான அரசியல்வாதிகளை ஒருவிதமாகவும் கிராமத்து அப்பாவி மக்களை வேறுவிதமாகவும் நடத்துவதாகவும் குற்றம் சாட்டினார்.

வெலிக்கடை சிறைச்சாலை முன்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போதே அவர் இதனை தெரிவித்தார். கைதிகளின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், 60 கோடி ரூபா அரசாங்க பணத்தை திருடியது தொடர்பான வழக்கு விசாரணைக்கு சிறந்த தேகாரோக்கியத்துடன் வரும் இவர்கள் தீர்ப்பு வழங்கியவுடன் நோயாளியாகி விடுகின்றனர்.

இவ்வாறு நோயுடன் இவர்கள் எப்படி அரச சேவையில் இருந்தார்கள் என்பது சந்தேகமே. சில பி.எம்.டபிள்யூ பிக்கு முதலாளிமார்கள் திருடர்களை பாதுகாக்க முயல்கிறார்கள். இவர்களுக்கு சொகுசு ஹோட்டலிலிருந்து தினமும் சாப்பாடு வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அர்ஜூன் மகேந்திரனுக்கு மீண்டும் அழைப்பாணை



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன் மகேந்திரனை, பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 19ஆம் திகதி அவரை ஆணைக்குழுவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (இ-7)

# ரயன் ஜயலத் மீள மறியலில்

மருத்துவ பீட மாணவர் செயற்பாட்டுக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் ரயன் ஜயலத்தை மீண்டும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. சுகாதார அமைச்சுக்குள் பலவந்தமாக நுழைந்து அங்குள்ள சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தமை தொடர்பிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட ரயன் ஜயலத்துக்கு மீண்டும் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## தமிழர் என்றாலே...

லேயே அவருக்கு எதிராக இன ரீதியில் குற்றம் சுமத்தப்படுகின்றது என சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு நிதி உதவி வழங்கியுள்ளதாக ஆர். பாஸ்கரலிங்கத்திற்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தனவினால் சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டானது தற்பொழுது சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவிற்கு சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு ஒப்பானது என ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சருக்கு சுட்டிக்காட்டிய போதே அமைச்சர் ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தமிழர் என்றாலே இவ்வாறு இன ரீதியாக வகைப்படுத்துவதே இவர் போன்றோரின் நிலைப்பாடாகும் என தெரிவித்த அமைச்சர், ஒலிவாங்கிக்கு முன்னால் பேசுவதை குற்றச்சாட்டாக எ்டுக்க முடியுமா? எனவும் இவருக்கு எதிராக எங்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது? எனவும் ஊடகவியலாளர்களிடம் வினவினார்.

நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சரிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார. (செ-11)

## அரசின் மொத்த...

கவனத்தில் கொண்டு திறைசேரியினால் வரவுசெலவுத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சுக்கள், மாகாணசபைகள் ஆகியவற்றுடன் மேற்கொள்ளப்பட்ட வரவு செலவுத்திட்ட கலந்துரையாடலின் போது முன்வைக்கப்பட்ட விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைவாக 2018ஆம் நிதியாண்டிற்காக அரசாங்கத்தின் மொத்தசெலவு 3 ஆயிரத்து 982 பில்லியன் ரூபாயாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த தொகையில் அரசாங்கம் திருப்பி செலுத்த வேண்டிய கடன், விதவைகள் அனர்த்த நிதியத்திற்கான நிதி ஆகியன தற்பொழுது பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்கான சட்டத்தின் கீழ் செலவிடப் படவுள்ள தொகை 2005.1 பில்லியன் ரூபாய் என்பதினால் இந்த செலவு தவிர்ந்த இந்த மொத்த செலவில் 1977 பில்லியன் ரூபாயை செலவிடுவதற்காக உத்தேச ஒதுக்கீட்டு சட்ட மூலத்தின் மூலம் அதற்கான அதிகாரத்தை பெற்றுக்கொள்ளவேண்டும்.

இதில் 2018ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் புனர்வாழ்வு செலவாக 1308.9 பில்லியன் ரூபாயும் மொத்த செலவாக 668 பில்லியன் ரூபாயும் மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இவ்வருடத்தில் எதிர்பார்க்கப் பட்டுள்ள அரசாங்க வருமானம் மற்றும் வெளிநாட்டு வருமானத்தை சேர்க்கும் பொழுது அத்தொகை 2175 பில்லியன் ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

2018 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டு சட்ட மூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் பாராளுமன்றத்தின் அனுமதிக்காக நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர அமைச்சரவையில் சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## தீர்ப்பின் பின் மகிந்த...

கடந்த ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக அரச நிதியிலிருந்து 60 கோடி ரூபாயை சீத்தை துணி விநியோகத்திற்காக பயன்படுத்திய குற்றத்தில் மகிந்த ராஜபக்ஷவின் செயலாளரான லலித் வீரதுங்க மற்றும் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் அநூஷ பெல்பிட்ட ஆகியோருக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்குச் சொந்தமான 600 மில்லியன் நிதியை மோசடி செய்தமை தொடர்பிலேயே இருவரும் குற்றவாளிகளாக இனங்காணப் பட்டனர்.

அதனடிப்படையில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட இருவருக்கும் கடும் வேலை உடனான மூன்று வருட கடூழிய சிறை, தலா 20 இலட்சம் அபராதம், தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு தலா 50 மில்லியன் நஷ்ட ஈட்டினையும் செலுத்துமாறு கொழும்பு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் கொழும்பு வெலிக்கடை சிறையில தடுத்துவைக்கப்பட்டுள்ள இருவரையும் பார்த்துவிட்டு திரும்பிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சீத்தை துணிகளை விநியோகம் செய்யுமாறு தாமே உத்தரவிட்டதாகவும், அதற்கான முழுப் பொறுப்பையும் தாமே ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்றையதினம் கண்டி மல்வத்துப்பீட மகாநாயக தேரரை சந்தித்து ஆசிபெற்றுக்கொண்டு திரும்பிய அமைச்சர் துமிந்த திஸாநாயக்க இந்த விவகாரம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டார்.


லலித் வீரதுங்கவை சிறைக்குச் சென்று பார்த்த பின்னர் கருத்து வெளியிட்ட மகிந்த ராஜபக்ஷ, இந்த உத்தரவை பிறப்பித்தது தாமே என்றார். அதனை லலித் வீரதுங்க சிறைக்குச் சென்ற பின்னரா கூறுவது? இந்த வழக்கு இடம்பெறுகையில் மகிந்த ராஜபக்ஷ, லலித் வீரதுங்கவின் சட்டத்தரணி ஊடாக இந்த உத்தரவுகளை வழங்கியது தாமே என்றும், தனது அதிகாரங்களுக்கு உட்பட்டு இந்த உத்தரவை வழங்கியதாகவும் நீதிமன்றத்தில் வைத்து ஒப்புக்கொண்டிருக்க முயன்றிருக்கலாம்.

அதனை செய்யாமல் குறைந்த பட்சம் தீர்ப்பு நாளில் மன்றின் வளாகத்திற்காவது சென்றிருக்கலாம். சிலர் வாக்குமூலம் அளிக்கச் சென்ற தினங்களில் பேருந்துகளில் மக்களை அழைத்து கூட்டங்கூட்டி ஆரவாரத்துடன் சென்றதை கண்டோம்.

ஆனால் குறைந்த பட்சம் உத்தரவை பிறப்பித்தவர் அல்லது இன்று அவருடன் இருப்பவர்களாவது நீதிமன்றத்திற்கு வந்திருக்கலாம். இந்த யதார்த்தத்தை நாட்டு மக்களும் அதேபோல மகிந்த ராஜபக்ஷவுடன் இருக்கின்றவர்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

தனிமையாகும்போது உத்தரவிட்டவரும் வரமாட்டார், அவருடன் இருப்பவர்களும் வரமாட்டார்கள். சிலர் நாட்டிற்காக சிறைக்கும் செல்லத்தயார் என்கின்றனர். அதை கூடச் செய்ய வேண்டாம். தன்னால் சிக்கலில் மாட்டியிருக்கும் நபருக்காக குறைந்தபட்சம் நீதிமன்ற வளாகத்திற்காவது செல்லுங்கள். செய்த குற்றங்களை ஏற்றுக்கொள்ளுங்கள் என அமைச்சர் துமிந்த தெரிவித்துள்ளார். (செ-11)

## மெஸ்சி அசத்தல்; பார்சிலோனா வெற்றி



சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியில் மெஸ்சி அசத்த, பார்சிலோனா அணி வெற்றி பெற்றது:

ஐரோப்பாவில் கழக அணிகளுக்கு இடையில் சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடர் நடக்கிறது.

பார்சிலோனாவில் நடந்த லீக் போட்டியில் யுவான்டாஸ்- பார்சிலோனா அணிகள்மோதின.

போட்டியின் 45ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் நட்சத்திர வீரர் மெஸ்சி முதல் கோல் அடித்தார். தன் பங்கிற்கு ராக்டிக் (56 ஆவது நிமிடம்) பந்தை வலைக்குள் அனுப்ப பார்சிலோனா வலுப்பெற்றது. மீண்டும் மெஸ்சி (69ஆவது நிமிடம்) அசத்தினார். இதற்கு, எதிரணி சார்பில் எவ்வித பதிலடியும் தரப்படவில்லை. முடிவில், பார்சிலோனா அணி 3-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

## மயங்கி வீழ்ந்து...

னாருடன் தங்கி வசித்து வந்த சிறுவன் ஒருவன் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் நேற்று புதன்கிழமை பிற்பகல் 5.45 மணியளவில் மாங்குளம் ஒலுமடு கிராமத்தில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின்போது முள்ளிவாய்க்கால் பகுதியில் எறிகணை வீச்சின் காரணமாக தாயையும், தந்தையையும் இழந்த நிலையில் ஒலுமடு சிங்கன் வீதியில் மாமனாருடன் தங்கியிருந்த சிறுவனான கனகலிங்கம் - பிரதாபன் (வயது-13) என்ற சிறுவனே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

இவர் மு/ஒலுமடு தமிழ் வித்தியாலயத்தில் தரம் 07 இல் கல்வி பயின்று வந்துள்ளார்.

சிறுவனுடைய மாமியார் பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுத்து வர வெளியே சென்றிருந்த நிலையில் வீட்டில் தனித்து இருந்த சிறுவன் வாயினாலும் மூக்கினாலும் குருதி வெளியேறிய நிலையில் திடீரென மயங்கி வீழ்ந்து கிடந்துள்ளார்.

மாமியார் தண்ணீர் எடுத்துக் கொண்டு திரும்பி வந்த போது சிறுவன் மயங்கி இருந்ததைக் கண்டு அயலவர்களின் உதவியுடன் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் சிறுவனைக் கொண்டு சென்று அனுமதித்துள்ளார்.

இதனையடுத்து, சிறுவனை பரிசோதனை செய்த வைத்தியர் ஏற்கெனவே சிறுவன் உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சிறுவன் என்ன காரணத்தால் உயிரிழந்துள்ளான் என்பது தொடர் பில் கண்டறிவதற்காக பிரேத பரிசோதனை நடவடிக்கைகளின் நிமித்தம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைக்கவுள்ளதாக மாங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் இச்சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் பல்வேறு கோணங்களில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-15)

1ம் ஆண்டு நினைவஞ்சலி
நீங்காத நினைவலைகள்



திருமதி
வசந்தராசா தனுஷா

தோற்றம்:-1983.10.24 மறைவு:-2016.08.26

ஓராண்டு எப்படித்தான் சென்றதோ தனுஷா...
அஞ்சி ஒடுங்காமல் பண்புடன் வாழ்ந்ததும்
நெஞ்சம் பொய்க்காமல் உண்மை பேசியதும்
அது ஒரு காலம்
நாம் விதை போட்டு வளர்த்த வம்சத்தின் தல
விருட்சம் - நீ எம் கண்முன்னே நீ எம்மை
விட்டு பிரிந்த போது நாம் அடைந்த துன்
பமும் வேதனையும் கதறிய கத்தலும் இன்னும்
எம் காதினில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.
உன் பிஞ்சு பாலகனாகிய மகன் அம்மா என்று
கூப்பிடும் ஒவ்வொரு கணப்பொழுதும் எம்
நெஞ்சில் இடி வீழ்வது போலிருக்கிறது.
இதனை தாங்கும் சக்தியோ எமக்கில்லை
உள்ளங்கையால் சூரியனை மறைத்திட
முடியாது. அது போல உன் நினைவுகளை
எம் நெஞ்சில் இருந்து நீக்கிவிட முடியாது.
காற்றினை சுவாசிக்கின்றோம்
உயிர் வாழ்வதற்கு - உன்
நினைவுகளை சுமக்கின்றோம்
உன் அன்பிற்காக
இறுதி மூச்சு எமக்கு உள்ளவரை
உன் நினைவுகளுடன் நாம் வாழ்ந்திடுவோம்.
உங்கள் ஆத்ம சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இன்று (14.09.2017) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் சாந்திக் கிரியையும் மதியபோசனமும் நடைபெறும் என்பதனை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்

கவுடாலை வீதி,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி. குடும்பத்தினர்

(C-9635)



# யுவதியைக் கடத்திய நபர் நாட்டுக் குண்டுடன் கைது

யுவதி ஒருவரை கடத்திய பிரதான சந்தேக நபரை நாட்டுக்குண்டுடன் தாம் கைது செய்துள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் அல்வாய் பகுதியைச் சேர்ந்த யுவதி ஒருவர் கடத்தப்பட்டிருந்தார். அதனுடன் தொடர்பான பிரதான சந்தேக நபர் தலைமறைவான நிலையில் இருந்து வந்த நிலையில் நேற்று புதன்கிழமை (13.09.2017) அதிகாலை ஒரு மணியளவில் அல்வாய்ப் பகுதியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவர் அல்வாய் வடக்கைச் சேர்ந்தவர் எனவும் அவரது உடைமையில் நாட்டுத் தயாரிப் பான எறிகுண்டு இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

# காலபோக செய்கை தொடர்பான கூட்டம்

(கரணவாய்)

2017 ஆம் ஆண்டிற்கான காலபோக செய்கை தொடர்பான கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மறவன்புலோ சகல கலா வல்லி வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற இருப்பதால் விவசாயிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மறவன் புலோ கமக்கார அமைப்பின் செயலாளர் க.கந் தையா அறிவித்துள்ளார். (இ-60)

# விக்னேஸ்வரா வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் நாகலிங்கம் கருணாகரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு சுப்பிரமணியம் சுந்தரசிவம்,

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் இரத்தினசிங்கம் ஜெயசேகரன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் உயர்திரு. வீரகத்தி கருணலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# துவிச்சக்கரவண்டி திருடிய குற்றச்சாட்டில் ஐவர் கைது

## இருவர் மறியலில் வைப்பு


துவிச்சக்கரவண்டி ஒன்றைத் திருடி விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஐவர் கைது செய்யப்பட்டதாக காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 11 ஆம் திகதி திங்கட்கிழமை காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீமன் காமம் பகுதியில் வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டி திருடப்பட்டு விற்பனை செய்யப்பட்டு ள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக துவிச்சக்க ரவண்டி உரிமையாளர் காங்கேசன் துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸ் பரிசோதகர் கே.ஓ.பீ. அபேரத்ன துரித நடவடிக்கையை மேற்கொண்டு சம்பவத்துடன் தொடர்புடைய ஐவரை அன்றைய தினமே கைது செய்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஐவரும் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட போது இரு பிரதான சந்தேக நபர்களையும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-7-104)

# மரண அறிவித்தல்



## செல்லப்பா இராமலிங்கம் கந்தசாமி
## (S.R. கந்தசாமி)

(புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தாவும் புங்குடுதீவு முதல் எரிபொருள் நிலைய உரிமையாளரும் கார்கார கந்தசாமி என செல்லமாக அழைக்கப்படுபவரும்)

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 3 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது கனடா அமெரிக்காவை வாழ்விடமாகவும் கொண்ட S.R. கந்தசாமி 11.09.2017 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்- சொர்ணம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு- சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தவமணி தேவியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை, மீனாட்சி மற்றும் செல்லம்மா (U.K) ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, S.N.K. சுந்தரம் மற்றும் இராச லிங்கம் (U.K) ஆகியோரின் மைத்துனரும் சந்திரகுமார் (U.S.A), சந்திரகலா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வி (U.S.A), S.K. சண்முகலிங்கம் (J.P) (ஓய்வு நிலை அதிபர் யாழ். புங்குடுதீவு ஸ்ரீ கணேசா மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்சனா(U.S.A), தர்சன்(U.S.A), குகப்பிரியா (U.K), கலாநிதி சுந்தரவதனன் ( பொறியியலாளர் (U.K), ரஜிதா (ஆசிரியர் யாழ். வண்.நாவலர் மகா வித்தியாலயம்), அதீஸ்சன் (ஆசிரியர், யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி), குருபரன் (பொறியியல் பீட 3 ஆம் வருட மாணவன் , மொறட்டுவ பல்கலைக் கழகம்) ஆகியோரின் பேரனும் அவினியன் (U.K), அபிலாஸ் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அமெரிக்காவில் 14.09.2017 இன்று வியாழக்கிழமை நடைபெறும். அன்னாரின் துக்கநிகழ்வு யாழ்ப்பாணத்தில் திருமதி சந்திரகலா சண்முகலிங்கம் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(348)

தகவல்
கந்தசுவாமி சந்திரகுமார் மகன் (U.S.A)
T.P : 0015167833037
சந்திரகலா சண்முகலிங்கம் (மகள் யாழ்ப்பாணம்)
T.P: 021 222 8722

69, சீனிவாசகம் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## திருமதி .இராஜமாணிக்கம் செந்தில்நாதன்



பிறப்பு:03.01.1934 இறப்பு:11.09.2017

மானிப்பாயை பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையையும் கொழும்பு வெள்ளவத்தையையும் வசிப்பிட மாகவும் கொண்டிருந்த திருமதி இராஜ மாணிக்கம் செந்தில் நாதன் அவர்கள் 11.09.2017 திங்கட்கிழமையன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் யாழ்ப்பாணம் , கொழும்பு பிரபல சட்டத்தரணி W.S செந்தில்நாதனின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான (முகாந்தரம்) தியாகராஜா- திருமதி அன்னம்மா தியாகராஜா தம்பதிகளின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான வைத்திய கலாநிதி திரு.திருமதி சபாபதி செட்டியார் அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான இராஜதுரை, திருமதி புவனசுந்தரம், டாக்டர் . திருமதி ஜெயரட்ணம் மற்றும் திருமதி துரைசிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சேரலாதன் (கனடா), காலஞ்சென்ற பிரகலாதன் மற்றும் தயாபரி ஆகியோரின் அன்புத் தாயாரும் நிரஞ்சன், நந்தகோபனின் அன்பு மாமியும் ஸ்ருதி, சுந்தரரமணன் ஆகியோரின் அம்மம்மாவும் காலஞ் சென்றவர்களான இரட்ணசபாபதி, வைத்தீஸ்வரன் , காந்திமதி, புனிதவதி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 14.09.2017 இன்று வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஈமைக்கிரியைகள் பிற்பகல் 2.30 மணியளவில் ஆரம்பமாகி 5 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக கல்கிசை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வெள்ளவத்தை,
கொழும்பு.

(349)

தகவல்
குடும்பத்தினர்.

# இராசி பலன்

14.09.2017
(ஆவணி 29, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
நவமி முன்னிரவு 09.24 மணிவரை
மிருகசீரிடம் காலை 6.39 மணிவரை
திருவாதிரை பின்னிரவு 05.02 மணிவரை
சுபநேரம் 7.33-9.03 மணிவரை
இராகுகாலம் 01.33-3.03 மணிவரை
மகாவியதீபாதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் கேட்டை | | ராகு, சுக் |
| கேது | | | சூரி, புத, செவ் |
| | சனி | குரு | |

**மேடம்:** சவால்களை சமாளிக்கும் நாள், சகோதரர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**இடபம்:** தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், வியாபார விருத்தியுண்டு.

**மிதுனம்:** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயமாகலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**கடகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள், ஊர் மாற்றம் செய்யும் எண்ணம் மேலோங்கும், சயன சுகம் குறைவான நாள்.

**சிம்மம்:** நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானத்தை அதிகரிக்க முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி:** புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படு வீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள், போசன நன்மையுண்டு.

**துலாம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வெளியூர்ப் பயணங்களால் நன்மையுண்டு.

**விருச்சிகம்:** அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, பிரயாண பயமுண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**தனுசு:** பால்ய நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும், வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு.


**மகரம்:** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.

**கும்பம்:** நட்பு வட்டம் விரிவடையும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மீனம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.

# முறையற்ற இடமாற்றத்தை ஆட்சேபித்து சுகாதார உத்தியோகத்தர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்!

## நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் வந்து யாழில் ஒன்று கூடினர்






யாழ்.மாநகர சபையில் நியமனம் பெற்று பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களாக பணியாற்றிய வேளையில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட முறையற்ற இடமாற்ற உத்தரவினை ஆட்சேபித்து இலங்கையின் சகல பாகங்களிலும் இருந்து வந்த சுகாதார உத்தியோகத்தர்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்றைய தினம் யாழில் முன்னெடுத்திருந்தனர். யாழ். பண்ணைப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டம் பின்னர் பேரணியாக மாறி வட மாகாண சுகாதார அமைச்சின் அலுவலகத்துக்குச் சென்றது. அப்போது பேரணியாகச் சென்றவர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றையும் முன்னெடுத்தனர்.

உள்ளூராட்சித் திணைக்களங்களில் நியமனம் பெற்ற பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களில் ஒரே சபையில் 7 ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கு கடந்த ஆண்டின் இறுதியில் 2017 ஜனவரி முதல் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்ற உத்தரவு சுகாதார அமைச்சு செயலாளரால் வழங்கப்பட்டிருந்தது.

இருப்பினும் உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் பணியாற்றும் சுகாதார உத்தியோகத்தர்களை சுகாதார அமைச்சு இடமாற்றம் செய்ய முடியாது என உத்தியோகத்தர்களும், நியமனம் வழங்கியதே சுகாதார திணைக்களம் என இரு தரப்பினருக்கும் இடையில் நீண்ட சர்ச்சை நிலவியதோடு குறித்த விடயம் நீதிமன்றம் வரை சென்றது.

அதில் யாழ்ப்பாணம் மாநகர சபையில் நியமனம் பெற்று பணியாற்றிய வேளையில் சுகாதார அமைச்சின் ஊடாக ஸ்தாபன விதிக்கு முறையற்ற இடமாற்றம் வழங்கப்பட்டதனைக் கண்டித்து 5 பொதுச்சுகாதார பரிசோதகர்கள் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த 4 மாதங்களாக 5 பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களும் புதிதாக வழங்கப்பட்ட இடத்தில் பணிக்குச் செல்லவில்லை.

இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்ட இடத்தில் பணியை பொறுப்பேற்காத காரணத்தினால் சுயமாக பணியில் இருந்து விலகியதாக கருதப்படுகின்றீர்கள் என வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரால் கடந்த 4 ஆம் திகதி எழுத்து மூலம் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த செயற்பாட்டினை கண்டித்தும் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் ஐவரும் தொடர்ந்து மாநகரசபையிலேயே பணியாற்ற சந்தர்ப்பம் அளிக்கப்பட் வேண்டும் என வலியுறுத்தி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. 18 ஆம் திகதிக்கு முன்னர் இதற்குரிய தீர்வு கிடைக்கவில்லை என்றால் நாடளாவிய ரீதி யில் வேலைநிறுத்த போராட்டம் முன்னெடுக்கப் படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் வந்த சுகாதார உத்தியோகத்தர்கள், துணை மருத்துவ சேவை உத்தியோகத்தர்கள். தாதிய சங்கத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

## இளைஞர் கழகத்துக்கு பிளாஸ்ரிக் கதிரைகள்

### சித்தார்த்தன் எம்.பி. வழங்கினார்



கோண்டாவில், குமர கோட்டம் இளைஞர் கழகத்துக்கு தனது 2017ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூ50,000 பெறுமதியான பிளாஸ்ரிக் கதிரைகளை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் வழங்கினார்.

கடந்த 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில், கோண்டாவில் குமரகோட்டம் இளைஞர் கழகத்தின் தலைவர் செ.பாலகோபனர் மற்றும் இளைஞர் கழகச் செயலாளரும், நல்லூர் தொகுதியின் முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினருமான கி.நிஷாந்தன் ஆகியோரிடம் மேற்படி கதிரைகள் நாடாளுமன்ற உறுப்பினரால் கையளிக்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினருடன், இளைஞர் கழக நிர்வாகிகள், நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி அன்ரன் எழிலரசி யோகநாயகம், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எனப்பலரும் கலந்து கொண்டனர். (இ-7)

## குடத்தனை-வரணியை இணைக்கும் வீதியின் ஒரு பகுதி புனரமைக்கப்படாமல் புறக்கணிப்பு

(கரணவாய்)

குடத்தனையையும் வரணியையும் இணைக்கும் வீதியின் ஒரு பகுதி தொடர்ந்தும் புனரமைக்கப்படாமல் இருப்பது குறித்து பொதுமக்களினால் விசனம் வெளியிடப்பட்டுள்ளது

வடமராட்சி கிழக்கின் குடத்தனையையும் தென்மராட்சியின் வரணியையும் இணைக்கும் இப்பாதை புனரமைக்கப்படாமையால் மாரிகாலங்களில் மாற்றுப் பாதையான வல்லிபுரம் முள்ளி ஊடாகவே பயணம் செய்ய வேண்டும். இரண்டு கிலோ மீற்றரிலுள்ள பகுதிக்கு எட்டு கிலோ மீற்றர் சுற்றியே செல்ல வேண்டும்.

இவ்வீதியில் வரணி பக்கமாக இருந்து ஒரு பகுதி புனரமைக்கப் பட்ட போதும் பாலப்பகுதியில் இருந்து குடத்தனை வரையான பகுதி இதுவரை புனரமைக்கப்படவில்லை

எனவே இது குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது.

(இ-60)

## 2015,2016 ஆம் ஆண்டுக்கான கௌரவிப்பும் பரிசில் வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுமக்கள் முன்னேற்ற ஒன்றியம் மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று G.C.E. (O/L) சித்தி பெற்ற மாணவர்களையும் மண்டைதீவைச் சேர்ந்த மாணவர்கள் வெளியூர்களில் கல்வி பயின்று பல்கலைக் கழக அனுமதி பெற்றிருப்பினும் கௌரவித்து பரிசில் வழங்கத் தீர்மானித்துள்ளது.

அதன்படி 2015 ஆம் 2016 ஆம் ஆண்டுகளில் தகுதியான மாணவர்கள் தங்கள் விபரங்களைத் தத்தமது பாடசாலை அதிபர்களூடாக உறுதிப்படுத்தி ஒன்றியத்தின் காப்பாளருக்கு இம்மாதம் 25.09.2017 இற்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

வெளியூர்களில் பயின்ற மாணவர்கள் பெற்றிருக்க வேண்டிய தகைமைகள் பின்வருமாறு,

2015, 2016 இல் G.C.E. (O/L) - சித்தி பெற்று 9 ஏ/9சி பெற்ற மாணவர்கள் மட்டும்.

2015, 2016 இல் G.C.E. (A/L)- சித்தி பெற்று பல்கலைக்கழகம் சென்றவர்கள் மட்டும்.

2015, 2016 இல் தரம் 5 புலமைப்பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் மட்டும்.

இறுதி முடிவு மக்கள் முன்னேற்ற ஒன்றியத்தின் நிர்வாக சபைக்கே உரியதாகும் என ஒன்றியத்தின் காப்பாளர் வே. ஞானோதரன் அறிவித்துள்ளார். (இ

113

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகளின் கண்டனம்

ஜனாதிபதி மைத்திரி யாழ்ப் பாணத்திற்கு திடீர் விஜயம். மாணவி வித்தியாவின் குடும் பத்திற்கு ஆறுதல் கூறினார் என்ற செய்திகள் அனைத்து ஊடகங்களையும் தன தாக்கிக் கொண்டன.

ஜனாதிபதி மைத்திரியின் யாழ்ப்பாண விஜயம்; வித்தியா வின் குடும்பத்தைச் சந்தித் தமை; யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் மாணவி களுடன் கலந்து ரையாடியமை உள்ளிட்ட விடயங்கள் கொந் தளிப்போடு இருந்த மக்களு க்கு ஆறுதலைக் கொடுத்தது.

ஜனாதிபதி மைத்திரியின் யாழ்ப்பாண விஜயம் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத் தில் வித்தியாவின் பெற்றோ ரைச் சந்தித்து கலந்துரையா டியமை இக்கலந்துரையாட லில் வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன், வட க்கு மாகாண ஆளுநர் பளி கக்கார, ஆளுநரின் செயலா ளர் எல். இளங்கோவன் ஆகி யோர் உடன் இருந்தமை உள்ளி ட்ட செய்திகள் முதன்மை பெற்றுக்கொண்டன.

அதேநேரம் மாணவி வித் தியாவின் படுகொலையைக் கண்டிக்கும் ஆர்ப்பாட்டங்கள் நடந்து கொண்டேயிருந்தன.

## மாணவி வித்தியா கொலை நடந்தது என்ன?

27.05.2015 ஆம் திகதியன்று யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.



திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் எதிர்ப்பு.

இதேபோல இலங்கை ஆசிரியர் சங்கம் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன் பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டது டன் மாணவி வித்தியாவின்படு கொலை தொடர்பில் தனியான குழுவொன்றை நியமித்து வழ க்கை விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைத்தது.




இலங்கை ஆசிரியர் சங்கம் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம்.

கல்முனை நகர சபை மாணவி வித்தியாவின் கொலைக்குக் கண் டனம் தெரிவித்ததோடு உரிய வர்களுக்கு அதியுச்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தையும் நிறைவேற்றியது.

இவை 27.05.2015 இல் நடந்து

இதனிடையே திருகோண மலை, மூதூர், அக்கரைப்பற்று ஆகிய இடங் களிலும் மாணவி வித்தியாவின் படுகொலை தொடர் பிலான கண்டன ஆர்ப் பாட்டங் கள் நடந்தன. திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி, மூதூர் பாரதிபுரம் பெண்கள் அமை ப்பு, அக்கரைப்பற்று கோளா வில் விநாயகர் வித்தியாலய மாணவர்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இவை ஒருபுறம் நடந் தேற முடிய, 28.05.2015 அன்று அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 130 இளைஞர்களையும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் களான மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந் திரன் ஆகியோர் நேரில் சென்று பார்த்தனர்.

யாழ்ப்பாண நீதிமன் றத்தைத் தாக்கினர் என்ற சந்தேகத்தின் பேரில் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 130 பேர் அநுராதபுரம் சிறைச்சா லையில் தடுத்து வைக்கப் பட்டிருந்தமை தெரிந்தமை.

இதேவேளை 19.05.2015, 20.05.2015 ஆகிய இரு தினங்கள் யாழ்ப்பாணத் தில் நடந்த பூரண ஹர்த் தால், ஆர்ப்பாட்டப் பேரணி போன்ற நிகழ்வுகளின் போது யாழ்ப்பாணத்தில் திறந்திருந்த வர்த்தக நிலை யங்களைத் தாக்கியமை, வங்கிகள் மீது கல்லெறிந் தமை உள்ளிட்ட குற்றச் சாட்டுக்களை முன்வைத்து கண்காணிப்புக் கமராவின் (CCTV) உதவியுடன் நான்கு இளைஞர்களை 30.05.2015 அன்று பொலிஸார் கைது செய்தனர்.

19.05.2015 அன்று யாழ்ப்பாணத்தில் மக்கள் சக்தி அமைப்பின் ஏற்பாட் டில் நடந்த கடையடை ப்பு- பூரண ஹர்த்தாலின் போது சில வர்த்தக நிலை யங்களும், வங்கிகளும் திறந்திருந்தன.

காலைப்பொழுதில் அவ்விடத்திற்கு வந்த இனந்தெரியாதவர்கள் கடைகளைத் தாக்கி யதுடன் திறந்திருந்த வங் கிகள் மீது கல்வீசி வங்கிக் கட்டடத்தில் பொரு த்தப் பட்டிருந்த கண்ணாடிக ளைச் சேதப்படுத்தினர்.

இவ்வாறு தாக்குத லில் ஈடுபட்டவர்கள் தங்களை (CCTV) கமராக்கள் கண்கா ணிக்கின்றன என்பதை அறியாமல் இருந்தனர் என்பதும் இங்கு கவனிக் கப்படவேண்டிய விடய மாகும்.

(வளரும்)

-புருசோத்தமன்-

# கிளிநொச்சி விளையாட்டு மைதான புனரமைப்புப் பணிகள் காலதாமதம்

## ஒதுக்கப்பட்ட நிதி திரும்பல்-அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டு



சர்வதேச தரத்துக்கு அமைய பல மில்லியன் ரூபாய் செலவில் 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ வினால் அடிக்கல் நாட்டப்பட்டு, இரண்டு வருடங்களில் பூர்த்தி செய்யப்படும் என கூறப்பட்டிருந்த கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தின் புனரமைப்புப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டு காணப்படுகிறது என பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி நகரின் மத்தியில் பல ஏக்கர் பரப்பளவு கொண்ட காணியில் உள்ளக விளையாட்டரங்கு, நீச்சல் பயிற்சி தடாகம் உள்ளிட்ட பல விளையாட்டுகளுக்குரிய அரங்குகளுடன் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதும், நீச்சல் தடாகம், உள்ளக விளையாட்டரங்கு என்பவற்றின் பணிகள் நிறைவுற்ற நிலையில் ஏனையவற்றின் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படாது காணப்படுகின்றன.

இந்த நிலையில் ஆட்சி மாற்றத்தின் பின்னர் புதிய விளையாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்ற தயாசிறி ஜயசேகர 2015 ஒக்டோபர் 27 ஆம் திகதி கிளிநொச்சிக்கு விஜயம் செய்து விளையாட்டு மைதானத்தை பார்வையிட்ட அவர் விரைவாக நிதி விடுவிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் பூர்த்தி செய்யப்படும் எனவும் 2016 ஆம் ஆண்டுக்கான தேசிய விளையாட்டு நிகழ்வுகள் கிளிநொச்சியில் இடம்பெறும் எனவும் அறிவித்திருந்தார். ஆனால் அவை எதுவும் இடம்பெறவில்லை என பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கிளிநொச்சி விளையாட்டு மைதானத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி 200 மில்லியன் அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக கடந்த மாதம் இடம்பெற்ற கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு, இதே காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட குருநாகல், பொலநறுவை ஆகிய மாவட்டங்களின் மைதானங்களின் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன எனவும் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவில் தெரிவிக்கப்பட்டது.

எனவே குறித்த விளையாட்டு மைதானத்தை இனியும் காலம் தாமதிக்காது விரைவாக புனரமைத்து வழங்குமாறு பொதுமக்கள் சம்பந்தப்பட்டவர்களை கோருகின்றனர். (2-312)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 6,246 பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் அதிகளவானோர் வருமானமின்றி அவதி

## பெண்களுக்கான அமைப்புக்கள் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழுகின்ற சுமார் ஆறாயிரத்து 246 பெண் தலைமத்துவக் குடும்பங்களில் அதிகளவான குடும்பங்கள் தொழில் வாய்ப்பின்றியும் வருமானங்கள் இன்றியும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

ஆறு பிரதேசசெயலாளர் பிரிவுகளைக்கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் 42 ஆயிரந்து 620 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறியுள்ள நிலையில் இதில் ஆறாயித்து 246 பெண் தலைமைத்துக்குடும்பங்கள் வாழ்ந்து வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கடந்த கால யுத்தம், ஆழிப் பேரலை அனர்த்தம், ஏனைய விபத்துக்கள் காரணமாகவும் இதனை விட யுத்த சூழ்நிலையால் பிரிந்து வாழ்வோர், காணாமல்போனோர், எனப்பலதரப்பட்ட வகையில் குடும்பத்தலைவர்களை இழந்த நிலையில் மேற்படி 6 ஆயிரத்து 246 குடும்பங்கள் வாழந்து வருகின்றன.

இதில் 5ஆயிரத்து152 பேர் கணவன்மாரை இழந்த விதவைகளாகக் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

அதாவது கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கீழ் ஆயிரத்து914 பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழ் ஆயிரத்து 729 பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் கீழ் ஆயிரத்து 85 பெண்தலைமைத்துவக் குடும்பங்களும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 719 பெண்தலைமைத்துவக் குடும்பங்களும் மாந்தைகிழக்கில் 462 குடும்பங்களும் வெலிஓயா பிரதேச செயலர் பிரிவின் கீழ் 337 குடும்பங்களுமாக இவ்வாறு ஆறாயிரத்து 246 பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இம்மாவட்டத்தில் உள்ள பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு வீட்டுத்திட்டங்கள், ஏனைய வாழ்வாதாரத் செயற்றிட்டங்கள் வழங்கப்படுகின்ற போதும் அவற்றை வைத்து கணிசமான குடும்பங்கள் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தியிருக்கின்றன.

இருந்தபோதும், சில குடும்பங்கள் வாழ்வாதார நெருக்கடிகளை எதிர்கொள்கின்றன எனவும் இவ்வாறான குடும்பங்கள் நுண்கடன் நிதி நிறுவனங்களை நாடி கடன்களைப்பெற்று அவற்றை அதிக வட்டியுடன் செலுத்துவதில் பெரும் துன்பங்களை எதிர்கொள்வதாகவும் மாவட்டத்திலுள் பெண்களுக்கான அமைப்புக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (2-315)

வன்னி வலம்

# காலபோக நெற்செய்கை தொடர்பான கூட்டங்களின் நேர அட்டவணை

(மல்லாவி)

ஒட்டுசுட்டான்கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழான 2017-2018 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டங்கள் நடைபெறவுள்ள கால நேர அட்டவணையை ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.சற்குணநேசன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய ஒதியமலை கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கு எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஒதியமலை பொதுநோக்கு மண்டபத்திலும், முற்பகல் 11 மணிக்கு பெரியகுளம் கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கு பெரிய குளம் பிள்ளையார் ஆலய மண்டபத்திலும், பிற்பகல் 3 மணிக்கு பழம்பாசி கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கு பழம்பாசி கிராம பொதுநோக்கு மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தண்டுவான் கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கு தண்டுவான் கிராம பொது நோக்கு மண்டபத்திலும், எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்னா கண்டல் கமக்கார அமைப்புக்களிற்குட்பட்ட விவசாயிகளிற்கு மன்னா கண்டல் கிராமத்தில் உள்ள ஐயனார் கோவில் மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

விவசாயிகள் தங்கள் பகுதி குளக் கூட்டங்கள் நடைபெறும் போது தவறாது கலந்து கொள்வதுடன், தங்கள் வரவையும் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குளக் கூட்டங்களின் போது, உரமானியக் கொடுப்பனவு, விதை நெல் விநியோகம், விவசாயக் காப்புறுதி மேற்கொள்வது உட்பட பல்வேறு விடயங்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளதால் விவசாயிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.சற்குணநேசன் அறிவித்துள்ளார். (2-15)



கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா மற்றும் அவரது மனைவி திருனி சின்னையா நேற்று முன்தினம் வரலாற்று சிறப்புமிக்க மன்னார்மடு திருப்பதிக்கு விஜயமொன்றை மேற்கொண்டனர். அங்கு சென்ற அவர்கள் அங்கு வணக்கத்திற்குரிய அருட்தந்தை எமிலியன் பிள்ளையை சந்தித்ததுடன் அனைத்து கடற்படை வீரர்களுக்குமான விசேட வழிபாடுகளையும் மேற்கொண்டனர். மடு தேவாலயத்திற்கான கடற்படைத்தளபதியின் விஜயத்தின் போது வட மத்திய கடற்படை தளபதி றியல் அட்மிரல் விக்கிரமசிங்கவும் உடனிருந்தார். (படங்கள்:-பரந்தன் செய்தியாளர்)

# தேசிய மட்டத்தில் முல்லை. மாணவி முதலாமிடம்

தேசிய மட்ட தமிழ் தின கட்டுரை வரைதல் போட்டியில் முல்லைத்தீவு மாணவி முதலாமிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். கொழும்பு டி.எஸ் சேனநாயக்க கல்லூரியில் தேசிய மட்டத்தில் நடைபெற்ற தமிழ் தினப் போட்டியில் பிரிவு - 2 இல் பங்குபற்றிய முல்லைத்தீவு குமுழமுனை மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த பகீரதன் லாசன்ஜா என்ற மாணவி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (2-250-310)

# மணல் கடத்தலில் ஈடுபட்ட ஐந்து டிப்பர்கள் மாட்டின

## சாரதிகளும் கைதாகினர்

(மல்லாவி)

கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் விசேட முறியடிப்புப் பொலிஸ் படைப் பிரிவினர் சட்ட விரோதமான முறையில் போலியான மணல் வழியனுமதிப் பத்திரத்தை தயாரித்து நீண்ட காலமாக மணல் கடத்தலில் ஈடுபட்டு வந்த 04 டிப்பர் வாகனங்கள், அனுமதிப்பத்திரம் இன்றி ஆற்று மணலை கடத்திச் சென்ற ஒரு டிப்பர் வாகனம் ஆகியவற்றை கைப்பற்றியுள்ளதுடன், சந்தேகத்தின் பெயரில் அதன் சாரதிகள் 5 பேரையும் கைது செய்து நாச்சிக்குடா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 08 மணியளவில் மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு செல்லும் வீதியில் உள்ள பல்லவராயன் கட்டுச் சந்திப் பகுதியில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நீண்ட காலமாக சட்டவிரோதமான முறையில் போலியான வழி அனுமதிப்பத்திரம் தயாரித்து ஆற்று மணல் கடத்தப்படுவதாக கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து, பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் விசேட உத்தரவுக்கு அமைய கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான விசேட முறியடிப்பு பொலிஸ் படைப்பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கருணாரட்னம் ஜெசிந்தன் தலைமையிலான பொலிஸ் அணியினர் மன்னாருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே உள்ள பல்லவராயன் கட்டுச் சந்திப் பகுதியில் விசேட வீதிப் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு இருந்த வேளை சட்ட விரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட போலியான வழியனுமதிப்பத்திரத்துடன் ஆற்று மணலை ஏற்றி பயணித்த 4 டிப்பர் வாகனங்களையும் அனுமதிப்பத்திரம் இன்றி ஆற்று மணலை ஏற்றி பயணித்த 01 டிப்பர் வாகனத்தையும் கைப்பற்றியுள்ளதுடன், சந்தேகத்தின் பெயரில் அதன் சாரதிகள் 5 பேரையும் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவத்தில் கைதான சந்தேக நபர்கள் நாச்சிக்குடா பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ள தாகவும் கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருட்கள் பாரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# விதை நெல்லை வெளி மாவட்டங்களில் இருந்து கொள்வனவு செய்து தாருங்கள்

## பூநகரி விவசாயிகள் கோரிக்கை

காலபோக விவசாயத்திற்கு ஏற்ற வகையில் பூநகரிப் பகுதியில்பருவ மழை பெய்ததால் விவசாயிகள் வயல் நிலங்களை உழுது பண்படுத்துவதிலும் வரம்புகளைக் கட்டும் வேலையிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதேவேளை சென்ற ஆண்டு காலபோக விளைச்சலில் வரட்சி காரணமாக பெரும் பின்னடைவு ஏற்பட்ட நிலையில் இம்முறை விதை நெல்லை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

விதை நெல்லை வைத்திருப்பவர்கள் சிலர் ஒரு மூடை நெல் 5 ஆயிரத்து 300 ரூபா வரை விற்பனை செய்ய முடியும் என தெரிவிக்கின்ற நிலையில் விவசாயிகள் கவலை கொண்டுள்ளதோடு கமநல சேவை திணைக்களம் விவசாயிகளுக்கு தேவையான விதை நெல்லை வெளிமாவட்டங்களில் இருந்து கொள்வனவு செய்து இப் பகுதி விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென கமக்கார அமைப்புக்கள் மூலமாக கோரிக்கை விடப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (2-84)

# ஆறாயிரம் குடும்பங்களுக்கு வரட்சி நிவாரணக் கொடுப்பனவுகள்

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் அறிவிப்பு

(மல்லாவி)

நாட்டில் தற்போது நிலவி வரும் கடும் வரட்சி நிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் அனர்த்த பாதுகாப்பு அமைச்சின் ஊடாக நிதி ஒதுக்கீடு செய்து வரட்சி நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்கி வரும் நிலையில், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் உள்ள அரச உத்தியோகத்தர் குடும்பங்கள் தவிர்ந்த ஏனைய சுமார் 06, ஆயிரம் குடும்பங்களுக்கு வரட்சி நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருவதாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் யதுகுலசிங் - அனுருத்தனன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது நிலவி வருகின்ற கடும் வரட்சி காரணமாக நாடுதழுவிய ரீதியில் மக்களின் நலன் கருதி அரசாங்கம் வரட்சி நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அனர்த்த பாதுகாப்பு அமைச்சின் ஊடாக அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அரசாங்க அதிபர்களிற்கு நிதியை ஒதுக்கியுள்ளது.

இந்த நிவாரண உதவிகளைப் பெற்று வரும் குடும்பங்கள் ஒரு தடவை உதவிப் பொருட்களை பெறும் போது, 05 நாட்கள் தமது கிராமத்தில் உள்ள பொது இடங்களில் சிரமதானப் பணி மேற் கொள்ள வேண்டும்.

இதற்கமைய, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒட்டுசுட்டான் பிர தேச செயலக பிரிவில் உள்ள சுமார் 6ஆயிரம் , குடும் பங்களுக்கு முதலாம் கட்டமாக நிவாரணம் வழங் கப்பட்டுள்ளது.

இதன்போது, 02, அங்கத்தவர்கள் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு 02 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்களும் 2 அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபாவுக்கான உலர் உணவு பொருட்களும் முத்தையன்கட்டு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் 2 கட்டத்திற்குரிய உலர் உணவு பொருட்கள் வழங்கப் படவுள்ளது. இவ்வாறு 6, தடவைகள் உலர் உணவு பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த உலர் உணவு பொருட்கள் விநியோகத்தின் போது சில பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் தரக் குறைவான பொருட்களை விநியோகிப்பதுடன், நிறை குறைவாகவும் விநியோகம் செய்யப்படுவதாக பொதுமக்கள் தரப்பில் இருந்து கிடைக்கப் பெற்ற குற்றச் சாட்டை அடுத்து கிராம அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் அடங்கிய குழுவினர் திடீர் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன், பொது மக்களின் நலன் கருதி நிவாரண பொருட்களை விநியோகம் செய்யும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் வழங்கப்படும் பொருட்களை சரி பார்க்க நிறை அளத்தல்கருவி ஒன்று வைக்கப் படவுள்ளது.

பொதுமக்கள் உடனுக்குடன் தமக்கு வழங்கப்பட்ட பொருட்களை எடை பார்த்து அதனை நிவர்த்தி செய்து கொள்ளுமாறும், இதில் ஏதாவது குழப்பங்கள் காணப்படின் எழுத்து மூலமாக தனக்கு அறியத்தருமாறும் அல்லது தாங்கள் பகுதி கிராம அலுவலருக்கு உடனடியாக தெரியப் படுத்து மாறும் அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# டெங்குநோய் விழிப்புணர்வு செயற்பாடு கிளிநொச்சியில் தொடர்ந்தும் முன்னெடுப்பு

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் டெங்குநோய் விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் டெங்கு நோயின் தாக்கம் காணப்படுகின்றது.

இந் நிலையில் கிளிநொச்சி மாவட்டத்திலேயே இவ்வருட ஆரம்பத்தில் டெங்கு நோய்களின் தாக்கம் அதிகளவில் காணப்பட்டதாக சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியிருந்தனர்.

இதன்படி கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய நான்கு சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட விழிப்புணர்வுச்செயற்பாடுகள் மூலம் நோயின் தாக்கம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இடையிடையே மழை பெய்வதனால் மாவட்டத்தில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்களில் தொடர்ந்தும் விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கரைச்சிப் பிர்தேச செயலர் பிரிவிலேயே அதிக டெங்குநோய் பரவக்கூடிய சூழல்கள் காணப்படுவதாகவும் இப்பகுதியில் தொடர்ந்தும் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கு, சுகாதாரத்துறை சார் அதிகாரிகள் தொடர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை எதிர்வரும் 20ஆம்திகதி தொடக்கம் 26ஆம்திகதி வரைக்கும் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்ற டெங்கு விழிப்புணர்வு வேலைத்திட்டங்களும் மாவட்ட ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளன. இது தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்றதுடன், பிரதேச செயலக மட்டத்திலான கலந்துரையாடல்களும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# வவுனியாவில் பெய்த கடும்மழையினால் சமணங்குளம் வான் பாய்கின்றது



வவுனியாவில் கடந்த இரண்டு நாட்களாக பெய்த கடும் மழை காரணமாக வவுனியா சமணங்குளம் வான் பாய்ந்துள்ளது.

வவுனியாவில் தொடர்ச்சியாக வரட்சி நிலை நீடித்து வந்த நிலையில் குடிநீர்த் தட்டுப்பாடும் நிலவியிருந்தது. இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக இடியுடன் கூடிய கடும் மழை காரணமாக வவுனியா குளங்களின் நீர்மட்டம் அதிகரித்து சமணங்குளம்வான்பாய்கிறது.

இதன் காரணமாக பெரும் போக பயிர்ச் செய்கைக்கு தேவையான நீர் கிடைத்துள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். அத்துடன் குடிநீர் தட்டுப்பாடு நீங்கியுள்ளதாக தெரிவிக்கும் அப்பகுதி மக்கள் சமணங்குளத்தை சுற்றியுள்ள பிரதேசங்களில் நிலத்தடி நீரை பாதுகாப்பதில் குறிப்பிட்ட குளம் பெரும் பங்கு வகிப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். (2-250)

# காலபோக நெற்செய்கை தொடர்பான கூட்டங்களின் கால அட்டவணை

## பூநகரி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவிப்பு


பூநகரி கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கமக்கார அமைப்புகளுக்கான 2017-2018 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டங்கள் நடை பெறவுள்ள கால,நேர அட்டவணையை பூநகரிகமநலசேவை நிலைய கமநலஅபிவிருத்திஉத்தியோகத்தர் மு. இரகுநாதன் அறிவித்துள்ளார்.

அதன் படி மட்டுவில் நாடு கிழக்கு கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகளுக்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கும் கொல்லக் குறிச்சி கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசா யிகளுக்கு முற்பகல் 10.30 மணிக்கும் டிரமன்கிராய் கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகளுக்கு பிற்பகல் 2 மணிக்கும் அந்தந்தப் பகுதிகளில் உள்ள பொது மண்டபத்தில் நடைபெறும் என அவர் அறிவித்துள்ளார்.

ஆதலால் வெளி மாவட்டங்களில் இருக்கும் நெற்செய்கையாளர்களும் தங்கள் காணிகள் அமைந்துள்ள பகுதி கமக்கார அமைப்பின் கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2-84)




# 18 வருடங்களின் பின்னர் முகமாலை தேவாலய திருவிழா



முகமாலை புனித ஆரோக்கிய மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா 18 வருடங்களின் பின்னர் நாளை வெள்ளிக் கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

நாளை பிற்பகல் 4 மணிக்கு கொடியேற்றத்துடன் நவநாள் வழிபாடு ஆரம்பமாகி திருப்பலி நடைபெற்று எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலி நடைபெற்று அன்னையின திருச்சொரூப ஆசீர்வாதம் இடம் பெறவுள்ளது

முகமாலை பகுதி கடந்த காலத்தில் கடும் யுத்தம் இடம்பெற்ற பிரதேசமாக காணப்பட்டது.

யுத்த காலத்தில் யுத்த முன்னரங்க பகுதியாக, சூனியப் பிரதேசமாக இருந்த முகமாலையில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து இன்று வரை முழுமை யாக மீள்குடியேற்றம் நடை பெறாத பிரதேசமாகவும் காணப்படுகிறது.

குறித்த பிரதேசத்தில் அதிகளவில் ஆபத்தான வெடி பொருட்கள் காணப்படுவதோடு, தற்போது கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் நெருக்கடிகளுக்கு மத்தியில் பணியில் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (2-312)



யாழ்ப்பாணம் அகில இலங்கை அரச சாரதிகள் சங்கத் தலைவர் எஸ். சிறிராம்,கிளிநொச்சி மாவட்ட அரச சாரதிகள் சங்கத்தின் தலைவர் எஸ். பிரசன்னா மற்றும் உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக ,அகில இலங்கைஅரச சாரதிகள் சங்கத்தின் உறுப்பினர் யோ. தபேந்திரனின் இரப்பு நன்கொடை காசோலை வழங்கும் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சியிலுள்ள அன்னாரது இல்லத்தில் வைத்து அகில இலங்கை அரச சாரதிகள் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜெயதிலக பத்திரணவினால் சாரதியின் துணைவியிடம் கையளிக்கப்பட்டதை படத்தில் காணலாம்.

# நீதிமன்ற அபராதங்கள்

கிளிநொச்சி முரசுமோட்டைப்பகுதியில் சிறுமி ஒருவரை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கிய சம்பவத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரண்டு சந்தேக நபர்களையும் மேலும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கிளிநொச்சி முரசுமோட்டைப்பகுதியில் சிறுமி ஒருவரை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியதாக குற்றம் சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரண்டு சந்தேக நபர்களையும் கடந்த 11 ஆம் திகதி கிளநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ,ஆனந்தராஜாவின் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது, குறித்த இரண்டு சந்தேகநபர்களையும் மேலும் திர்வரும் 25ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது


◆◆◆◆◆◆◆

கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் மூதாட்டியை வெட்டிக் காயப்படுத்திய சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த படைச்சிப்பாய் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் கடந்த ஏப்ரல் மாதம் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த மூதாட்டி ஒருவரை பற்றைக்குள் இழுத்துச்சென்று கழுத்தில் வெட்டி காயப்படுத்தியதாக செய்யப்பட்ட முறைப்பாட்டை விசாரணை செய்த கிளிநொச்சிப் பொலிஸார் இச்சம்பவம் தொடர்பில் 11.09.2017 அப்பகுதியில் சம்பவ தினத்தன்று கடமையிலிருந்த இராணுவச்சிப்பாயை கைது செய்து கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதவான் அறையில் ஆஜர்படுத்தியதையடுத்து நேற்று முன்தினம் அடையாள அணிவகுப்பிற்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் குறித்த படைச்சிப்பாய் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்ட நிலையில் முறைப்பாட்டாளர் குறித்த சந்தேகநபரை அடையாளம் காட்டாத நிலையில் சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இராணுவச்சிப்பாய் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், எதிர்வரும் 9ம் திகதிக்கு குறித்த வழக்குத்தவணையிடப்பட்டுள்ளது. (2-315)

# கலைத் தரிசனம்



## கலாபூஷணம் கா.தில்லையம்பலம்
### அவர்களுடனான சந்திப்பு

**மனோரஞ்சிதம், குப்பி விளக்கு, அந்தரத்தில் சில பறவைகள், சாவீடு என்பன இவருக்கு புகழீட்டிய சமூக சீர்திருத்த நாடகங்களாகும். இந்த நாடகங்களில் நடித்து பெரும் வரவேற்பைப் பெற்றார். வானம்பாடிகள் வில்லிசைக் குழுவில் 1987 இலிருந்து 1996 வரை பாடி வில்லிசைக் கலைஞனுக்கான சுவடினைப் பதித்தார். அரியாலை காந்தி சனசமூக நிலையத்தினால் அரங்காற்றுகை வேந்தன் என்ற விருதையும் பெற்றார். நடிகராக, நெறியாளராக, வில்லிசைக் கலைஞராக, உடுக்குக் கலைஞராக, சமூக சேவையாளரா,க ஓய்வுபெற்ற கிராம சேவையாளராக எனப் பல்துறைகளில் திகழும் இவர் பாடசாலைக்காலத்தில் சத்தியமே இலட்சியம் என்ற வரலாற்று நாடகத்தில் நடித்து நாடக உலகில் கால்பதித்தார். 1946.03.10 ஆம் திகதி யாழ்ப்பாணம் அரியாலையில் பிறந்த கலாபூஷணம் கா.தில்லையம்பலம் அவர்கள் தன் கலைப்பணி பற்றி மனந்திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகிறது.**

**❖ நீங்கள் கலையுலகுக்குள் எவ்வாறு புகுந்தீர்கள்?**

நான் கற்ற யா/கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயத்தில்வாணி விழாவின்போது சத்தியமே இலட்சியம் என்ற வரலாற்று நாடகத்தில் மக்கள் தலைவனாகப் பாத்திரமேற்று நடித்து பாடசாலை சமூகத்தால் பாராட்டப்பட்டேன். பாடசாலை விடுதி மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வில் ஊருக்கு உபதேசம் என்ற நாடகத்தில் முக்கிய பாத்திரமேற்று நடித்தேன். பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த வேளையில் 1962 இல் எனது ஊரில் காந்தி சனசமூக நிலைய ஆண்டு விழாவின் போது திரு.ச.பஞ்சாட்சரம் அவர்களின் நெறியாள்கையில் கண்டியரசன் நாடகத்தில் ரஞ்சிதபூஷணியாகப் பெண் வேடமேற்று சிறப்பாக நடித்தேன். அந்நாடகத்தைப் பார்த்த அரியாலை பத்மா கலாமன்றத்தின் ஆரம்பகர்த்தா திரு.கதிரேசு பத்மநாதன் தங்கள் நாடக மன்றத்தில் இணைந்து நடிக்க வருமாறு அழைத்தார். நான் அரியாலை பத்மா கலாமன்றத்தில் இணைந்த பின் பல நாடகங்களில் கதாநாயகியாக வேடமேற்று நடித்திருந்தேன். எனது சகோதரி ஒருவரின் மகள் திருமதி பேரின்பநாயகி, திருமதி கணபதிப்பிள்ளை . கனகரத்தினம் அவர்கள் எனது மனைவி தி.புஸ்பராணி ஆகியோர், திருமதி சந்திரிகா கனகரத்தினம் எமது மன்றத்தில் இணைந்து நடிக்க முன் வந்தபடியால் பெண்வேடமேற்கத் தேவை ஏற்படாமற் போயிற்று. அதன் பின் ஆண்வேடமிட்டுப் பல நாடகங்களைச் செய்திருக்கிறேன்.

**❖ தங்களது நெறியாள்கையில் மேடையேற்றிய நாடகங்கள் பற்றி?**

குப்பி விளக்கு நவீன நாடகத்தில் நாயகனாக நானும் திருமதி சந்திரிகா கனகநாதன் நாயகியாகவும் என் மனைவி திருமதி,தி.புஸ்பராணி, திருமதி கணபதிப்பிள்ளை திரு.மார்க்கண்டு கனகநாதன் ஆகியோர் நடித்திருந்தோம். பலரின் பாராட்டைப் பெற்ற நாடகம் இது.

சாவீடுஎன்னும் நவீன நாடகம் எனது நெறியாள்கையில் அரங்கேறிய இன்னொன்று. இந் நாடகம் ஒரு சொந்த வீட்டின் இயல்பான காட்சிகளுடன் ஊமம் நடிப்பு முறையில் அரங்கேறியது.

கோவலன்-கண்ணகி, அரிச்சந்திரா, ஏகலைவன், சாவீடு, குப்பி விளக்கு போன்ற நாடகங்களை எனது நெறியாள்கையில் உருவான நாடகங்களாகக் குறிப்பிடலாம்.

**❖ உங்கள் முன்னோடிகள், வழிகாட்டிகள் பற்றி?**

➢ எனது தந்தையார் பரமு கார்த்திகேசு ஓர் பாரம்பரியக் கூத்து அண்ணாவி-மத்தள அண்ணாவி. தந்தையாரின் சகோதரர்களும் கூத்தாடிகளே. அவர்கள் எமது வீட்டிலேயே கூத்துக்களைப் பழக்கும் போது பார்த்தும் கேட்டும் நாட்டுக்கூத்து ஆட்டமுறைகளையும் கதைவழிக் கூத்தின் பாடல் லயம் பற்றியும் தெரிந்து கொண்டேன். எனது தந்தையார் அண்ணாவியாராக லவகுசன் நாட்டுக்கூத்தை 1968 இல் மேடையில் அரங்கேற்றினார். அக் கூத்தில் சீதையின் பாத்திரமேற்று ஆடிப் பாடி நடித்தேன்.

➢ நாகமுத்து கணபதிப்பிள்ளை அண்ணாவியார்-அரியாலை

இவர் எனது பெரிய தந்தையின் மூத்த மகன். எனக்கு அண்ணாவியார். இவர் அண்ணாவியாராக நடத்திய வீர அபிமன்யு என்ற வடமோடி நாட்டுக் கூத்தில் அபிமன்யுவாகவும் யாகவும் அல்லி அருச்சுணாவில் அல்லியாகவும் நடித்துள்ளேன்.

➢ நா. சின்னத்துரை அண்ணாவியார்- அரியாலை

இவர் நாட்டுக் கூத்து, கதைவழிக் கூத்து, இசை நாடகம் ஆகியவற்றில் வல்லவர். இவர் நாதஸ்வரக் கலைஞர். ஆர்மோனியக் கலைஞரும் கூட. இவரின் சங்கிலியன் வடமோடி நாட்டுக் கூத்தில் சங்கிலியனாக நடித்துள்ளேன். இவரோடு இணைந்து ஏக லைவன் லவகுசன் வட மோடி நாட்டுக் கூத்தில் நடித்துள்ளேன்.

➢ V.K இரத்தினம் அண்ணாவியார் (இசை நாடகம்)- அரியாலை

இவர் பிரபல இசைநாடகக் கலைஞர் திரு. V.V வைரமுத்து ஆகியோரோடு இணைந்து பல ஆயிரம் அரங்குகளில் பெண் வேடமேற்று சந்திரமதியாக, நல்லதங்காளாக, சாவித்திரியாக, வள்ளியாக நடித்துப் பேரெடுத்த மூத்த கலைஞர். இவரின் நெறி யாள்கையில் அரிச்சந்திரா மயான காண்டம் இசை நாடகத்தில் சந்திரமதியாகவும் நந்தனார் இசை நாடகத்தில் நந்தனாகவும் நடித்துள்ளேன்.



➢ கதிரேசு பத்மநாதன் எழுத்தோவியர் -அரியாலை

இவர் நல்ல எழுத்தோவியர். நல்ல நடிகர் தரமான நெறியாள்கையாளர் அரியாலை பத்மா கலா மன்றத்தின் ஆரம்பகர்த்தா . இக் கலாமன்றத்தினூடாக 1968 இல் இருந்து எனது கலைப் பயணத்தைத் தொடர்ந்தேன். இவரோடு இணைந்து லவகுசன், ஒதல்லோ, சாணக்கிய சபதம் ஆகிய நாடகங்களில் நடித்துள்ளேன்.

➢ நாகமுத்து -பரமசாமி - பாடசாலை அதிபர் அரியாலை

இவர் எனது பெரியதந்தையாரின் இளைய மகன். எனது அன்பான அண்ணர். இவர் நாடக எழுத்தாளர்.கவிஞர், நடிகர் .பத்மா கலா மன்ற நெறியாள்கையாளர், பாடகர், ஆலய ஓதுவார், கதா பிரசங்கம் செய்பவர், இவர் லவகுசன் நாட்டுக் கூத்தில் இராமனாகவும் நான் சீதையாகவும் கூத்தாடியுள்ளோம்.

➢ ச. மார்க்கண்டு அண்ணாவியார் - அரியாலை

இவர் வட மோடி நாட்டுக் கூத்து, கதைவழிக் கூத்து , விலாசநாடகம், மரபு வழி இசை நாடகம், சமூக நாடகம் எனப் பல்கலை வல்லவர். இவரின் நாட்டுக் கூத்துக்களான கண்டியரசனில் கண்டியரசனாகவும் ஏகலைவனில் துரோணராகவும் நடித்துள்ளேன்.

➢ சின்னையா அண்ணாவியார்- அரியாலை

இவர் வட மோடி நாட்டுக் கூத்து, கதை வழிக் கூத்து, இசை நாடகம் ஆகியவற்றில் விற்பன்னர். அவரது தாடகை வதம் நாட்டுக் கூத்தில் இலட்சுமணனாகவும் பவளக் கொடி கதை வழிக் கூத்தில் பவளக் கொடி சிலம்பின் வெற்றி என்ற கோவலன் கண்ணகியில் கண்ணகியாக நடித்துள்ளேன்.

➢ குழந்தை சண்முகலிங்கம் - நவீன நாடகமுன்னோடி

இவர் 1979 இல் திருநெல்வேலியில் நடத்திய நாடக அரங்கக் கல்லூரியில் நாடகம் பயின்றேன். திருவாளர் தாசீசியஸ், பேராசிரியர் மௌனகுரு, கலைப் பேரரசு A.T. பொன்னுத்துரை, ஆசிரியர் திருச் செல்வம் ஆகியோரிடம் நாடகம் பற்றிப் பயின்றேன்.

➢ சண்முகம் பஞ்சாட்சரம் -கலா பூஷணம் – அரியாலை

எனது கிராமத்தில் எனது முதல் நாடகமான புதையல் சினிமாப்படத்தில் அமைந்த கண்டியரசன் நாடகத்தை நெறியாள்கை செய்தவர். இந் நாடகத்தில் ரஞ்சிதபூசணியாக வேடமேற்று நடித்தேன். கண்டியரசனாக வேலுப்பிள்ளை நவரத்தினம் (மாஸ்டர் நவம்) அவர்கள் நடித்தார்.

**❖ உடுக்கு, வாத்தியம் இசைப்பது பற்றி கூறுங்கள்?**

எனது தந்தையார் உடுக்கு, மத்தளம் ஆகிய தோல் வாத்தியங்களை கூத்துப் பழக்குவதற்காக வைத்திருந்தார். அவற்றை நானும் பழகியிருந்தேன். உடுக்கு வாத்தியம் கதை வழிக் கூத்து ( சிந்துநடை) க்கு இசைக்கப்படும். காத்தான் கூத்து, அல்லி அருச்சுனா, பவளக் கொடி, கோவலன் கண்ணகி, புலந்திரன் கனவு, நல்லதங்காள். போன்றவை கதை வழிக் கூத்துக்களாக இருக்கின்றன. பாடசாலைகளுக்கிடையேயான நாடகப் போட்டிகளுக்கு உடுக்கு இசைத்துள்ளேன். யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாட சாலை மாணவர்கள் நடித்த காத்தவராயன் சிந்து நடை கூத்து வீடியோ செய்யப்பட்டது. அதற்கு நான் உடு க்கு இசைத்துள்ளேன். அந்த ஒளி நாடா வெளியீட்டு விழாவின் போது என்னையும் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள்.

**❖ கலையுலகில் பெற்ற விருதுகள்?**

கலாபூஷணம்-2014, கலை ஞானச் சுடர்-2014, அரங்காற்றுகை வேந்தன்- அரியாலை காந்தி சனசமூக நிலையம்.

**❖ சான்றிதழ்கள்**

1.நல்லூர் பிரதேச செயலகத்தால் 2011 இல் நடத்தப்பட்ட இசை நாடகப் போட்டியில் முதலிடம் பெற்ற அரிச்சந்திராவில் அரிச்சந்திரனாக

2.நல்லூர்ப் பிரதேச செய லகம் 2011 இல் நடத்திய நாட்டுக் கூத்துப் போட்டியில் இரண்டாமிடம் ஏகலைவன் அருச்சுனனாக

3. நல்லூர்ப் பிரதேச செயலகம் 2011 இல் நடத்திய சிந்து நடைக் கூத்துப் போட்டியில் மூன்றாம் இடம் சிலம்பின் வெற்றி கோவலனாக

4. 2008 இல் நல்லூர் பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய கலாசார விழாவில் சிறப்பு நாடகமாக அரங்கேறிய மாவீரன் சங்கிலியன் தென்மோடி நாட்டுக் கூத்தில் சங்கிலியனாக நடித்தமையைப் பாராட்டி வழங்கிய சான்றிதழ்

**❖ தங்கள் கலையுலகில் மறக்க முடியாத சம்பவம்?**

1969 இல் லவகுசன் நாட்டுக் கூத்து நடை பெற்றுக் கொண்டிருந்த போது சில விசமிகளின் செயலால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. ஒரு மணி நேரத்தின் பின்னர் மின்னிணைப்பு ஏற்படுத்திய போது ரசிகர்கள் அமைதியாக இருந்து கூத்து முடியும் வரை பார்த்தார்கள் என்றால் அப்போது கலாரசனை அவ்வாறிருந்தது.

**❖ தங்கள் வில்லிசைக் கலை பற்றிக் கூறுங்கள்?**

உடுப்பிட்டியூர் வியாகேசு யோகராசா ஆசிரியரின் வானம்பாடிகள் வில்லிசைக்குழுவில் 1987 இலிருந்து 1996 வரை பாடி உடுக்கு வாத்தியம் இசைப்பவராக இருந்துள்ளேன். நான் கரவெட்டி கிழக்கில் கிராம அலுவலராக கடமையாற்றிய போது கரவெட்டி கிழக்கில் வசித்த வில்லிசைக் கலைஞர் யோகராசா ஆசிரியர் என்னைச் சந்திக்க வந்தார். தனது வில்லிசை பற்றியும் கூறினார். நானும் என் கலைப்பணிகளைப் பற்றித் தெரிவித்தேன். பாடச் சொன்னார் பாடினேன். என்னை வில்லிசைக் குழுவில் இணைத்துக் கொண்டார். அவரது குழுவில் இணைந்து வடமராட்சி முழுவதும் வில்லிசை செய்திருக்கின்றோம். அவரது குழுவில் பெற்ற அனுபவத்தைப் பயன் படுத்தி சீதனம் வேண்டாம் என்ற வில்லுப்பாட்டை தயாரித்து நான் அரியாலையில் அரங்கேறியுள்ளேன்.

**❖ தற்போது கலைஞர்களுக்கு நீங்கள் கூற விரும்புவதென்ன?**

கலைத்துறையில் ஈடுபடுவதற்கு இளைஞர்கள் முன்வருவது மிகக் குறைவு.

அனுபவம் மிக்க பழைய கலைஞர்கள் ஒன்றிணைந்து ஓர் செயற்படக் கூடிய கலை நிறுவனத்தை நிறுவி அதனூடாக இளைஞர்களை ஊக்குவித்து எமது கலையை வளர்க்க முன்வந்தால் எமது கலை, கலாசாரம் பாதுகாக்கப்படும் என நம்புகிறேன்.

நேர்காணல்:
ஜெயம் ஜெகன்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




## செல்வி. பகீரதன் லாசன்ஜா

அகில இலங்கைப் பாடசாலைகளுக் கிடையிலான தமிழ்மொழி கலைத்திறன் போட்டியில் தேசிய மட்டத்தில் பிரிவு 2 கட்டுரைப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்று எமது பாடசாலைக்கும் முல்லைத்தீவுக் கல்வி வலயத்துக்கும் பெருமை தேடித்தந்த மாணவி. செல்வி. பகீரதன் லாசன்ஜா அவர்களையும் அவருக்கு பயிற்சியளித்த திரு ச.சந்திரசேகர் (ஆசிரியர்), திருமதி ந.பாலநாதன் (ஆசிரியை) ஆகியோரையும் மனமுவந்து பாராட்டுகின்றோம்.

தொடரட்டும் சாதனைகள்!

பாடசாலைச் சமூகம், மு/குமுழமுனை மகா வித்தியாலயம், முல்லைக்கல்வி வலயம்.

347

# இரு பெண்கள் விமான நிலையத்தில் கைது

டுபாயில் இருந்து 7.8 கிலோகிராம் தங்க நகைகளை இலங்கைக்கு கடத்தி வர முற்பட்ட இரு பெண்களை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் நேற்றுகைதுசெய்துள்ளனர்கைது செய்யப்பட்ட இரு வரும் இலங்கையர்கள் எனத் தெரிவிக்கும் சுங்க அதிகாரிகள் அவர்களிடமிருந்துகைப்பற்றப்பட்ட தங்க நகைகளின் பெறுமதி சுமார் 40 மில்லியன் ரூபா வெனத் தெரிவித்தனர்.

குறித்த இரு பெண்களும் தங்க நகைகளை இடுப்புப் பட்டிகளுக்குள் மிகவும் சூட்சும மாகமறைத்துவைத்துக்கொண்டுவரும் போது சோதனையிட்ட சுங்க அதிகாரிகள் தங்க நகைகளுடன் குறித்த இரு வரையும் கைதுசெய்தனர். கைதுசெய்யப்பட்ட இரு பெண்களிடமும் விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: B/7766 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 33<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/7760 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 34செவ் 8 இல்<br>உயரம்: 6'2"தகைமை/<br>தொழில்:Diploma/கனடா<br>தொ.இ: B/7767 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 51<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/7778 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: சூரிசெவ் 2 இல்<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/7768 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 5சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/7779 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 51செவ் 4 இல்<br>உயரம்: 174cm<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில்<br>தொ.இ: B/7769 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 19செவ் 7 இல்<br>உயரம்: 5'4"தகைமை/<br>தொழில்:வைத்தியர்<br>தொ.இ: G/7788 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# பருத்தித்துறை பிரதேச சபை மீள்கேள்வி அறிவித்தல்கள்

மேற்படி விடயம் தொடர்பில் பின்வரும் விபரங்களுக்கு அமைவாக துவிச்சக்கரவண்டி மற்றும் வாகன பாதுகாப்பு நிலையங்களை குறித்த காலப்பகுதியில் நடாத்துவதற்கு பொருத்தமானவர்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1.வல்லிபுர ஆழ்வார் கோவில் வருடாந்த மஹோற்சவம் - 2017 இன் போது 20.09.2017 தொடக்கம் 06.10.2017 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கீழே விபரிக்கப்பட்ட இடங்கள்

| நிலைய இல. | நிலையம் அமைந்துள்ள இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கமுடியாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|---|---|
| 01 | ஆலய சுற்றாடலில் பருத்தித்துறை மருதங்கேணி வீதியில் கோவிலுக்கு வடக்குப்புறம் | 128,700.00 | 200.00 | 1000.00 |
| 02 | முறாவில் வீதியில் குருக்கட்டு பிள்ளையார் கோவிலுக்கு வடக்குப்புறம் | 19,350.00 | 200.00 | 1000.00 |
| 03 | ஆலய சுற்றாடலில் பருத்தித்துறை மருதங்கேணி வீதியில் கோவிலுக்கு தெற்குப்புறம் | 61,740.00 | 200.00 | 1000.00 |

2.நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் -2017 இன் போது 06.10.2017 தொடக்கம் 10.10.2017 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கீழே விபரிக்கப்பட்ட இடம்

| நிலைய இல. | நிலையம் அமைந்துள்ள இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கமுடியாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|---|---|
| 01 | ஆலய சுற்றாடல் நாகர்கோவில் | 12,870.00 | 200.00 | 1000.00 |

1.கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:- 14.09.2017 தொடக்கம் 19.09.2017 மு.ப 10.00 மணி

2.கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி:- 19.09.2017 நண்பகல் 12.00 மணி

3.கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி:- 19.09.2017 நண்பகல் 12.30 மணி

கேள்வி நிபந்தனைகள்:-

1.கேள்விப்படிவங்களை அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வல்லிபுர ஆழ்வார் ஆலய துவிச்சக்கரவண்டி, வாகன பாதுகாப்பு நிலைய கேள்விப்படிவங்களை பிரதேசசபை, புலோலி உபஅலுவலகத்திலும் நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய துவிச்சக்கரவண்டி, வாகன பாதுகாப்பு நிலைய கேள்விப்படிவங்களை பிரதேசசபை, குடத்தனை உபஅலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளமுடியும்.

2.கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தபால் உறையில் இடப்பட்டு உறையினது இடது பக்க மேல் மூலையில் கேள்வி விபரம் தெளிவாக எழுதப்படுவதுடன் தபால் உறைக்கு அரக்கு முத்திரையிட்டு ஒரு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். மறுபிரதியை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் ஊடாகவோ உரிய காலப்பகுதிக்குள் அனுப்பப்படல் வேண்டும்.

3.கேள்வி திறத்தலின் போது கேள்விகாரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ சமுகமளிக்கமுடியும்.

4.இது விடயமான மேலதிக விபரங்கள், ஏனைய நிபந்தனைகளை காரியாலயத்திலும் சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களிலும் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சி.சிறியாலங்கரன், செயலாளர்.
பருத்தித்துறை பிரதேச சபை. புலோலி. 13.09.2017

( பி-9627)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித் தேவைகளை அடையாளப்படுத்தல், முன்னுரிமைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை ஸ்ரீசண் முகானந்தா வித்தியாலயம் முன்பாகவுள்ள கல்வியல் பொது நோக்கு மண்டபத்திலும் நாளை வெள்ளிக்கிழமை கோவிற்குடியிருப்பு விகோரியார் பொதுநோக்கு மண்டபத்திலும் பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற செயலாளர் கா.சண்முகநாதன் தலைமையில் இடம்பெறும். (இ-7)

# ஐம்பதிலும் ஆசைவரும் கானமும் காட்சியும்

(யாழ்ப்பாணம்)

குபேரகா கலைக் கல்லூரி முதியோர் தினத்தை முன்னிட்டு 50 வயதிற்கு மேற்பட்ட கலைஞர்களுக்கு நடத்தும் "ஐம்பதிலும் ஆசைவரும்" காட்சியும் கானமும் போட்டி எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார்மடத்தில் அமைந்துள்ள வட இலங்கை சங்கீத சபையில் இடம்பெறவுள்ளது. (இ-3)

# கனகரத்தினம் சுவாமிகளின் குருபூசை

ஸ்ரீசிவகுருநாத பீட மகாதேவா சுவாமிகள் ஆச்சிரமம் ஸ்ரீமத் கனகரத்தினம் சுவாமிகளின் குருபூசை இன்று முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும். (இ)


# ஏல விற்பனை

இடம்: யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்
காலம்: வியாழக்கிழமை 28.09.2017
நேரம் :- முற்பகல் 10 மணி
ஏலவிற்பனை பொருட்களும் கூறுகளும்
Head set 01, H.P.2400 Scanner 01, Electro Phones- 01, type writer (Tamil) 02, Photo copy Machine 01, O.H.P -01, மண்வெட்டி வகை 09, குடு 01, தளபாட வகைகள்- 33
அதிபர்

# பாரதம்

# நீட் தேர்வுக்கு எதிராக தி.மு.க. தலைமையில் மாபெரும் போராட்டம்

(சென்னை)

நீட் தேர்வை எதிர்த்து நேற்று தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் தி.மு.க. சார்பில் போராட்டம் நடைபெற்றது. இப்போராட்டத்தில் எதிர்க்கட்சி தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.



மருத்துவப் படிப்புக்கு மாணவ - மாணவிகளை தேர்வு செய்ய 'நீட்' எனும் தேர்வை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது.

இந்த தேர்வுக்கு மத்திய பாடத்திட்டத்தில் இருந்தே கேள்விகள் கேட்கப்பட்டன. இதனால் தமிழ்நாட்டில் மாநில பாடத்திட்டத்தில் படித்த மாணவ-மாணவிகள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக தமிழ்நாடு முழுவதும் மாணவர்கள் மத்தியில் 'நீட்' தேர்வு வேண்டாம் என்ற கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. 'நீட்' தேர்வை இரத்துச் செய்ய கோரி தமிழகம் முழுவதும் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் நீட் தேர்வை எதிர்த்து இரண்டாம் கட்டமாக தமிழகம் முழுவதும் 13 ஆம் திகதி மாவட்ட தலைநகரங்களில் அனைத்துக் கட்சிகள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று ஸ்டாலின் அறிவித்தார்.

இதற்கிடையே நீட் தேர்வை எதிர்த்து போராட்டம் நடத்தக் கூடாது என்று உச்ச நீதிமன்று உத்தரவிட்டதால் அமைதி வழியில் மக்களுக்கு இடையூறு ஏற்படாத படி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட வேண்டும் என்று மு.க. ஸ்டாலின் அனைத்துக் கட்சியினருக்கும் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அதன்படி நேற்று புதன்கிழமை தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் அனைத்து கட்சியினரின் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தாம்பரம் சண்முகம் வீதியில் காஞ்சி வடக்கு மாவட்டச் செயலாளர் தா.மோ. அன்பரசன் எம்.எல்.ஏ. தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று கண்டன உரையாற்றினார்.

இதில் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தீர்மானக் குழு உறுப்பினர் வைத்தியலிங்கம், ஏராளமான மாணவர்கள் உட்பட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.

ஆதம்பாக்கம் அம்பேத்கர் திடலில் சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் நல்லக்கண்ணு உட்பட ஏராளமான கட்சி நிர்வாகிகளும் 2 ஆயிரம் மாணவர்களும் பங்கேற்றனர்.

சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் ஜெ. அன்பழகன் தலைமையில் வள்ளுவர் கோட்டம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் தி.மு.க. மகளிரணி செயலாளர் கனிமொழி எம்.பி., தமிழக காங்கிரஸ் தலைவர் திருநாவுக்கரசர் உட்பட ஆயிரக்கணக்கானோர் இதில் பங்கேற்றனர்.

சென்னை கலெக்டர் அலுவலகம் அருகே கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. (8)

# குடகு விடுதியில் தமிழக பொலிஸ் விசாரணை

கர்நாடக மாநிலம் குடகில் உள்ள தனியர் விடுதியில் டி.டி.வி. தினகரன் ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் தங்கியிருக்கும் விடுதியில் தமிழக பொலிஸ் அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

கோவை பதிவெண் கொண்ட வாகனங்களில் சென்ற தமிழக பொலிஸ் அதிகாரிகள் சுமார் 20 பேர் இந்த விசாரணையை தொடங்கி உள்ளனர்.

தினகரன் ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் சுய விருப்பத்தின்பேரில் தங்கியிருக்கிறார்களா? கட்டாயப்படுத்தி அடைத்து வைக்கப்பட்டுள்ளார்களா? என விசாரித்து வருகின்றனர். (8)

# பிரான்சில் போராட்டங்கள் வெடித்தது

ஜனாதிபதி மேக்ரானின் தொழிலாளர் சட்டத்தின் புதிய சீர்திருத்தங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரான்ஸின் பல்வேறு பகுதிகளில் பெரியளவில் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான் வேலையில்லா திண்டாட்ட பிரச்சினையை நாட்டில் குறைக்கும் முயற்சியாக தொழிலாளர் சட்டத்தில் சீர்திருத்தங்களை கொண்டு வந்துள்ளார்.

அதன்படி, சிறிய நிறுவனங்கள் தொழிற்சங்க கிளைகளுக்கு பதிலாக தனிப்பட்ட ஊழியர்களுடன் இனி பேச்சுவார்த்தை நடத்த முடியும்.

இதற்கு பல்வேறு தரப்பிலிருந்து எதிர்ப்பு கிளம்பியுள்ள நிலையில், பிரான்ஸின் மிகப் பெரிய தொழிற்சங்கமான CGT சார்பில் பாரீஸ், ரினீஸ், லியோன், மெர்ஸிலிஸ் போன்ற பல பகுதிகளில் பெரியளவில் போராட்டங்கள் நடந்தன.

இதில் சிவில் ஊழியர்கள், ரயில்வே தொழிலாளர்கள், மாணவர்கள் என பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டார்கள்.

பதாகைகள் மற்றும் நெருப்பு புகை அடங்கிய சிறிய குழாய்களையும் போராட்டக்காரர்கள் கையில் ஏந்தியிருந்தனர்.

பல இடங்களில் பொலிஸாருடன் போராட்டகாரர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மெர்ஸிலிஸ் மட்டும் 60,000 பேர் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தண்ணீரை பாய்ச்சி அடித்தும், கண்ணீர்ப்புகை வீசியும் போராட்டத்தை கலைக்க பொலிஸார் முயன்றனர்.

CGT செயலாளர் Olivier Mateu கூறுகையில், தொழிலாளர் சட்டத்தின் புதிய திருத்தங்கள் குறித்து அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும், இது பலரை கவலையடைய செய்துள்ளது.


புதிய சட்டமானது தொழிலாளர் சட்டம் போல இல்லாமல் முதலாளிகளுக்கு முழு அதிகாரம் கொடுக்கும் சட்டம் போல உள்ளது என கூறியுள்ளார். (8)

# நவோதயா பள்ளிகளை அனுமதிக்கக் கூடாது

## தமிழக அரசுக்கு வைகோ வலியுறுத்து

(சென்னை)

ஹிந்தியை திணிக்க மத்திய அரசு முயற்சி செய்வதாகவும், தமிழகத்தில் நவோதயா பள்ளிகளை அனுமதிக்கக் கூடாது என்றும் வைகோ தெரிவித்துள்ளார்.



ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

"தமிழகத்தில் நவோதயா பள்ளிகள் அமைக்க அனுமதி அளிக்க வேண்டும், மாவட்டந்தோறும் 30 ஏக்கர் நிலம் ஒதுக்கித்தர வேண்டும், 8 வாரங்களுக்குள் தடையில்லா சான்றிதழ் வழங்குவதுடன், நவோதயா பள்ளிகள் அமைக்கத் தேவையான உட்கட்டமைப்புகளை அமைத்துத் தர வேண்டும்" என்று தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றின் மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.

நவோதயா பள்ளிகள் தொடர்பான வழக்கில் தமிழக அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், தமிழகத்தில் போதிய கல்வி வசதிகள் உள்ளன. மாநில பாடத்திட்டம், மத்திய பாடத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு பாடத்திட்டங்களை கற்பிக்கும் கல்வி நிறுவனங்கள் அதிக அளவிலுள்ளன. இதனால் தமிழகத்துக்கு நவோதயா பள்ளிகள் தேவையில்லை என்பது கொள்கை முடிவாகும் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.


இதே நிலைப்பாட்டில் தமிழக அரசு உறுதியாக இருக்க வேண்டும். சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்வதற்கு முன்வர வேண்டும்.

டில்லி பா.ஜ.க. அரசின் ஹிந்தித் திணிப்பு மற்றும் சமஸ்கிருத மொழி ஆதிக்கத்திற்கு எடப்பாடி பழனிச்சாமி அரசு பலியாகிவிடக் கூடாது என்று வலியுறுத்துகிறேன் என்று அவர் தெரிவித்தார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவனும் இவ்வாறானதொரு கருத்தை உள்ளடக்கி அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)

# எம்.ஜி.ஆர். உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயம் வெளியீடு

## மத்திய அரசின் முடிபு இது



எம்.ஜி.ஆர். நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை சிறப்பிக்கும் வகையில் அவரது உருவம் பொறித்த 100 மற்றும் 5 ரூபாய் நாணயங்களை மத்திய அரசு வெளியிடுகிறது.

மக்கள் செல்வாக்குப் பெற்ற தலைவர்களை கௌரவிக்கும் விதமாக அவர்களது உருவம் பொறித்த தபால் தலைகள் மற்றும் நாணயங்கள் வெளியிடப்படுவது வழக்கம்.

அதன் அடிப்படையில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். மற்றும் இசை உலகில் கொடிகட்டிப் பறந்த எம்.எஸ்.சுப்புலட்சுமி ஆகியோரின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை சிறப்பிக்கும் வகையில் அவர்களது உருவம் பொறிக்கப்பட்ட நாணயங்கள் வெளியிடப்படவுள்ளன. இது பற்றிய அறிவிப்பை மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் 100 ரூபாய் நாணயங்கள் முதல்முறையாக புழக்கத்துக்கு வர இருக்கிறது. அந்த நாணயங்களில் தமிழகத்தைச் சேர்ந்தவர்களின் உருவங்களே முதன் முதலாக இடம்பெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய நாணயங்கள் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (8)

# வெளிநாடு



# கனரக வாகனத்துடன் வான் மோதி விபத்துக்குள்ளாது

## பாகிஸ்தானில் 14 பேர் உடல் கருகிப் பலி



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் ட்ரெய்லருடன், சற்றும் எதிர்பாராத வகையில் வான் பயங்கரமாக மோதிய விபத்தில் 3 குழந்தைகள் உட்பட 14 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர்.

பாகிஸ்தான் இராணுவ தலைநகர் ராவல்பிண்டி சாக்ரி இன்டர்சேஞ்ச் அருகே, நேற்று முன்தினம் ஒரு பயணிகள் வான் வந்து கொண்டிருந்தது. அப்போது அந்த வழியே வந்த ஒரு ட்ரெய்லருடன், சற்றும் எதிர்பாராத வகையில் அந்த வான் பயங்கரமாக மோதியது. மோதிய வேகத்தில் அந்த வான் தீப்பற்றி எரிந்தது. உடனடியாக தீயணைப்பு படையினர், விரைந்து வந்து, தண்ணீரை அடித்து தீயை அணைத்தனர்.

இருப்பினும் இக்கோர விபத்தில் 3 குழந்தைகள் உட்பட 5 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். படுகாயம் அடைந்த மற்றவர்கள் மீட்கப்பட்டு இஸ்லாமாபாத்தில் உள்ள பாகிஸ்தான் வைத்தியக்கல்லூரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அங்கு தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி 9 பேர் இறந்தனர். 3 பேர் மேல் சிகிச்சைக்காக ராவல்பிண்டி இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

இக்கோர விபத்தில் இறந்தவர்களின் உடல்கள் அடையாளம் காண முடியாதபடிக்கு கரிக் கட்டைகளாகி விட்டன. அவற்றுக்கு மரபணு பரிசோதனை செய்து அடையாளம் காணப்படும் என தகவல்கள் கூறுகின்றன. வானில் சி.என்.ஜி. கியாஸ் சிலிண்டர் பொருத்தி இருந்ததால் தான் தீப்பற்றி எரிந்ததாக முதல் கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் வான் சாரதி ஆசிப், தூங்கியதால்தான் கட்டுப்பாட்டை இழந்த வான் தாறுமாறாக ஓடி, ட்ரெய்லருடன் மோதியதாக பொலிஸ் தரப்பினர் கூறுகின்றனர். பாகிஸ்தானில் 2011ஆம் ஆண்டு முதல் ஆண்டுக்கு 9 ஆயிரம் வீதி விபத்துக்கள் நேர்வதாகவும், அவற்றில் சராசரியாக 4 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் உயிர்ப்பலி ஆகி வருவதாகவும் தகவல்கள் கூறுகின்றன. (8)

# ஐ.நாவின் எந்த தடையையும் நாம் ஏற்கப்போவதில்லை

## மிடுக்குடன் வடகொரியா அறிக்கை



அணுகுண்டு சோதனை நடத்தியதற்காக ஐ.நா. சபை சில தடைகளை விதித்துள்ள நிலையில், எந்த தடையையும் ஏற்கப்போவதில்லை என வடகொரியா தெரிவித்துள்ளது. வடகொரியாவின் நிலக்கரி, கனிமப் பொருள் மற்றும் கடல் உணவுகளை ஏற்றுமதி செய்வதற்கு தடைவிதிக்கும் வகையில் திருத்தங்களுடன் கூடிய தீர்மானத்தை அமெரிக்கா தாக்கல் செய்தது.

அமெரிக்காவின் இந்த தீர்மானம் சீனா மற்றும் ரஷ்ய ஆதரவுடன் ஒருமனதாக பாதுகாப்பு கவுன்சிலில் நிறைவேறியது. ஏற்கனவே, பலமுறை வடகொரியாவுக்கு எதிராக பல தீர்மானங்களை ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் நிறைவேற்றியது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஐ.நா.வின் தடைகளுக்கு பதிலளித்துள்ள வடகொரிய தூதர் ஹான் டே சாங், "சமீபத்தில் ஐ.நாவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் சட்டவிரோதமானது. இதற்கு கடுமையான கண்டனங்களை தெரிவித்துக்கொள்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, பெற்றோலியப் பொருட்களுக்கு தடை மற்றும் கிம் ஜாங் உன் சொத்துக்கள் முடக்கம் ஆகிய அம்சங்கள் இடம் பெற்ற அமெரிக்காவின் தீர்மானம் நிறைவேறினால் அதற்காக அமெரிக்கா பெரும் வலியை சந்திக்க நேரிடும் என வடகொரிய பாதுகாப்பு அமைச்சகம் எச்சரிக்கை விடுத்திருந்தது. (8)

# இர்மா புயலின் போது திருட்டு

## 50 இற்கும் மேற்பட்டோர் கைது



அமெரிக்காவின் மியாமி நகரை இர்மா புயல் தாக்கியபோது அங்குள்ள கடைகளில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட சுமார் 50இற்கும் மேற்பட்டோரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புளோரிடாவின் கடலோர நகரான மியாமியை இந்த புயல் தாக்கிய போது அங்கு ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டிருந்தது. இதை பயன்படுத்திக்கொண்டு அந்த பகுதிகளில் உள்ள கடைகளில் சில மர்ம நபர்கள் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டனர். இந்த திருட்டு சம்பவங்களில் ஈடுபட்ட சுமார் 50 இற்கும் மேற்பட்டோரை மியாமி பொலிஸார் கைது செய்துள்ளனர். இதில் 26 பேர் கடந்த சனிக்கிழமை ஒரே கடையில் கொள்ளையடித்துள்ளனர்என மியாமி நகர பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். (8)



தமிழின அழிப்புக்கு சர்வதேச விசாரணையை வலியுறுத்தி ஐரோப்பிய ஒன்றியத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட மனிதநேய ஈருருளிப் பயணம் ஐந்தாவது நாளாக கடந்த திங்கட்கிழமை ஜேர்மன் நாட்டின் சார்ப்ருக்கன் நகரத்தை கடந்து பிரான்ஸ் நாட்டை நோக்கி பயணித்தது.

# ஐ.எஸ்.தீவிரவாதிகள் 25 பேர் கைதாகினர்

(அங்காரா)

துருக்கி நாட்டின் துறை முக நகரான இஸ்தான்புல் நகரில் ஐ.எஸ். தீவிரவாதிகளை தேடும் வேட்டையை பொலிஸார் நடத்தியுள்ளனர். இந்த வேட்டையின் போது ஐ.எஸ். தீவிரவாதிகள் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துருக்கி நாட்டிலும் ஐ.எஸ். தீவிரவாதிகள் ஊடுருவி, தங்கள் ஆதிக்கத்தை செலுத் துகின்றனர். அப்படி அவர் கள் எங்கெல்லாம் பதுங்கி இருக்கிறார்கள் என்று தகவல் கிடைக்கிறதோ, அங்கெல்லாம் பொலிஸ் படையினர் தீவிர தேடுதல் வேட்டை நடத்துகின்றனர்.

அப்படி சமீப காலத்தில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஐ.எஸ். தீவிரவாதிகளை துருக்கி பொலிஸ் படையினர் கைது செயதுளனர். அவர்களில் வெளிநாடுகளை சேர்ந்த 3 ஆயிரத்து 290 பேரை 95 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு நாடு கடத்தியுள்ளனர்.

மேலும் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பில் சேரக்கூடும் என்ற சந்தேகத்தின் பேரில், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 38 ஆயிரத்து 269 பேருக்கு துருக்கியில் நுழைய அந்நாட்டு அரசு அனுமதி மறுத்துள்ளது.

இந்நிலையில் அந் நாட்டின் துறைமுக நகரான இஸ்தான்புல் நகரில் ஐ.எஸ். தீவிரவாதிகளை தேடும் வேட்டையை பொலிஸார் நடத்தியுள்ளனர். இந்த வேட்டை யின்போது ஐ.எஸ். பயங்கரவாதிகள் 25 பேரை அவர்கள் கைது செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (8)

# ரோஹிஞ்யா முஸ்லிம்களுக்கு ஏற்படும் அநீதிகளை சகித்துக் கொள்ளமாட்டோம்

## ஷேக் ஹசீனா எச்சரிக்கை

(டாக்கா)



மியன்மாரில் ரோஹிஞ்யா முஸ்லிம்களுக்கு எதிரான அநீதி தொடர்ந்துகொண்டே இருக்கிறது. குழந்தைகள், பெண்கள் என எந்தப் பாகுபாடும் இல்லாமல் அங்கு நடக்கும் படுகொலைகள் உலகையே உறைய வைத்துள்ளன.

இதனால் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் மியன்மாரில் இருந்து தப்பித்து பங்களாதேசத்தில் அகதிகளாகத் தஞ்சமடைந்து வருகின்றனர். இவர்களின் எண்ணிக்கை மூன்று இலட்சத்தைத் தாண்டி வருகிறது.

இதனிடையே பங்களாதேசத்தில் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாமை அந்நாட்டு பிரதமர் ஷேக் ஹசீனா பார்வையிட்டார்.

அதன்பின் பேசிய அவர் ரோஹிஞ்யா முஸ்லிம்களுக்கு எதிராக மியன்மார் அரசு பல அடக்குமுறைகளையும் வன்முறைகளையும் அரங்கேற்றி வருகிறது. புத்த மதத்தைச் சாராமல் வாழும் அப்பாவி முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறையை மியன்மார் கட்டுப்படுத்த வேண்டும். எங்கள் நாட்டுக்கு அகதிகளாக வந்துள்ளவர்கள், மீண்டும் மியன்மார் திரும்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவர்கள் மீது நடத்தப்படும் எந்த வகையான வன்முறையையும், அநீதிகளையும் நாங்கள் சகித்துக் கொள்ள மாட்டோம்.

இந்தப் பிரச்சினைக்குத் தொடர்ந்தும் எங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்வோம். பங்களாதேசத்தில் தஞ்சம் அடைந்துள்ளவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உரிய உதவிகளைச் செய்வோம். இவ்வாறு என அவர் தெரிவித்தார். (8)

# வெலிக்கடைச் சிறைச்சாலை வைத்தியசாலையில் திடீர் தேடுதல்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலை வைத்தியசாலையில் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 3 மணி வரை திடீர் தேடுதல் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பல்வேறு முறைகேடுகளும் இடம்பெறுவதாக கிடைத்த தகவலை அடுத்து, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனின் உத்தரவின் பேரில் இந்த திடீர் தேடுதல் நடத்தப்பட்டது.

சிறைச்சாலை புலனாய்வு அதிகாரிகளால் நடத்தப்பட்ட இந்த தேடுதலின் போது இரண்டு கையடக்க தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன.

இவற்றில் ஒன்று சிறைச்சாலை வைத்தியசாலையின் சுவர் ஒன்றுக்கு அருகே வீசப்பட்ட நிலையில் கிடந்தது. இன்னொன்று வைத்தியசாலை மேசை ஒன்றின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

சிறைச்சாலைக்குள் தொலைபேசி கொண்டு செல்லப்படுவதற்கு சாத்தியமில்லை என்றும், சிறை அதிகாரிகளின் உதவியுடனேயே இவை கைதிகளுக்கு கிடைத்திருக்க வேண்டும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.




அனைத்து அரசியல் கைதிகள் மற்றும் கைதிகளிடம் இந்தச் சோதனை நடத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கும் கைதிகளும், பொய்க்காரணம் கூறி சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதால், இனிமேல் 3 வைத்திய அதிகாரிகள் பரிசோதித்து, பரிந்துரை செய்தால் மட்டுமே வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவர் என்ற புதிய நடைமுறை அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

600 மில்லியன் ரூபா அரச நிதி மோசடி வழக்கில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள லலித் வீரதுங்க, அனுஷ பெல்பிட்ட ஆகியோர் உடனடியாகவே சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதால் ஏற்பட்ட சர்ச்சைகளை அடுத்து, அரசாங்கம் சிறைச்சாலை வைத்தியசாலை நடைமுறைகளை கடுமையாக்கி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆறாவது அணுகுண்டு சோதனை நடத்திய வடகொரியாவுக்கு இலங்கை கண்டனம்

(கொழும்பு)

ஆறாவது அணுகுண்டுப் பரிசோதனையை கடந்த செப்டெம்பர் 3ஆம் திகதி நடத்தியுள்ள வடகொரியாவுக்கு, இலங்கை கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இந்த அணுகுண்டுச் சோதனை ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானங்களை மீண்டும் மீறுவதுடன், பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும் அமைந்துள்ளது.

இந்தச் சூழலில், வடகொரியாவை மேலதிக நடவடிக்கைகளில் இருந்து விலகி இருக்குமாறும், ஐ.நா. தீர்மானங்களுடன் இணங்கிச் செயற்படுமாறும் பேச்சுக்களை ஆரம்பித்து, இந்த விவகாரத்துக்கு அமைதியான தீர்வைக் காணுமாறும், அதன் மூலம் வடகொரிய மக்களுக்கும் பிராந்தியத்துக்கும் அமைதி மற்றும் நலன்களை பாதுகாக்குமாறும் கேட்டுக் கொள்ளும் அனைத்துலக சமூகத்துடன் இலங்கை இணைகிறது..

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இம்மாதம் 11ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை வரவேற்பதுடன், ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கான கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் அர்ப்பணிப்புக் கொண்டுள்ளது என்றும் இலங்கை அரசாங்கம் வலியுறுத்துகிறது" என்று அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (இ-7)

# நீர்க்காகம் கூட்டுப் போர்ப் பயிற்சியை ஜனாதிபதி இன்று பார்வையிடுவார்





(கொழும்பு)

கடற்படை, விமானப்படையுடன் இணைந்து இலங்கை இராணுவம் நடத்தும் 'நீர்க்காகம் பயிற்சி-VIII – 2017' கூட்டுப் போர்ப் பயிற்சியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று நேரில் பார்வையிடவுள்ளார்.

திருகோணமலை மாவட்டம் குச்சவெளி கடற்கரைப் பகுதியில் நடத்தப்படவுள்ள போர்ப்பயிற்சியை பார்வையிடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் மகேஷ் சேனநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன ஆகியோரும் இந்தக் கூட்டுப் பயிற்சியை பார்வையிடவுள்ளனர்.

13 நாடுகளைச் சேர்ந்த 69 படையினர் மற்றும் அதிகாரிகளும் இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்கின்றனர்.

கடந்த 3ஆம் திகதி மின்னேரியாவில் தொடங்கிய இந்தக் கூட்டுப் பயிற்சி எதிர்வரும் 24ஆம் திகதி வரை தொடர்ந்து இடம்பெறவுள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### பார்வைகளில் நேர்மைகள்

ரயிலில் பயணம் செய்து கொண்டிருக்கிறோம். சக பயணி ஒருவர் பெட்டியைத் திறந்து என்னவோ எடுக்கிறார். நம் பார்வை பெட்டிக்குள் போகுமா, போகாதா?

நம் கண் முன் யாரோ தம் பேர்ஸை திறந்து பணம் எடுக்கிறார்கள்? பேர்ஸில் தோராயமாக அவர் எவ்வளவு வைத்திருக்கிறார் என்று பார்ப்போமா, மாட்டோமா?

நாம் ஒருவருடைய வீட்டிற்குள் சென்றிருக்கிறோம். நம் எதிரே உள்ள அலுமாரி திறக்கப்படுகிறது. அலுமாரியில் என்னென்ன உள்ளது என்று நம் கண் அலசுமா, அலசாதா?

இந்தக் கேள்விக்கெல்லாம் இல்லை என்று பதிலளித்தால் ஒன்று அவர்கள் மனச்சாட்சியை மறந்துவிட்டார்கள் என்று பொருள். அல்லது அவர்கள் மாமனிதர்கள் தாம்; சந்தேகமில்லை.

ஆண்களைப் பெண்கள் நோட்டமிடுவதும் பெண்களைக் காணக்கூடாத கண்ணோட்டத்தில் காண்பதும், தங்களை மறைவிடத்தில் பத்திரப்படுத்திக்கொண்டு வக்கிரப் புத்தியுடன் பிறரைப் பார்ப்பதும் மனித இனத்தின் பலவீனங்கள்.

சின்னப் பிள்ளைகள், மற்றவர்கள் இன்னும் பொருட்களைப் பார்வையை அகற்றாமல் பார்ப்பது போல, ஒரு பெண்ணே கூட மற்றொரு பெண்ணின் புடைவையையும் நகைகளையும் வெறித்துப் பார்ப்பதும் சகஜமான பலவீனம்.

இந்த பலவீனங்களையெல்லாம் நாம் வென்றாக வேண்டும்.

சிலருக்குப் பேச்செல்லாம் நம்முடன் இருக்கும். பார்வையெல்லாம் எங்கும் – எதன் மீதோ இருக்கும். கோவிலுக்குக் கும்பிட வந்த இடத்தில் கூடத் திருட்டுப்பார்வை பார்ப்பவர்கள் பலர்.


எனக்குத் தெரிந்து ஒரு வங்கியின் உயர் அதிகாரி தன் மேசையில் உள்ள வேலையைக் கவனிக்காமல், வங்கிக்கு யார் வருகிறார்கள்; என்ன பேசுகிறார்கள்; என்ன செய்கிறார்கள் என்பதை நோட்டமிடுவதில்தான் அதிக நேரத்தைச் செலவிடுகிறார். பார்வைகளில் ஆரோக்கியம் வேண்டும். திருட்டுப் பார்வைகள் நம்முடைய மன அழுக்குகளை வெட்ட வெளிச்சமாக வெளிப்படுத்தி விடக் கூடியவை. எனவே இதில் கூடக் கவனம் தேவை.

கண்கள் அறிவைச் சேகரிக்கும் அற்புதமான கிடங்குகள். அப் பார்வையில் நேர்மை வேண்டும். கண்ணில் படக் கூடாதவை பட்டால் சட்டென நம் பார்வை திசை திரும்ப வேண்டும்.

எதையும் மன விகற்பங்களின்றிப் பார்க்க வேண்டும். திருட்டுப் பார்வையைத் தவிர்த்து இயல்பான பார்வையை வரவழைத்துக் கொள்ள வேண்டும். தவறான எண்ணம் ஏதுமின்றி எதையும் காணப் பழகிக் கொள்ள வேண்டும். எந்த நேரத்தில் எது முக்கியமோ அதற்குத் தான் முக்கியத்துவம் தர வேண்டும்.

நம் பார்வைகளை நாம் ஆரோக்கியப் படுத்திக் கொள்ளாவிட்டால் பல அசிங்கங்களை எதிர்கொள்ள வேண்டி வரும்.

**லேனா தமிழ்வாணன்**



பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில் வருடாந்த தேர்த்திருவிழா நேற்று முன்தினம் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

# காணாமற் போனவர்கள் பற்றிய அலுவலகத்தை அமுலாக்குவதற்கான வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதி மைத்திரியால் கைச்சாத்திடப்பட்டது



2016 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் ஸ்தாபித்தலும், நிர்வகித்தலும் தொடர்பான சட்டமும் அது தொடர்பான 2017 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க திருத்தச் சட்டமும் உள்ளடங்கலான காணாமல் போனவர்கள் பற்றிய அலுவலகம் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நேற்று முன்தினம் 12 ஆம் திகதி, இம் மாதம் 15 ஆம் திகதி நடை முறைக்கு வரும் வகையில் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியில் இடம் பெறுவதற்காக கைச்சாத்திடப்பட்டது.

இதனடிப்படையில்காணாமல் போனோருக்கான அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டு அதனுடையகடமைகள், அதிகாரங்கள், தொழிற்பாடுகள் நடைமுறைப் படுத்துவதற்கும் தொழிற்படுவதற்குமான ஏற்பாடுகள் உடனடியாக நடைமுறைக்குவரும்என அரசாங்கம் அறிவித்துள்ளது. (இ-7)

## காணாமற் போனோர் பற்றிய வர்த்தமானி அறிவிப்பு

# "நல்லாட்சியின் நல்லிணக்க பயணத்தின் ஒரு மைல்கல்லாக நோக்கப்படுகிறது"

## நல்லிணக்க அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி

(கொழும்பு)

காணாமற் போனவர்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நல்லாட்சி அரசின் கீழ் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு மைல்கல்லாக நோக்கப்படுவதாக தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,



இலங்கையில் யுத்த காலத்தில் காணாமற் போனவர்கள் பற்றிய அலுவலகம் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்று முன்தினம் 12 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

இந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரசுரம் நாளை 15 ஆம் திகதி முதல் இதனடிப்படையில் காணாமல் போனோருக்கான அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டு அதனுடைய கடமைகள், அதிகாரங்கள், தொழிற்பாடுகள் நடைமுறைப் படுத்துவதற்கும் தொழிற்படுவதற்குமான ஏற்பாடுகள் உடனடியாக நடைமுறைக்கு வரும்.

இது நல்லாட்சி அரசின் கீழ் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு மைக்கல்லாகவே நோக்கப்படுவதாக தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின்செயலாளர் வே. சிவஞானசோதி மேலும் தெரிவித்தார். (இ-7)

## 'சோர்ந்து விடாதீர்கள்' மாநாடு

(யாழ்ப்பாணம்)

சோர்ந்துவிடாதீர்கள்எனும் தொனிப்பொருளிலானஜெகோவாவின் சாட்சிகளின் 2017 ஆம் ஆண்டிற்கான மாநாடு நாளை15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை தெல்லிப்பழை ராஜேஸ்வரி மண்டபத்தில் முற்பகல் 9.20 மணிமுதல்மாலை 4.50 மணிவரை இடம்பெறவுள்ளது. (இ-3)

## பட்டமளிப்பு படங்களைப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

2016 ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட மாணவர்களில் தங்களது பட்டமளிப்பு விழா புகைப்படங்களினை இதுவரையில் பெற்றுக்கொள்ளாத மாணவர்கள் தங்களது புகைப்படங்களினை பெற்றுக் கொள்வதற்கு நாளை 15.09.2017 இற்குள் யாழ். உயர்தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் உதவிப் பதிவாளரினை தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)



நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிழற்பிரதி இயந்திரம் ஒன்று யாழ்.-உடுவில் மாண்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் இரா.ஜெயக்குமார் மற்றும் ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்படுவதை படத்தில் காணலாம்.

# மேல் மாகாண எதிர்க்கட்சித் தலைவருக்கு எனது சிறுநீரகத்தை வழங்கத் தயார்

## பிரதியமைச்சர் பாலித தெரிவிப்பு



மேல்மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் மஞ்சு ஸ்ரீ அரகல நோய் வாய்ப்பட்டிருப்பதன் காரணமாக தேவை ஏற்படின் அவருக்கு தனது சிறுநீரகமொன்றை வழங்கத் தயாராக இருப்பதாக பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெரும தெரிவித்துள்ளார்.

பொல்கஸ்ஓவிட்ட பகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த தனது மகனின் நினைவாகவே இவ்வாறு அன்பளிப்பு செய்ய உத்தேசித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாஸ்கரலிங்கத்தை இலக்குவைக்கிறது கூட்டு எதிரணி

பிரதமரின் அமைச்சான தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் ஆலோசகரான ஆர். பாஸ்கரலிங்கம் மீது, நீதிமன்ற நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்ந்து வருவதாக, ஒன்றிணைந்த எதிரணி தெரிவித்துள்ளது. முன்னாள் ஜனாதிபதியின் செயலாளராக இருந்த லலித் வீரதுங்க, சிறைக்கு அனுப்பப்பட்ட பின்னணியிலேயே, இந்த நடவடிக்கை குறித்து, ஒன்றிணைந்த எதிரணி ஆராய்கிறது.

நிதியமைச்சின் செயலாளராக முன்னர் இருந்த பாஸ்கரலிங்கம், 1989இலும் 1990 இலும், "அவசர, இரகசிய செலவுகள்" எனக் குறிப்பிட்டு, மில்லியன் கணக்கான பணத்தை, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்குச் செல்ல அனுமதித்தார் என, ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினரான பந்துல குணவர்தன குற்றஞ்சாட்டினார்.

"இந்தப் பணம் ஒதுக்கப்பட்டமை தான், மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாச மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டமைக்கு, இந்தப் பணம் ஒதுக்கப்பட்டமை தான் பிரதான காரணமாக அமைந்தது.

ஆனால் அப்போது, பாஸ்கரலிங்கம் தான் இப்பணத்தை அனுமதித்தார் என்பது வெளிப்படுத்தப்படவில்லை" என்று குறிப்பிட்டார்.

பதினாறு நாட்களில், பாஸ்கரலிங்கத்தால் அனுமதிக்கப்பட்ட வவுச்சர்கள், காசோலைகள் என, 125 மில்லியன் ரூபாய் பெறுமதியான ஆவணங்களை, ஒன்றிணைந்த எதிரணி கொண்டிருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில், முடிவெடுப்பதில் முன்னைய அரசாங்கத்துக்கு உதவிய வீரதுங்க, தற்போது சிறையில் காணப்படும் போது, பாஸ்கரலிங்கம், அமைச்சொன்றின் ஆலோசகராக நியமிக்கப்பட்டமை, நியாயமற்றது என்று குறிப்பிட்ட அவர், நாடாளுமன்றத்தில் சந்திக்கும் போது, அரசியல் கட்சிகளின் தலைவர்களின் கவனத்துக்கு, இவ்விடயத்தைக் கொண்டுவர இருப்பதாகவும் தெரிவித்தார். (இ-7)

# முடியுமானால் அவரவர் சின்னத்தில் போட்டியிடுங்கள்
## ஆறுமுகன் தொண்டமான் பகிரங்க சவால்



எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் மலையக கட்சிகள் அவரவர் சின்னத்தில் போட்டியிட்டால் மலையகத்து மக்களின் ஆதரவு யார் பக்கம் என்பது தெரியவரும். அப்போது சில நபர்கள் சொல்லும் மலையகம் எங்கள் பக்கம் என்பதன் முகத்திரை கிழிக்கப்படும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

மஸ்கெலியா பெயார்லோன் தோட்டத்தில் சுமார் 30 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சனசமூக நிலைய திறப்புவிழாவில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவரவர் தனது கட்சியில் போட்டியிடுவார்களேயானால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சேவல் சின்னத்தில் போட்டியிடும். தைரியம் இருந்தால் சவாலானவர்கள் அவரவர் கட்சி சின்னத்தில் போட்டியிட்டு பார்க்கவும். இந்த சவாலுக்கு நான் தயார்.

யானை மேல் ஏறி மேலே பார்த்தால் யானை தும்பிக் கையை இரண்டு நிமிடம் உயர்த்தினால் கீழே விழுந்தவுடன் யானை நம்மை மிதித்து விடும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மகிந்த தன் வாயால் மாட்டிக் கொண்டுள்ளார்
## விஜித ஹேரத் சுட்டிக்காட்டு



சில் ஆடை விநியோக சம்பவம் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கை முன்னெடுக்கப்படும் காலகட்டத்தில், தான் சம்பவத்துக்கு பொறுப்பு என்பதை ஏற்றுக் கொள்ளாத மகிந்த ராஜபக்ஷ, வழக்கு தீர்ப்பு வழங்கப்பட்டதன் பின்னர் அதற்கான பொறுப்பு தான் என கூறுவதன் மூலம் இந்நடவடிக்கை திட்டமிட்ட ஒரு செயற்பாடு என்பது தெளிவாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல, பலவத்தவிலுள்ள ஜே.வி.பியின் பிரதான காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

19 ஆவது அரசியல் யாப்பு திருத்தச் சட்டத்தில் அரச அதிகாரி யார் என்பது குறித்து வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, 19 ஆவது சரத்தை வாசிக்குமாறு நாம் மகிந்த ராஜபக்ஷவிடம் கேட்டுக் கொள்கின்றோம். 19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஏற்ப ஜனாதிபதியின் செயலாளர் ஒரு அரச நிர்வாகியாவார். 19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு முன்னரும் ஒரு அரச நிர்வாகிக்கு அரசியல் யாப்புச் சட்டத்துக்கு முரணாக செயற்பட முடியாது என்பது குறிப்பிடப்பட்டிருந்தது.

எமது நாட்டில் அரச நிர்வாகியாகவுள்ள ஒருவர் சர்வதேச சட்டமொன்றையாவது மீறி நடக்க முடியாது. எழுத்து மூல சட்டதிட்டங்களின் அடிப்படையில் அவர் செயற்பட கடமைப்பட்டுள்ளார். இதனால், மகிந்த ராஜபக்ஷ அரசியல் அமைப்புக்கு மாற்றமாக செயற்பட்டு, இலஞ்சம் வழங்கிய குற்றச்சாட்டிலிருந்து தப்ப முடியாது.

இன்றுள்ள பிரச்சினை லலித் வீரதுங்க அரசியலமைப்புக்கு ஏற்ப திருடரா? அரசியலமைப்புக்கு எதிரான திருடரா? என்பதல்ல. அவர் அரச நிர்வாகி அல்ல எனக் கூறுவதாயின், அவர் ஒரு சாதாரண நபராக இருந்து கொண்டு ரி.ஆர்.சியிலிருந்து 600 மில்லியன் ரூபா எடுத்து சில் ஆடை விநியோகிக்க முடியுமா? என்பதாகும்.

அதேபோன்று, இந் நடவடிக்கை அரசாங்கத்தின் கொள்கையில் உள்ள ஒரு நடவடிக்கையே என மகிந்த ராஜபக்ஷ கூறுகின்றார். அரசாங்கத்தின் கொள்கையாக இருந்தால், அது வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். அது அப்படி பதிவாகவும் இல்லை.

அத்துடன், இந்த ரி.ஆர்.சி யில் ஒரு வருடத்துக்கான வேலைத்திட்டமாக குறித்த சில் ஆடை விநியோக நடவடிக்கை அமைந்துள்ளதாகவும் மகிந்த ராஜபக்ஷக்கள் கூறுகின்றனர். இருப்பினும், இதற்கான எந்தவொரு எழுத்து மூல சாட்சிகளும் இல்லை என்பது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதனால், அரச நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது. தீர்ப்பு வழங்கப்பட்டதன் பின்னர் மகிந்த ராஜபக்ஷக்கள் தாம் பொறுப்பை ஏற்பதாக கூறுகின்றனர். இருப்பினும், நீதிமன்றத்தில் வழக்கு இடம்பெறும் போது இந்த பொறுப்பை ஏற்க அவர்கள் முன்வரவில்லை. இதனால், இந்த நடவடிக்கையை மகிந்த ராஜபக்ஷவும் லலித் வீரதுங்கவும் சேர்ந்து மிக திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஒன்று எனவும் விஜித ஹேரத் மேலும் தெரிவித்தார். (இ-7)

# புலமைப்பரிசில் பரீட்சையில் சிக்கல்
## உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்கவும்
### கல்வி அமைச்சர் அறிவுறுத்து



(கொழும்பு)

இவ்வருடம் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் இரண்டாம் பகுதி வினாத்தாளிலுள்ள வினாவில், சிக்கல் காணப்படுவதாகவும் இது தொடர்பில் அறிக்கையொன்றை வழங்குமாறும் பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளரிடம் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் கோரியுள்ளார்.

கணித வினாத்தாளில் இரண்டாம் பகுதியில் 39 ஆவது வினா தொடர்பான விடையில் சிக்கல் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்பொழுது விடைத்தாள் திருத்தும் பணியும் நிறைவடைந்துள்ளது. இதனால், இது தொடர்பிலான விக்கல் ஒரு பிரச்சினையாக மாறியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எந்தவொரு பிள்ளைக்கும் அநீதி இடம்பெறாதவாறு இப்பிரச்சினைக்கு தீர்வு தருமாறும் கல்வி அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். (இ-7)

# பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்காக தேசிய பொருளாதார பேரவை ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கு தேவையான தீர்மானங்களை எடுப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்ட தேசிய பொருளாதார பேரவை முதற்தடவையாக நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் கூடியது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான மங்கள சமரவீர, சரத் அமுனுகம, சுசில் பிரேமஜயந்த, ஜனாதிபதி செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, நிதி அமைச்சின் செயலாளர் ஆர். எம்.எஸ்.சமரதுங்க, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் பதில் செயலாளர் சாந்த பண்டார மற்றும் தேசிய பொருளாதார பேரவையின் செயலாளர் நாயகம் பேராசிரியர் லலித் சமரக்கோன் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

உள்நாட்டு விவசாயம் மற்றும் கைத்தொழில் துறைக்கு முன்னுரிமை வழங்கி, தேசிய பொருளாதாரம் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வது தேசிய பொருளாதார பேரவையின் பொறுப்பாகுமென தெரிவித்த ஜனாதிபதி, அது தொடர்பான அடிப்படை விடயங்கள் தொடர்பில் தேவையான சந்தர்ப்பங்களில் அரச துறை, தனியார் துறை மற்றும் தொழில் முயற்சியாளர்களையும் அழைத்து கலந்துரையாடப்படும் எனவும் தெரிவித்தார்.

விசேடமாக வறுமையை ஒழித்து கிராமிய பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை துரிதமாக அமுல்படுத்துவது தேசிய பொருளாதார பேரவையின் குறிக்கோளாகும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பொருளாதார கொள்கைகள், அரச நிதி நடவடிக்கைகள், அரச கடன் முகாமைத்துவம் மற்றும் நிதித்துறை செயற்பாடுகள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

பிரதேச மட்டத்தில் இடம்பெறும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

ஒவ்வொரு அமைச்சு மற்றும் நிறுவனங்களுக்கான வருடாந்த வரவு செலவு திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளை அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக செலவிடாமல் திறைசேரிக்கு திருப் பியனுப்புவதனால் நாட்டின் அபிவிருத்திக்கும், மக்களின் நலன்களுக்கும் ஏற்படும் பாதிப்பு தொடர்பில் ஜனாதிபதி அலுவலர்களின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

மாவட்ட மட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச அலுவலர்களின் பங்கேற்புடன் இடம்பெறும் மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டங்களில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் உரிய முறையில் அமுல்படுத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவம் மற்றும் அதற்காக வழங்கப்படும் நிதியை குறித்த அபிவிருத்தி பணிகளுக்கு பயன்படுத்துதல் தொடர்பிலும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.


கிராம மட்டத்தில் நிதி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் முறையற்ற கடன் வழங்கல் காரணமாக கிராமிய மக்களின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பிலும் ஜனாதிபதி அலுவலர்களின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

இலங்கையின் அபிவிருத்திக்கு நேரடியாக தந்திரோபாய ரீதியில் முக்கியத்துவம் மிக்க கொள்கை, உடன்படிக்கைகள் மற்றும் திட்டங்கள் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல் தேசிய பொருளாதார பேரவைக்குரிய விடயப் பரப்பாகும்.

தேசிய பொருளாதார பேரவை இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை கூடவுள்ளது.

பேரவையின் செயலாளர் நாயகமாக பேராசிரியர் லலித் சமரக்கோனை நியமிப்பதற்கான அமைச்சரவை பத்திரத்துக்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது. (இ-7)





தென்னை பயிர்ச்செய்கை சபையின் தென்னை தின விழாவை முன்னிட்டு அண்மையில் சாவகச்சேரியில் தென்னை தொடர்பான அறிவுறுத்தல்களும் பயனாளிகளுக்கு தென்னம்கன்றுகளும் பயிரிடல் முறைபற்றிய விளக்கமும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் தென்னை பயிர்ச்செய்கை சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் மற்றும் தலைமை காரியாலயத்தின் பிரதி பொது முகாமையாளர் அஜித் வேரகொட ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (படங்கள்:-கிஷோர்)

# அறுபது நாட்களைத் தாண்டியும் தீர்வின்றித் தொடரும் போராட்டம்




புத்தூர் மேற்கில் கலைமதி மக்கள் மண்டப முன்றலில் 62 நாட்களுக்கு மேலாக இடம்பெற்றுக் கொண்டிருக்கும் மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் அமைந்துள்ள மயானங்களை அகற்றக்கோரிய தொடர் கவனயீர்ப்புச் சத்தியாக்கிரகப் போராட்டமானது வடக்கு மாகாண சபையினால் இதுவரை எவ்வித தீர்வும் முன்வைக்கப்படாத நிலையில் தொடர்கின்றது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1189

Search for people, places and things — Nagendram Home

### சிவானுஜா





### மிதுலன்




### அனுசா




### சோபிதா




### பிரகர்சா




### கஜன்

கணவன் : நேற்று ராத்திரி
நான் குடிச்சிட்டு வந்தபோது
நீ பேசிய வார்த்தை ஒவ்வொன்றும்
என்னை செருப்பால் அடிச்சது
போல இருந்திச்சுது...!
மனைவி : அடப் போங்க
குடிச்சிருந்ததால
உங்களுக்குத் தெரியலை...
நிஜமாகவே நான்
செருப்பால தான் அடிச்சேன்...!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஏக்கத்தில் விநாயகபுரம்...!

இலங்கையிலுள்ள மிகவும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாவட்டமாகவும் சனத்தொகை குறைந்த மாவட்டமாகவும் விளங்குவது முல்லைத்தீவு மாவட்டமாகும். ஈழப்போரின் போது உயிரிழப்புக்களையும் சொத்திழப்புக்களையும் சந்தித்து மீண்டும் துளிர்விடும் இடமாக விளங்குகின்றது. இங்கு முல்லையும் மருதமும் ஒருங்கே இணைந்த ஓர் அழகிய கிராமமே விநாயகபுரம் எனும் ஊராகும்.



1160 ஏக்கர் விளைச்சல் நிலத்தையும் 580 ஏக்கர் சிறுதானிய மற்றும் மரக்கறிச் செய்கைக்குமான நிலத்தையும் உலர்வலயக் காடுகளையும் தனது வளமாகக் கொண்டுள்ள இக்கிராமத்தில் நீர்ப்பற்றாக்குறை என்பது பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள வெப்பநிலை அதிகரிப்பு, அதனூடான வரட்சி என்பன நீரின் அளவுகளிலும் தரத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றது. அதனடிப்படையில் விநாயகபுரக் கிராமமும் நீர் தொடர்பான அடிப்படைப் பிரச்சினைகளை எதிர்கொண்டு கிராமத்தின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. உலர் வலயப் பிரதேசத்தில் அமைந்துள்ள இக்கிராமமானது வருடாந்த சராசரி மழைவீழ்ச்சியாக 1300-2400mm வரை கொண்டுள்ளதோடு, $23^0$C-$40^0$Cவரை வருடாந்த சராசரி வெப்பநிலையையும் கொண்டுள்ளது.

விநாயகபுரக் கிராமத்தைப் பொறுத்தவரை இங்கு பாரிய குளங்கள் எதுவும் இல்லை. இப்பகுதிக்குரித்தான சிறிய குளங்களும் பயன்பாடற்ற நிலையில் காணப்படுகின்றன. சுமார் 130 குடும்பங்கள் வரை வசிக்கும் இக்கிராமத்தில் 40 குடும்பங்களுக்கு மட்டுமே தனியான கிணற்று வசதியுண்டு. அதில் மூன்றில் ஒரு பகுதி உவர் நீராக உள்ளது. இதனை விட இப்பகுதி மக்களின் தேவையினை பூர்த்தி செய்யக் கூடியதாக ஏழு பொதுக்கிணறுகளும் மூன்று குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

வவுனிக்குளத்தில் இருந்து கடந்த இரண்டு வருடங்களாக நீர் வழங்கல் சேவை இடம்பெறுகின்ற போதிலும், இது மழை காலத்தை அடுத்து வரும் சில மாதங்களுக்கே சாத்தியமாகவுள்ளது. பாதுகாப்பான தாய்மையான நீரின்மை, நீர்ப்பற்றாக்குறை காரணமாக இப்பகுதி மக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர் என்பது கண்கூடு. நீர்நெருக்கடி காரணமாக மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிப்படைவதோடு விவசாயத்தையே தமது பிரதான தொழிலாகக் கொண்டுள்ள இவ் ஏழை விவசாயிகளின் பொருளாதாரமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களின் குடிநீர்ப் பிரச்சினை என்பது அண்மைய நாட்களாக மாணவர்களின் ஆரோக்கியத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இப்பாடசாலை வளாகத்தில் ஒரு குழாய்க்கிணறு உட்பட மூன்று கிணறுகள் காணப்படுகின்ற போதிலும் அவை உவர்த்தன்மை கொண்டு குடிப்பதற்கு ஏற்றதாக அமையவில்லை. மாணவர்களின் குடிநீர்த் தேவைக்காக பாண்டியன்குளம் பிரதேசசபையினூடாக ஒவ்வொரு வாரமும் 3000 லீற்றர் குடிநீரானது வழங்கப்படுகின்றது.

கோடை காலங்களில் வற்றிப்போகும் ஊற்றுக்களைக் கொண்ட கிணறுகளையுடைய இப்பகுதி மக்களின் குடிநீர்த்தேவைக்காக ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட குழாய் நீர்த்திட்டத்தினை முடிவுக்கு கொண்டு வரும் பட்சத்தில் கிராம மக்களின் குடிநீர்த் தேவை பூரணமாக்கப்படும். இதேபோன்று விநாயகபுரக் கிராமத்தில் காணப்படும் மரமஞ்சான்குளம் மற்றும் ஒட்டன்குளம் என்பவற்றில் தூர்ந்து போன மண்ணை அகற்றி, குளத்தை ஆழமாக்கி அணைக்கட்டுக்களை பலப்படுத்துவதன் மூலம் மேலதிக நீரைச் சேமித்து அயலிலுள்ள வயல்களை செய்கைக்கு உட்படுத்துவதோடு, தரிசாக மாறுவதில் இருந்து பாதுகாக்க முடியும்.



செல்வி வினோஜினி கிறிஸ்தோத்திரம்
ஆசிரியர், விநாயகபுரம்
அ.த.க.பாடசாலை,
முல்லைத்தீவு.

அபிவிருத்தி நடவடிக்கையில் போக்குவரத்து என்பது முக்கியமானதாகும். அந்த வகையில் சுமார் 130 குடும்பங்களைக் கொண்ட இக்கிராம மக்கள் அன்றாடம் வெளியில் சென்றுவர படும் அவலம் சொல்லில் அடங்காது. அவசர தேவைகளுக்கு கூட நீண்டநேரம் காத்திருந்தே பயணிக்க வேண்டியுள்ளது.

2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர் தனியார் போக்குவரத்துத்துறையினர் சில மாதங்கள் இப்பகுதிக்கு தமது சேவையை வழங்கினர். எனினும் வீதிகள் சீரின்மை காரணமாக தமது சேவையை முழுமையாக வழங்க முன்வரவில்லை. இதன் தொடர்ச்சியில் 2015 ஆம் ஆண்டு இங்கு வரும் அரச சேவையாளர்களின் நலன்கருதி இலங்கைப் போக்குவரத்து சபை, போக்குவரத்து சேவையொன்றை ஆரம்பித்தது.

நகரங்களில் வீதி அகலிப்பு, வீதிப்புனரமைப்பு, அதிவேகப்பாதை அமைத்தல் என வீதிகளைப் அபிவிருத்தி செய்யும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை கிராமத்து வீதிகளைக் கண்டு கொள்ளாமை கவலைக்குரிய விடயமே. பெருந்தெருக்களில் முண்டியடித்து செல்லும் அரச, தனியார் போக்குவரத்து பேருந்துகள் கிராமத்து மக்களின் போக்குவரத்துத் தொடர்பில் கவனம் செலுத்தாமை வேதனையளிக்கிறது.

ஒரு கிராமம் சாதாரண அபிவிருத்தியைக் கூடக் கொண்டிருக்கவில்லையாயின், அப்பகுதியின் அபிவிருத்தி என்பது கேள்விக்குரியதே.

நீரை அடிப்படையாகக் கொண்டு தான் எந்தவொரு தொழிலும் விருத்தி அடையும். அதேபோன்று போக்குவரத்தை அடிப்படையாகக் கொண்டு தான் ஒரு கிராமம் அபிவிருத்தி அடையும். இவை இரண்டும் இன்று விநாயகபுரக் கிராமத்துக்கு வேண்டப்படுபவையாக உள்ளது.

(பாடசாலையின் வரலாற்றைத் தாங்கி வெளிவரும் மருதமௌலி நூலிலிருந்து)

# தென் மாகாண சபை விளையாட்டுத்துறை அமைச்சர் பதவி நீக்கம்

(கொழும்பு)

தென் மாகாண சபை விளையாட்டு துறை அமைச்சர் வீரசுமன வீரசிங்க உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நேற்று பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அம் மாகாண சபை முதலமைச்சர் தனது அதிகாரத்தை பயன்படுத்தி இந்த பதவி நீக்கத்தை செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும், தற்போது விளையாட்டுத்துறை அமைச்சுப் பதவி முதலமைச்சரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஆசிரியர்கள் தமது கடமை நேரங்களில் வேறு வேலைகளில் ஈடுபடுவதாக தகவல்

மேல் மாகாண பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் பெரும்பாலான ஆசிரியர்கள், பாடசாலை நேரங்களில் வெளி வேலைகளில் ஈடுபட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

பாடசாலை வகுப்பு நேரங்களில் டியூஷன் வகுப்புகள் நடத்துதல், பிரதேசத்தில் செய்தி சேகரிப்பு பணிகளில் ஈடுபடல், பல்வேறு சிறு தொழில்கள் செய்தல் உள்ளிட்ட தமது சொந்த தேவைகளின் நிமித்தம், பெரும்பாலான ஆசிரிய ஆசிரியைகள் இவ்வாறு பாடசாலை கடமைகளை புறக்கணித்து செயற்படுவதாக, பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள், மேல் மாகாண கல்வி அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

இது தொடர்பில் ஆசிரியர் சங்கங்களின் ஊடாகவும் மேல் மாகாண கல்வி அமைச்சுக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்த விவகாரம் குறித்து மேல் மாகாண கல்வி அமைச்சர் ரஞ்சித் சோமவங்சவின் கவனம் திரும்பியுள்ளதுடன், இது சம்பந்தமாக உடனடி அவதானம் எடுத்து செயற்பட்டு, தனக்கு அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு அமைச்சர் மேல் மாகாண கல்விக் காரியாலய கல்விப் பணிப்பாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (இ-7)

# மதகுருமார்களுக்கான காப்புறுதித்திட்டம்

அனைத்து வயோதிப மதகுருமார்களுக்கும் காப்புறுதி திட்டத்தை வழங்குதல் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவனம் செலுத்தியுள்ளார்.

தேசிய பௌத்த அறிஞர் சபைக் கூட்டம் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற போது முன்வைக்கப்பட்ட யோசனைக்கமைய ஜனாதிபதி இவ் விடயம் தொடர்பாக தொடர்புடைய அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

தர்மாசிரியர் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கான நியமனம் வழங்குதல் மற்றும் பௌத்த சமய உயர் கல்விக்காக நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டு பிக்குமாருக்கு சலுகை வழங்குதல் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (இ-7)

# எதிர்வரும் 20 வரை விடுமுறைகள் இரத்து

## மின்சாரசபை அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 20 ஆம் திகதி வரை மின்சார சபையின் அனைத்து ஊழியர்களுக்குமான விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

பிரதான மூன்று கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் நேற்று நண்பகல் 12 மணிமுதல் 48 மணித்தியால பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை மின்சார சேவை சங்கத்தின் செயலாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்படும் 48 மணி நேரத்துக்குள் தமது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் முறையான தீர்வொன்றை பெற்றுத்தராவிட்டால் எதிர்வரும் 15ஆம் திகதி நண்பகல் 12 மணி முதல் தொடர் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்துக்கு செல்வோம் என அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே எதிர்வரும் 20 ஆம் திகதிவரை மின்சார சபையின் அனைத்து ஊழியர்களுக்குமான விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வல்லைப் பாலத்தில் ஒயில்

(கரணவாய்)

வல்லைப்பாலத்தில் ஒயில் காரணமாக பாலத்தினூடாக போக்குவரத்து செய்த பிரயாணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் வல்லையிலுள்ள அலுமினிய பாலத்தில் வாகனம் ஒன்று விபத்திற்குள்ளானது.

இதன்போது வாகனத்தில் இருந்து கசிந்த ஒயில் காரணமாக வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிள் சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றோர் பயத்தின் காரணமாக பாலத்தில் இறங்கி உருட்டிச் சென்றனர். (இ-60)

# ரஞ்சனுக்கு எதிரான விசாரணை ஒத்திவைப்பு

நீதிமன்றத்தை அவமதித்ததாக கூறி பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இரண்டு முறைப்பாடுகள் மீதான விசாரணை உயர்நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. குறித்த முறைப்பாடு நேற்று ஈவா வனசுந்தர மற்றும் விஜித் மலல்கொட ஆகிய நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இலங்கையில் உள்ளூராட்சி- ஒரு வரலாற்றுப் பார்வை



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

இலங்கையில் உள்ளூராட்சிக் கட்டமைப்பு பழைய மன்னர்கள் காலத்தில் இருந்ததற்கு வரலாற்றுச் சான்றுகள் பல வுண்டு. இவைகள் அன்று கம்சபா என அழைக்கப்பட்டன. இச்சபைகள் பல்வேறு தொழிற்பாடுகளை மேற்கொண்டன. கிராம விவசாயம், நீர்ப்பாசன ஒழுங்கு, சந்தைகள் பொருட்களுக்கான வரிமுறைகள் போன்றவற்றுடன் மக்களிடையே காணப்படும் பிணக்குகளைத் தீர்த்தல் மற்றும் மக்கள் சார்பான பல்வேறு நலமேம்பாடுகளை முன்னெடுத்தன. இச்சபைகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அன்றைய சமூக பொருளாதார நிலைகளில் தொடர்புபட்டவர்கள் உயர் நிர்வாகிகளால் நியமிக்கப்பட்டனர். கம்சபா போன்று ரட்ட சபைகளும் (மாவட்ட சபைகளும்) வரலாற்றில் சில காலப்பகுதிகளில் இருந்துள்ளன. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களில் உள்ளூராட்சி முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் 19 ஆம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியில் உள்ளூராட்சி சபைகள் அமைக்கப்படவு மில்லை, முக்கியத்துவமும் பெறவுமில்லை.

19 ஆம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதியில் பிரித்தானியர் நாட்டில் உள்ளூராட்சி நிறுவனங்களை ஓரளவு மீள உருவாக்க முனைந்துள்ளனர். 1856 இல் கம் சபை முறையை மீளவும் செயற்பட வைத்து விவசாயம், நீர்ப்பாசன நீர் பங்கீட்டில் முக்கிய பங்கு வகிக்க இடமளித்தனர். மேலும் 1871 ஆம் ஆண்டு கிராமச் சபைச் சட்டங்கள் விதிகள் உருவாக்கத்தினால் இந்நிறுவனத்தின் செயற்பாடுகள் விரிவடைந்தன.

1865 இல் கொழும்பு, கண்டி, காலி ஆகிய நகர்கள் மாநகர சபை அந்தஸ்து கொடுக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டன. இச்சபைகளுக்கு அரசாங்கமே அங்கத்தவர்களை நியமித்து அரசாங்க அதிபர் தலைமையில் உள்ளூராட்சி நிர்வாகம் இடம்பெற்றது.

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில்3 மாநகர சபைகளும் 21 நகரங்கள் உள்ளூர் சபைகளாக (Local Boards) செயற்பட்டன. மொரட்டுவ, மினுவாங்கொட, நீர்கொழும்பு, களுத்துறை, பாணந்துறை, கம்பளை, நாவலப்பிட்டி, ஹற்றன், டிக்கோயா, மாத்தளை, நுவரெலியா, அம்பலாங்கொட, மாத்தறை, வெலிகம, அம்பாந்தோட்டை, தங்காலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை, குருநாகல், புத்தளம், கற்பிட்டி, சிலாபம், அநுராதபுரம், பதுளை, பண்டாரவளை, லுணுகல, இரத்தினபுரி, கேகாலை ஆகியன (Local Boards) நகரங்களாக இருந்தன. இந்நகரங்களைவிட பல சிறு நகர்கள் சுகாதார சபை நகர்களாக (Sanitary Board Towns) இருந்தன.

ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, மன்னார், வல் வெட்டித்துறை, முல்லைத்தீவு, வவுனியா, தலைமன்னார், பேசாலை விடத் தல்தீவு, வங்காலை ஆகியன வடமாகாணத்தில் சுகாதார சபை நகர்களாக விளங்கின.

1947 இல் நான்கு வகையான உள்ளூராட்சி கட்டமைப்பு உருவாக்கப்பட்டன. அவையாவன, மாநகரசபை, நகர சபை, பட்டண சபை, கிராமச் சபை. 1949 இல் தான் யாழ்ப்பாண நகரம், யாழ்ப்பாண மாநகர சபையாகத் தரமுயர்த்தப்பட்டது. மாநகரசபை, நகர சபை, பட்டண சபை, கிராமச்சபை ஆகிய நான்கு சபைகளுக்கும் வட்டார அடிப்படையில் மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். இச்சபைகள் 1950 களிலும் 1960 களிலும் சிறப்பாகச் செயற்பட்டன. 1970 களில் ஜே.வி.பியினரின் கிளர்ச்சி காரணமாக உள்ளூராட்சித் தேர்தல்கள் முன்னர் போல் ஒழுங்காக நடைபெறாது, சபைகள் பல விசேட ஆளுநர்களால் நிர்வகிக்கப்பட்டன.


1980 இல் மாவட்ட அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் கிராமச் சபைகளும் பட்டண சபைகளும் இல்லாமல் செய்யப்பட்டு இவற்றுக்குப் பதிலாக மாவட்ட சபை கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. எனினும் மாநகர சபைகளும் நகர சபைகளும் தொடர்ந்து இயங்க அனுமதிக்கப்பட்டன. மாவட்ட அபிவிருத்திச் சபையுடன் பிரதேச குழுக்களும், கிராமோதய குழுக்களும் நிர்வாக வசதிக்காக உருவாக்கப்பட்டன.

1987 இல் 13 ஆவது அரசியல் யாப்பு சீர்திருத்தத்துடன் மாகாணசபை அறிமுகம் செய்யப்பட்டதுடன் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் இல்லாது ஒழிக்கப்பட்டு இதற்குப் பதிலாக பிரதேச சபைகள் பிரதேச செயலகப் பிரிவு அடிப்படையில் உருவாக்கும் சட்டம் 1987இல் இயற்றப்பட்டது. இதன் மூலம் இலங்கையில் மூன்று அடுக்கு உள்ளூராட்சி சபைகள் இயங்கத் தொடங்கின.

அவையாவன: மாநகர சபை, நகரசபை, பிரதேச சபை.

முன்னர் இருந்த பட்டண சபைகள், கிராமச் சபைகள், பிரதேச சபைகளின் உபகாரியாலயமாகச் செயற்படுகின்றன.

பிரதேச சபைகள் உருவாக்கத்தின் மூலம் உள்ளூராட்சிச் சபைகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்ததுடன் கிராமங்கள் தங்கள் தனித்துவத்தை இழந்ததுடன் தங்களைத் தாங்களே நிர்வகிக்கும் மாண்புகளை இழக்க நேரிட்டது. கிராமச் சபைகள், பட்டண சபைகள் ஒழிக்கப்பட்டு பிரதேச சபைகள் அமைக்கப்பட்டதற்கான காரணங்கள் இச்செயற்பாடுகள் மூலம் நிதிவளம் மற்றும் சிறந்த நிர்வாக முகாமைத்துவத்தை கொடுப்பதற்காக எனக் கூறப்பட்டது. பல கிராமச் சபைகள் வளமின்மையால் சிறப்பாக இயங்கவில்லை. என்பது உண்மைதான். எனினும் இக் கிராமச் சபைகள் அப் பகுதிக் கிராமத்துக்கு அல்லது கிராமங்களுக்கு ஒரு அடையாளத்தையும் கௌரவத்தையும் கொடுத்தது. இது குறித்து மாறுபட்ட கருத்துக்களும் உள்ளன. பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டதால் அடிமட்ட அபிவிருத்திக்கு கிராம அபிவிருத்திக்கு பெரும்பாதகம் நிகழ்ந்ததென்ற கருத்தே மேலோங்கியுள்ளது. பிரதேச சபைகள் உருவாக்கத்தால் இன்று வட மாகாணத்தில் முன்னர் இருந்த பட்டணசபைகளான, ஊர்காவற்றுறை, சங்கானை, சுன்னாகம், காங்கேசன்துறை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், உரும்பிராய், நெல்லியடி, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகியன தங்கள் நகர நிர்வாக அந்தஸ்தை இழந்தன. இதுபோல நெடுந்தீவு, புங்குடுதீவு, நயினாதீவு, வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு, அனலைதீவு, எழுவைதீவு, நாரந்தனை, காரை நகர் வடக்கு, காரை நகர் தெற்கு, அராலி, வட்டுக்கோட்டை, சுழிபுரம், பண்டத்தரிப்பு, மானிப்பாய், மாதகல், உடுவில், ஏழாலை, தெல்லிப்பழை, நல்லூர், கொக்குவில், மயிலிட்டி, அச்சுவேலி, கோப்பாய், கைதடி, நாவற்குழி, சாவகச்சேரி, உடுப்பிட்டி, கட்டை வேலி, புலோலி, வரணி, கச்சாய், மிருசுவில், குடத்தனை, செம்பியன்பற்று, முகமாலை, புலோப்பளை, முள்ளிப்பற்று, பூநகரி, பல்லவராயன்கட்டு, துணுக்காய், கருநாவல் பற்றுதெற்கு, புதுக்குடியிருப்பு, கரிக்கட்டு மூலை வடக்கு, முள்ளியவளை, கரிக்கட்டு மூலை தெற்கு, கரிக்கட்டு மூலை வடக்கு, மேல் பற்று தெற்கு, மேல் பற்று கிழக்கு, உடையாவூர், கிழக்கு மூலை வடக்கு, கிழக்கு மூலை தெற்கு (தமிழ்) , கிழக்கு மூலை தெற்கு (சிங்களம்), பனங்காமம், மேற்கு மூலை, சின்னாச் செட்டி குளம் மேற்கு, நடுச்செட்டி குளம், சின்னசெட்டி குளம் கிழக்கு, சின்னாசெட்டிக் குளம் (சிங்களம்) இலுப்பைக் கடவை, பெருங்காலிப்பற்று, மாந்தைதெற்கு, மாந்தை




வடக்கு, மாந்தை தெற்கு, வங்காலை, நானாட் டான் மேற்கு, நானாட்டான் கிழக்கு, முசலி வடக்கு, முசலி தெற்கு, எருக்கலம்பிட்டி, மன்னார் கிழக்கு, பேசாலை, தலைமன்னார் ஆகிய கிராமச் சபைகள் இல்லாதொழிக்கப்பட்டன. இவற்றுள் நெடுந்தீவுக் கிராமத்துக்கே அதே பரப்பு மற்றும் மக்களுக்கும் அதிகாரம் கூடிய பிரதேச சபை கிட்டியது. யாழ்ப்பாண மாவட்டத்தில் எட்டு பட்டண சபையும் 35 கிராம சபைகளும் ஒழிக்கப்பட்டு இவைகளின் இடத்திற்கு 13 பிர தேச சபைகளும் கிளிநொச்சியில் ஒரு பட்டண சபையும் 6 கிராம சபைகளும் ஒழிக்கப்பட்டு 3 பிரதேச சபைகளும் மன்னாரில் 13 கிராம சபைகள் ஒழிக்கப்பட்டு மூன்று பிரதேச சபைகளும் முல்லைத்தீவில் ஒரு பட்டண சபையும் ஒன்பது கிராம சபைகளும் ஒழிக்கப்பட்ட நான்கு பிரதேச சபைகளும் வவுனியா வில் 10 கிராமச் சபைகள் ஒழிக் கப்பட்டு நான்கு பிரதேச சபை களும் உருவாக்கப்பட்டுள்ளன. கிராமச் சபைகளினதும் பட்டண சபைகளினதும் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்ததுடன் மக்கள் பிரச்சினைகளை சபையில் முன்னெடுப்பது குறைவடைந்துள்ளன. கிராமச் சபை கள், பட்டண சபைகள் இல்லாது செய்யப்பட்டதால் குறிப்பாக தமிழ், முஸ்லிம் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். சிங்களப் பிரதேசங்களில் சில கிராமங்களில் அல்லது பட்டண சபைகளில் வாழும் சிறுபான்மை மக்களின் தனித்துவம் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. தங்களது ஆதிக் கத்திற்குள் இருந்த உள்ளூராட்சிக் கட்டமைப்பை இழந்ததுடன் பிரதேச சபையில் உரிய பிரதி நிதித்துவத்தைப் பெறுவதும் மிகப்பெரிய சவாலாக இருந்து வருகின்றது. இதற்கு புத்தளம் மாவட்டத்தில் இருக்கும் உடப்பு கிராமம் ஓர் சிறந்த உதாரணம். உடப்பு, ஆண்டிமுனை ஆகியன பாரம்பரிய தமிழ்க்கிராமங்கள். 1965 ஆம் ஆண்டு அன்றைய உள்ளூராட்சி அமைச்சர் எம்.திருச்செல்வத்தின் அயராத முயற்சியால் உடப்புக்குத் தனியான கிராமச் சபை அமைத்துக் கொடுக்கப்பட்டது.

இச்செயற்பாடு அன்று உடப்பு வாழ் தமிழ் மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டதுடன் அவர்களது இருப்புக்கு பெரிய அங்கீகாரமாக இருந்தது. இன்று உடப்பு ஆராய்ச்சிக்கட்டுப் பிரதேச சபையில் ஒரு வட்டாரமாக இனங்காணப்பட்டுள்ளது. மிகப் பெரும் அரசியல் சபையை நகர்த்துவதன் மூலம் ஒரு தமிழ்ப் பிரதிநிதியைப் பெற முடி யும். எம்.திருச்செல்வம் அமைச்சராக இருந்த பொழுது வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழ் நலன்நோக்கி பல பட்டண சபைகள், கிராமச் சபைகளை உருவாக்கினார். மேலும் சாவகச்சேரி, வவுனியா, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகியவற்றை நகர சபைகளாக தரம் உயர்த்தினார். பிரதேச சபைகள் அமைப்பினால் அமைச்சர் திருச்செல்வம் உருவாக்கிய பட்டண சபைகள், கிராமச் சபை இல்லாது போயிற்று. இது தமிழ் மக்களுக்கு பெரிய பின்னடைவைக் கொடுத்துள்ளது.

இன்று நாட்டில் 23 மாநகர சபைகளும் 41 நகர சபைகளும் 272 பிரதேச சபைகளும் இருக்கின்றன. பட்டண சபைகள் ஒழிக்கப்பட்டு பிரதேச சபைகள் அமைக்கப்பட்ட பிறகு பல் மாவட்டங்களில் இன்றுள்ள பிரதேச சபைகள் மூலம் தங்களுக்குரிய சேவைகளைப் பெற முடியாதென்ற உணர்வு அதிகரித்து புதிய பிரதேச சபைகளையும் நகர சபைகளையும் உருவாக்க வேண்டிய தேவைகள் எழுந்துள்ளன. மேலும் பல நகர சபைகள் பிரதேச சபைகளை தரமுயர்த்த வேண்டும் என்ற கோரிக்கைகளும் எழுந்துள்ளன. நாட்டில் வாழும் குறிப்பாக சிறுபான்மை இனக்குழுமங்கள் தாங்கள் செறிவாக வாழும் பிரதேசங்களுக்குத் தனித்துவமான உள்ளூராட்சி சபைகள் இருக்குமானால் தங்களுக்குரிய சேவைகளையும் தமக்குரிய அபிவிருத்தியையும் முன்னெடுக்க முடியுமெனக் கருதுகின்றனர். தேசிய ரீதியில் அரசியல் மற்றும் விடயங்களில் உரிய பங்கைப் பெறமுடியாத சூழ்நிலையில் மூன்றாவது அடுக்கு ஜனநாயகக் கட்டமைப்பிலாவது தங்கள் பங்களிப்பை வழங்க முடியுமெனக் கருதுகின்றனர்.

(தொடரும்)




# ஸூஃபியும் கொடிய அரக்கனும்!

ஸூஃபி ஞானி ஒருவர், ஆளரவமற்ற மலைப்பாங்கான பகுதியில் தனியாகப் பயணம் போய்க் கொண்டிருந்தார்.

அவர் முன் திடீரென ஒரு அரக்கன் தோன்றி "உன்னைக் கபளீகரம் பண்ணப் போகிறேன்" என்று அவரிடம் சொன்னான்.

"அப்புடியா சரி. உன்னால் முடிந்தால் முயற்சி செய்து பார். ஆனால் நான் உன்னை எளிதாக வென்றுவிட முடியும். நீ நினைப்பது போலில்லாமல், நான் உன்னைவிட அதிக பலசாலி" என்று பதில் சொன்னார் அந்த ஸூஃபி.

"நீ சொல்வது முட்டாள்தனமான பேச்சு. நீ ஒரு ஸூஃபி. உனக்கு ஆன்மீக விடயங்களில் தான் அக்கறை இருக்கும். நீ என்னை வெல்ல முடியாது. என்னிடம் அசுர மிருகபலம் இருக்கிறது. உன்



னைவிட முப்பது மடங்கு பெரியவன்" என்று பதில் சொன்னான் அந்தப் பிணந்தின்னி அரக்கன்.

"உனக்கு பலப்பரீட்சை செய்து பார்க்கும் ஆசையிருந்தால் இந்தக் கல்லை எடுத்துச் சாறாகப் பிழி பார்ப்போம்" என்று சொல்லிவிட்டு ஒரு சிறு பாறாங்கல்லை எடுத்து அந்த அரக்கனிடம் கொடுத்தார் ஸூஃபி.

எவ்வளவு முயன்றும், ஸூஃபி சொன்னபடி, அந்த அரக்கனால் செய்ய முடியவில்லை.

"அது சாத்தியமில்லை. இந்தக் கல்லில் எந்த நீரும் கிடையாது. இருந்தால் அதை எனக்கு நீ காட்டும்" என்று சொன்னான் அரக்கன். ஸூஃபி அந்த அரையிருட்டு நேரத்தில் அந்தக் கல்லைத் திரும்ப வாங்கினார். தன் பையிலிருந்து ஒரு முட்டையை எடுத்து, கல்லையும் முட்டையையும் சேர்த்துப் பிழிந்தார் ஸூஃபி.

நீர் வழிவதைக்கண்ட அரக்கன் ஆச்சரியப்பட்டுப் போனான். மக்கள் புரியாத விடயத்தினைக் கண்டு அசந்து போய் அதன்மேல் அளவுக்கதிகமாக மதிப்பு வைக்கத் தொடங்குவர்.

"நான் இதைப் பற்றி யோசிக்க வேண்டும். என்னுடைய விருந்தாளியாக இன்றிரவு என் குகையில் தங்குங்கள்" என்று ஸூஃபிக்கு உபசார வார்த்தைகள் சொன்னான் அரக்கன்.

ஸூஃபியும் அரக்கனுடன் போனார். அரக்கனின் குகை அவனால் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான வழிப் பயணிகளின் வைர வைடூரியங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாயக் கதைகளில் வரும் அலாவுதீனின் அற்புதக் குகை போலவே அது இருந்தது.

"என்னுடைய பக்கத்தில் படுத்துத் தூங்கு. காலையில் மற்ற விடயங்களைப் பேசிக் கொள்வோம்" என்று ஸூஃபியிடம் சொல்லி விட்டு படுத்தவுடன் தூங்கிவிட்டான் அரக்கன்.

தான் ஏமாற்றப் படுவோம் என்பதை உள்ளுணர்வால் உணர்ந்த ஸூஃபி, தந்திரமாக தான் படுக்கையில் இருப்பது போன்ற ஏற்பாடுகளைப் பண்ணி விட்டுத் தூரப்போய் ஒளிந்து கொண்டார்.

(தொடரும்....)

# 14 09.2017 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1812 - நெப்போலியப் போர்கள்: நெப்போலியனின் படைகள் மொஸ்கோவினுள் நுழைந்தன. ரஷ்யப் படைகள் நகரை விட்டு விலகியதும் மொஸ்கோவில் தீ பரவ ஆரம்பித்தது.
- 1846 - யாங் பகதூர் ராணாவும் அவரது சகோதரர்களும் நேபாளத்தின் பிரதமர் உட்பட 40 அரச குடும்பத்தினரைப் படுகொலை செய்தனர்.
- 1886 - தட்டச்சுப் பொறியின் நாடா கண்டுபிடிக்கப்பட்டது.
- 1901 - அமெரிக்க ஜனாதிபதி வில்லியம் மக்கின்லி செப் 6இல் இடம்பெற்ற கொலைமுயற்சியின் பின்னர் இறந்தார்.
- 1917 - உருசியா அதிகாரபூர்வமாகக் குடியரசானது.
- 1959 - சோவியத்தின் லூனா 2 விண்கலம் சந்திரனில்மோதியது. சந்திரனில் இறங்கிய மனிதனால் அமைக்கப்பட்ட முதலாவது விண்கலம் இதுவே.
- 1960 - எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு (ஒப்பெக்) உருவாக்கப்பட்டது.
- 1962 - கொங்கோ மக்களாட்சிக் குடியரசில் இராணுவத் தளபதி ஜோசப் மோபுட்டு இராணுவப் புரட்சியை மேற்கொண்டு பிரதமர் பத்திரிசு லுமும்பாவை அரசு பதவியில் இருந்து கலைத்தார்.
- 1979 - ஹபிசுல்லா அமீனின் கட்டளைப் படி ஆப்கானிஸ்தான் அரசுத்தலைவர் நூர் முகம்மது தராக்கி படுகொலை செய்யப்பட்டார். ஹபிசுல்லா அமீன் புதிய அரசுத் தலைவர் ஆனார்.
- 1982 - லெபனானின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பசீர் ஜெமாயெல் படுகொலை செய்யப்பட்டார்.
- 1984 - ஜோ கிட்டிங்கர் வளிமக் கூண்டில் அத்திலாந்திக் பெருங்கடலைத் தாண்டிய முதல் மனிதர் என்ற பெருமையைப் பெற்றார்.
- 1999 - கிரிபட்டி, நௌரு, டொங்கா ஆகியன ஐ.நா. அவையில் இணைந்தன.
- 2000 - எம்எஸ் டொஸ் கடைசித் திருத்தம் வெளியிடப்பட்டது.
- 2000 - விண்டோஸ் மில்லேனியம் வெளியிடப் பட்டது.
- 2003 - சுவீடனில் இடம்பெற்ற மக்கள் வாக்கெடுப்பில் யூரோ நாணயத்தை ஏற்றுக் கொள்ளும் தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.
- 2005 - நடிகர் விஜயகாந்த் தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் என்ற புதிய அரசியற் கட்சியை ஆரம்பித்தார்.
- 2008 - உருசியாவின் ஏரோபுளொட் விமானம் பேர்ம் கரை, விமான நிலையத்தில் விபத்துக்குள்ளாகியதில் அனைத்து 88 பயணிகளும் கொல்லப்பட்டனர்.

பிறப்புகள்

- 1769 - அலெக்சான்டர் ஃபொன் ஹம்போல்ட், செருமானியப் புவியியலாளர், நாடுகாண் பயணி. (இ. 1859)
- 1774 - வில்லியம் பென்டிங்கு பிரபு, பிரித்தானிய இந்தியாவின் 14வது தலைமை ஆளுநர். (இ. 1839)
- 1853 - பொன்னம்பலம் அருணாசலம், இலங்கை அரசியல்வாதி. (இ. 1924)
- 1879 - மார்கரெட் சாங்கர், அமெரிக்க செயற்பாட்டாளர். (இ. 1966)
- 1914 - சி. வி. வேலுப்பிள்ளை, இலங்கை மலையக எழுத்தாளர். (இ. 1984)
- 1922 - கு. இராமலிங்கம், தமிழ்க் கவிஞர், எழுத்தாளர். (இ. 2002)
- 1923 - ராம் ஜெத்மலானி, இந்திய சட்டத்தரணி, அரசியல்வாதி.
- 1932 - மா.க.ஈழவேந்தன் இலங்கைத் தமிழ் அரசியல்வாதி, தமிழறிஞர்.
- 1939 - சோ. பத்மநாதன், ஈழத்து எழுத்தாளர்.
- 1965 - திமித்ரி மெட்வெடெவ், உருசியாவின் 3வது அரசுத்தலைவர், பிரதமர்.
- 1973 - நாஸ், அமெரிக்க ராப் இசைக்கலைஞர்.
- 1983 - ஏமி வைன்ஹவுஸ், ஆங்கிலேய பாடகர். (இ. 2011)
- 1989 - லோகன் ஹென்டர்சன், அமெரிக்கப் பாடகர்.

இறப்புகள்

- 407 - யோவான் கிறிசோஸ்தோம், பைசாந்தியப் பேராயர், புனிதர். (பி. 347)
- 1321 - டான்டே அலிகியேரி, புளோரன்சுக் கவிஞர். (பி. 1265)
- 1852 - ஆர்தர் வெல்லஸ்லி, முதலாம் வெல்லிங்டன் பிரபு, ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர். (பி. 1769)
- 1985 - ஜான் ஹோல்ட், அமெரிக்க எழுத்தாளர், கல்வியாளர். (பி. 1923)
- 2015 - கௌதம நீலாம்பரன், தமிழக எழுத்தாளர். (பி. 1948)
- 2015 - இந்திக குணவர்தனா, இலங்கை இடதுசாரி அரசியல்வாதி. (பி. 1943)

சிறப்பு நாள்

- குழந்தைகள் நாள் (நேபாளம்)
- இந்தி மொழி நாள் (இந்தி பேசும் பகுதிகளில்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 50 | 90 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 90 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 150 | 120 | 250 | 300 |
| தக்காளி | 180 | 250 | 100 | 200 | 240 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 40 | 80 | 60 | 70 |
| கோவா | 80 | 100 | 50 | 80 | 100 | 60 |
| கரட் | 100 | 250 | 100 | 130 | 160 | 70 |
| பூசணி | 40 | 40 | 25 | 40 | 80 | 20 |
| புடோல் | 100 | 100 | 50 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 100 | 120 | 60 | 80 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 220 | 300 | 220 | 320 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 120 | 200 | 250 | 140 | 150 | 140 |
| பாகற்காய் | 150 | 300 | 150 | 160 | 240 | 200 |
| வெண்டிக்காய் | 40 | 100 | 50 | 60 | 80 | 70 |
| கருணைக் கிழங்கு | 80 | 140 | 80 | 120 | 130 | 80 |
| பயற்றங்காய் | 120 | 100 | 100 | 100 | 160 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 | 120 | 160 | 100 |
| பீற்றூட் | 40 | 40 | 25 | 50 | 80 | 40 |
| கறிமிளகாய் | 100 | 200 | 70 | 130 | 150 | 150 |
| முருங்கைக்காய் | 50 | 10 | 40 | 50 | 80 | 100 |
| போஞ்சி | 200 | 250 | 100 | 160 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 80 | — | 100 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 320 | 200 | 250 | 300 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 70 | 80 | 60-100 | 60 |
| இராசவள்ளி | 300 | 500 | 200 | 280 | 500 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 300 | 150 | — | 200 | 60 |
| முள்ளங்கி | 60 | 100 | 30 | 70 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 50 | 40 | 70 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 15 |
| [illegible] | 50 | 40 | 30 | 40 | 40 | 80 |

ஆட்டை வெட்ட வேண்டாம்.
என் தலையை வெட்டுங்கள்.
~ கௌதம புத்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பகை கொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம்

எதிலும் தர்மம் இருக்க வேண்டும். வாய்ப்புக்கள் கிடைத்து விட்டது என்பதற்காக எப்படியும் நடக்கலாம் எதுவும் செய்யலாம் என்று யார் நினைத்தாலும் அவர்கள் தலையால் அழிவர் என்பதே உலக நியதி.

எனினும் சிலர் இன்னும் இன்னும் அதர்மம் செய்கின்றனர். தங்களை யாரும் தட்டிக் கேட்க முடியாது என்று நினைத்துக் கொள்கின்றனர்.

வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு. காலமும் நேரமும் வாய்க்கும் போது வல்லவன் எழுந்து வல்லவனை அடக்குவான். இந்த நியதியை யாரும் மறந்துவிடக்கூடாது.

அடக்குமுறைகள், பழிவாங்கல்கள், அடாவடித்தனங்கள் மிக நீண்டகாலங்களுக்கு நிலைப்பதில்லை. இந்த உண்மையை இலங்கையில் முதலில் மறந்தவர்கள் பௌத்த தேரர்கள் என்பதே உண்மை.

இந்த நாட்டில் காலத்துக்கு காலம் ஏற்பட்ட இனக்கலவரங்கள் பேரினவாதத்தின் பேயாட்டங்கள் அனைத்தையும் தடுத்து நிறுத்தக்கூடிய வல்லமை பௌத்த பீடங்களிடம் இருந்த போதிலும் அவை அதைச் செய்யவில்லை.

அதன்காரணமாக இந்த நாடு தனது சொந்த மக்களையே கொன்றொழித்து உலகப் பழிக்கு ஆளாகியது.

வன்னி பெருநிலப்பரப்பில் நடந்த தமிழின அழிப்புத் தொடர்பில் சிங்கள ஆட்சியாளர்கள் எவ்வளவுதான் மறைப்புச் செய்தாலும் தமிழ் மக்களைக் கொன்றொழித்த பழியை – பாவத்தை சிங்கள ஆட்சியாளர்களும் அதற்குக் காரணமானவர்களும் அனுபவித்தே ஆவர்.

தவிர, தமிழினத்துக்குச் செய்த நிட்டூரத்தை இந்த உலகம் உள்ளவரை இலங்கையின் வரலாறு பேசிக்கொண்டே இருக்கும்.

இதற்கு மேலாக வன்னிப் போரில் மக்கள் கொல்லப்படும் போது போரை நிறுத்து, மனிதப் படுகொலையை கைவிடு என்று அதட்ட வேண்டியவர்கள் பௌத்த பிக்குகள்.

ஆனால் அவர்கள் தங்கள் கடமையை மறந்து தங்கள் கோலத்தை மறந்து கௌதம புத்தபிரானின் போதனைகளைத் துறந்து மனிதப் படுகொலைக்கு ஆதரவு கொடுத்தனர்.

கொன்ட கொள்கையைக் கைவிட்டு, சமயத்தின் வழிகாட்டல்களைக் கைவிட்டு தமிழனைக் கொல் என்று உத்தரவிட்டு அதற்கு உடந்தையாக இருந்துவிட்டு, பிரித்தோதினால் கௌதம புத்தபிரான் மன்னிப்பார் என்று நினைப்பது மகாதவறு.

எனவே இலங்கையில் தமிழ் மக்கள் உரிமை பெற்று வாழ்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதன் மூலமாக மட்டுமே பௌத்த பிக்குகள் தங்கள் பாவங்களுக்குப் பரிகாரம் தேடமுடியும்.

இதில் மல்வத்தை பீடத்தின் பீடாதிபதி அவர்கள் தமிழ் மக்கள் உரிமை பெற்று வாழ வேண்டும், இதன்மூலமே நாடு சுபீட்சத்தை அடையும் என்பதில் உறுதியாக இருப்பது மன ஆறுதலைத் தருகிறது.

இருந்தும் அவர் சார்ந்த அமைப்புக்கு ஈடாக இருக்கக்கூடிய அமைப்பினர் இலங்கை பௌத்த சிங்கள நாடு. இதைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று உறுதியாக நிற்கின்றனர்.

பரவாயில்லை, சிலர் துள்ளிக் குதிப்பார்கள். அதைப்பார்த்து பலர் அமைதியாக இருப்பார்கள். துள்ளிக் குதிப்பவர்கள் நினைப்பதெல்லாம் எங்களுக்கு எல்லோரும் பயம் என்று.

ஆனால் அடி உச்சியில் விழும்போதுதான் ஞானம் உணரப்படும்

# தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறையால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

## வட மாகாண கடற்றொழிலாளர் இணையம் கவலை

(யாழ்ப்பாணம்)

கடல் சூழலுக்கும் கடல் வளங்களுக்கும் அழிவை ஏற்படுத்தும் இழுவை மடி கொண்டு மேற்கொள்ளப்படும் மீன்பிடி முறைமையினை தடைசெய்ய மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக பாராளுமன்றினூடாக சட்டம் நிறைவேற்றப்பட்ட போதும் இன்றுவரை குறித்த சட்டம் நடைமுறைப்படுத்தப்படாமையினால் உள்ளூரில் உள்ள மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு தொடர்ந்தும் முகம்கொடுத்து வருவதாக வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் என்.எம்.ஆலம் கவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடல் சூழலுக்கும், கடல் வளங்களுக்கும் அழிவை ஏற்படுத்தும் இழுவை மடி கொண்டு செய்யும் தொழில் முறையினை தடைசெய்ய மன்னார் மாவட்டம் உட்பட வடமாகாண மீனவர்களும் சமூக ஆய்வாளர்களும் வடமாகாண கடற்றொழிலாளர் மற்றும் ஏனைய மீனவ சமாசங்களும் கடந்த பெப்ரவரி மாதம் கடற்றொழில் அமைச்சரை சந்தித்த போது முன்வைத்த கோரிக்கைக்கு அமையவும் தொடர்ந்து இத்தொழில் முறைக்கு எதிராக அரசை வற்புறுத்தியதன் நிமித்தமும் இத்தொழில் முறையின் பாதிப்பு தொடர்பாக பல முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொண்ட ஆய்வுகளின் பின்னர் கடற்றொழில் அமைச்சர் ஏற்கெனவே கடற்றொழில் சட்டத்தில் கூறப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கொண்டு வந்த திருத்தத்தை பாராளுமன்றம் ஊடாக கடந்த ஜூலை மாதம் அன்று பாராளுமன்ற பிரதிநிதிகள் அனைவரின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றி அது அரச வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்டது.

இருந்தும் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டு 2 மாதங்கள் கடந்த நிலையில் எமது கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கை சற்று குறைவடைந்திருந்தாலும் உள்ளூரில் இத்தொழில் புரிவோர் முன்பை விட பாதிக்கப்படுவதுடன் தங்களின் தொழில் நடவடிக்கைகளை கடலையண்டிய கரையோரங்களிலும் மிகவும் தீவிரமாக செய்து வருகின்றார்கள்.

இதன் காரணமாக சிறு தொழில் புரியும் மீனவர்கள் மிகவும் பாதிப்பதுடன் பட்டி வலை மற்றும் ஏனைய தொழில் செய்வோருக்கு பெரும் இழப்பையும் சேதத்தையும் ஏற்படுத்துவதுடன் கரைவலைதொழில் புரிபவர்பகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

இவ் இழுவைமடித்தொழில் முறையையும் இத் தொழில் புரிவோரையும் சில மீனவத் தலைவர்களும் அரசியல் பிரதிநிதிகளும் மதத் தலைவர்களும் கண்ணை மூடிக் கொண்டு நியாயப்படுத்துகின்றனர். இதனைவிட ஏனைய தொழில்களுக்கு நடைமுறையில் கூறப்பட்ட விடயங்களை தீவிரமாக கையாளும் கடற்றொழில் திணைக்களமும் இத்தொழில் புரிவோருக்கு சாதகமாகவே செயற்படுகின்றன.

எனவே இச்சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் செய்யும் ஒவ்வொரு நிமிடமும் வடமாகாண மீனவர்களின் வாழ்வாதாரம் எதிர்காலத்தில் இழக்கப்படப்போவதை இத்தொழிலை நியாயப்படுத்துபவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே நிறைவேற்றப்பட்ட இழுவை மடிச்சட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்த கடற்றொழில் திணைகளம் மற்றும் கடற்படையினரை பணிப்பதுடன் வெளிநாட்டுப் படகுகளுக்கான ஒழுங்கு விதிச் சட்ட திருத்தத்திற்கு தற்போது சட்டமா அதிபரின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதால் இச்சட்டத்தை விரைவாக பாராளுமன்றில் நிறைவேற்றி இந்திய தரப்புடனான மீனவர் தொடர்பான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளுமாறும் ஏற்கெனவே விடுவிக்க இணங்கப்பட்ட படகுகள் போக மீதமாக இருக்கும் படகுகளுக்கு இச்சட்டம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஆலம் தெரிவித்தார்.

மேலும் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை கடற்றொழில் அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். (செ-11)

# வாகன விபத்து; சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

பேருந்தில் இருந்து இறங்கிய வேளையில் ஆட்டோவுடன் மோதுண்டு சிறுவன் ஒருவன் படுகாயம் அடைந்துள்ளான்.

கிளிநொச்சியில் இருந்து கொய்யாத்தோட்டம் பகுதிக்கு தனது குடும்பத்தினருடன் திருமண நிகழ்வு ஒன்றில் பங்கேற்பதற்காக பேருந்தில் சென்ற சிறுவனே அவசரத்துடன் பேருந்திலிருந்து கீழே இறங்கியுள்ளான்.

இதன்போது பின்னால் வந்த ஆட்டோ சிறுவனை சடுதியாக மோதியதில் படுகாயமடைய நேரிட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்றுக் காலை 9 மணிக்கு யாழ். கொய்யாத்தோட்டச் சந்தியில் இடம்பெற்றது.

இதில் கிளிநொச்சி அக்கிரான் பகுதியைச் சேர்ந்த மதியழகன் ஸ்பரியான் (வயது-7) என்ற சிறுவனே காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (செ-7,30)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**முளைப்பாலிகை வழிபாடு**

தமிழ்த் திருமணங்களில் முளைப்பாலிகை வழிபாடு மிக முக்கியமாக இடம்பெறுதல் வேண்டும். முளைப்பாலிகை வழிபாட்டின் நோக்கம் எந்தச் செயலைச் செய்தாலும் பிறரது உள்ளத்தை அறிந்தே செய்யவேண்டும் என்பதாகும். திருமண விழாவில் இறைவனின் திருவுளத்தை அறிந்து கொள்வதற்கே முளைப்பாலிகை வழிபாடு செய்தல் வேண்டும். (தொடரும்)

# சத்திய தரிசனம்



## ஒற்றுமையாக இருப்போம்

❖ வயதாகிவிட்டது என்ற உணர்வையும், அதனால் நம்மால் ஏதும் செய்ய முடியவில்லையே என்ற சோர்வையும் விட்டுத் தள்ளுங்கள். நடந்து போனதை எண்ணில் மனச்சுமையை வளர்த்துக் கொள்ளாதீர்கள். இருப்பதை உற்சாத்துடன் ஏற்றுக் கொள்ளுங்கள். செய்யும் செயலில் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

❖ பிறருக்கு உதவி செய்வதில் தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது என்ற உண்மையை எப்போதும் நினைவில் வைத்துக் கொளளுங்கள். பொறாமையால் மனம் புழுங்கினால் அந்த இடம் நரகம். நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுங்கள். நல்ல எண்ணங்கள் நம் மனதில் தெய்வீக ஆற்றலை உண்டாக்குகின்றன.

❖ உலக சம்பந்தமான பெயருக்கும் புகழுக்கும் கௌரவத்திற்கும் ஆசைப்பட்டு உங்களுடைய நாணயத்தைத் துறக்காதீர்கள். ஒற்றுமையையும், ஒன்றாக உழைக்கும் மனப்பான்மையையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.

❖ தூய சிந்தனையாக, மனசாட்சியாக நம் இதயத்தில் இருப்பவனே, இறைவன் அவரை தேடி ஓட வேண்டிய அவசியம் இல்லை.

❖ உடல் நோய்க்கு பல மருந்துகள் உண்டு. ஆனால். உள்ள நோய்க்கு தன்னலமற்ற சேவையே மருந்து.




# திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

வேழம் இங்கும் அங்குமாய் ஓடிப் போக்குக் காட்டியது. கொஞ்சம் கொஞ்சமாய்க் காட்டின் மறு எல்லை வரை அது அவனை இட்டுச் சென்றது. ஒரு திருப்பத்தில் திரும்பியது.

ஸ்ரீநிவாசனும் அதைத் தொடர்ந்து அந்தத் திருப்பத்தில் திரும்பினான்.

அங்கே யானை இல்லை. எங்கே சென்றிருக்கக்கூடும் என்பதற்கு எந்தவிதத் தடயமும் இல்லை.

வேட்டையாடும் மும்முரத்தில் வெகுதூரம் வந்துவிட்ட அவனுக்கு நாக்கு உலர்ந்தது. தொண்டை வரண்டது. தாகம் எடுத்தது. (தொடரும்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை வவுனியா பிரதேசத்தில அட்டம்பஸ்கட கிராமம், தவசிக்குளம கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# குத்துச்சண்டையில் வரலாற்றுச்சாதனை படைத்த முல்லை.வித்தியானந்தா கல்லூரி






பாடசாலை குத்துச் சண்டை சங்கத்தினரால் நடத்தப்படும் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான 48 ஆவது டி.பி. ஜெயா ஞாபகார்த்த தேசிய குத்துச்சண்டை போட்டியில் முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி நான்கு தங்கப் பதக்கங்களை கைப்பற்றி அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்று வரலாற்றுச் சாதனையை நிலைநாட்டியுள்ளது.

நாடு பூராகவும் 48 பாடசாலைகளைச் சேர்ந்த 267 வீரர்கள் பங்குபற்றிய 16 பிரிவுகளைக் கொண்ட இந்த தேசிய போட்டித்தொடர் கடந்த 8 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நான்கு நாட்கள் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியின் குத்துச் சண்டை திடலில் இடம்பெற்று வந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முதன்முறையாக இந்தப் போட்டி இடம்பெற்றதோடு முல்லைத்தீவு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி 6 பாடசாலைகள் கலந்து கொண்டிருந்தன.

இதில் முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரியை சேர்ந்த வி.சாம்சன் 35 கிலோ - 37 கிலோ எடைப்பிரிவில் தங்கம், 52கிலோ -56கிலோ எடைப்பிரிவில் எம்.தனுஜன் தங்கம், 56கிலோ - 60கிலோ எடைப்பிரிவில் வை.ஜனனன் தங்கம், 60 கிலோ - 64 கிலோ எடைப்பிரிவில் வை. கிரிதுரன் தங்கம் என நான்கு தங்கப்பதக்கங்களை சுவீகரித்து தேசிய சாதனையை நிலை நாட்டினர்.

இந்தப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த முத்தையன்கட்டு வலது கரை (அ.த.க) பாடசாலை வீரர் ஏ.தமிழரசன் 43 கிலோ - 45 கிலோ எடைப் பிரிவில் தாங்கப்பதக்கத்தினையும் முத்தையன்கட்டு இடதுகரை (அ.த.க) பாடசாலை வீரர் பி.ரூபன் வெள்ளிப் பதக்கத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

வடக்கில் குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலைகளுக்கிடையில் குத்துச் சண்டைப் போட்டி கடந்த 2012 ஆம் ஆண்டுக்குப் பின்னரே ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில், தேசிய மட்டத்தில் பல்வேறு வகையான சாதனைகளை நிலைநாட்டும் வீரர்கள் இந்த மாவட்டத்தில் அதிகமாகவுள்ளனர் என்பது தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குறிப்பாக குத்துச் சண்டை பயிற்சியின் பிரதம ஆசிரியர் மதுசங்க மற்றும் வள்ளுவன் மாஸ்ரர் ஆகியோரின் பயிற்சியால் வளர்க்கப்படுகின்ற இம் மாணவர்கள் சிறந்த மாணவர்களாக மாவட்டத்திற்கு பெருமை சேர்த்து வருகின்றார்கள்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற தேசிய மாவட்ட போட்டிகளிலும் தங்கப் பதக்கங்களைப் பெற்று முன்னிலை வகித்தவர்கள். இந்த ஆண்டுக்கான தேசிய குத்துச்சண்டை போட்டி முதன்முதலாக வட மாகாணத்தில் நடைபெறுவது என்பது பெருமைக்குரியது.

வடக்கில் உள்ள மாணவர்களின் திறமைகளை விளையாட்டில் வெளிக்கொணர இதுவொரு நல்ல சந்தர்ப்பமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-281)

# இறுதி ஆட்டத்திற்கு தெரிவாகியது கொடுக்குளாய் சக்தி வேல் வி.கழகம்




வத்திராயன்.உதயசூரியன் வி.க. நடத்தும் உதைபந்தாட்டத்தின் கடந்த 12.09.2017 அன்று இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் கொடுக்குளாய் சக்திவேல் வி.க மற்றும் தாளையடி சென். அன்ரனிஸ் வி.க. ஆகியன மோதின. விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் சக்திவேல் வி.க. 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இப் போட்டியில் சிறப்பாக விளையாடிய சக்திவேல் வி.க வீரர் சரண் போட்டியின் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (க)

# கலட்டி ஐக்கியத்தை வென்றது ஆனைக்கோட்டை யூனியன் அணி




மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும்நினைவாக நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் கடந்த 11.09. 2017 அன்று நடைபெற்ற முதலாவதுபோட்டியில்ஆனைக் கோட்டை யூனியன் அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய அணி மோதியது. ஆட்டத்தில்ஆனைக் கோட்டை யூனியன் அணி 3-0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக ஆனைக் கோட்டை யூனியன் அணி வீரர் சுயந்தன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# சமநிலை தவிர்ப்பு உதையில் இறுதிப் போட்டியில் யங்கம்பன்ஸ்




வத்திராயன் உதய சூரியன் விளையாட்டுக் கழகம். நடத்தும் உதைப்பந்தாட்டத்தின் கடந்த 12.09.2017 அன்று இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் வி.க.மற்றும் கம்பர்மலை யங்கம்பன்ஸ்வி.க. ஆகியன மோதின. விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் இரண்டு அணியினரும் போட்டி நேர முடிவில் ஒவ்வொரு கோலினை போட்டனர். பின்னர் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

சமநிலை தவிர்ப்பு உதை மூலம் யங்கம்பன்ஸ் வி.க. வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டது.

இப் போட்டியில் சிறப்பாக விளையாடிய யங்கம்பன்ஸ் வி.க. வீரர் பிரதாபன் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார் (க)

# சென்.அன்ரனிஸ் வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## பாரதி வெற்றி




மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவாக நடத்தப்பட்ட உதைபந்தாட்ட போட்டியில் கடந்த 11.09.2017 அன்று நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் பொலிகை பாரதி அணியை எதிர்த்து உரும்பிராய் மைக்கல் அணி மோதியது. ஆட்டத்தில் பொலிகை பாரதி அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பொலிகை பாரதி அணி சார்பாக நிதர்சன்- 02 கோலினையும் றொபின்சன், அனுஜன்ன தலா 1 கோலினை போட்டனர்.

போட்டியில் ஆட்ட நாயகனாக பொலிகை பாரதி அணி வீரர் நிதர்சன் தெரிவு செய்யப்பட்டார். (க)

## வவுனியா மூன்று...

வவுனியா மூன்று முறிப்பு பகுதியிலுள்ள வயல் காணியிலிருந்து வெடிக்காத நிலையில் மூன்று 3 கைக் குண்டுகளை நேற்று மீட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, மூன்றுமுறிப்பு பகுதியிலுள்ள வயல் காணியை நேற்று துப்புரவு செய்து கொண்டிருக்கும் போது முற்பகல் 11.45 மணியளவில் அப்பகுதியில் வெடிக்காத நிலையிலிருந்த 3 கைக் குண்டுகளை அக்காணியை துப்புரவு செய்தவர்கள் அவதானித்துள்ளனர்.

இதையடுத்து அங்கிருந்தவர்கள் பொலிஸாரிடம் மேற்கொண்ட முறைப்பாட்டினையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் அப்பகுதியை சுற்றிப் பார்வையிட்டனர். இதன் போது மேலும் அப்பகுதியில் குண்டுகள் இருக்கக்கூடும் எனச் சந்தேகம் தெரிவித்த பொலிஸார் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று அப்பகுதியில் மேலும் அகழ்வு பணியை மேற்கொள்ள விருப்பதாக குறிப்பிட்டதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-250)

## கறுப்பு கண்ணாடி...

இதே போன்று சுவிஸ்குமார் சார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணியும் கறுப்பு கண்ணாடி அணிந்து நீதிபதி இளஞ்செழியனை பார்வையிட்டார்.

புங்குடுதீவில் வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவியான சிவலோகநாதன் வித்தியாவின் வழக்கு தமிழ்மொழி பேசும் மேல் நீதிமன்ற நீதிபதிகளான பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையிலான அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய ரயல் அட்பார் நீதாய விளக்கத்தில் தொடர் விசாரணையாக நடைபெற்று வருகின்றது.

இந்த விசாரணையில் நேற்றைய தினம் எதிரி தரப்பு சட்டத்தரணிகளின் சமர்ப்பணங்கள் நடைபெற்றன. இதன் போது 4ஆம், 07ஆம், 09ஆம் எதிரிகள் சார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணி ஜெகதீஸ்வரன், குறித்த வழக்கின் கண்கண்ட சாட்சியம் என சட்டமா அதிபர் திணைக்களத்தால் கூறப்படுகின்ற இலங்கேஸ்வரன் என்பவர் புங்குடுதீவு ஆலடி சந்தியில் நின்றதாகவும் அப்போது சுவிஸ் குமார் மற்றும் அவரது சகாக்கள், வெள்ளை வான் ஒன்றில் நின்றதாகவும், அப்போது சுவிஸ்குமார் கறுப்பு கண்ணாடி அணிந்து கொண்டிருந்ததாகவும், அந்த வழியாக வித்தியா சென்ற போது, சுவிஸ்குமார் வித்தியாவையே பார்த்து கொண்டிருந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இது தொடர்பில் கேள்வி எழுப்பிய சட்டத்தரணி ஜெகதீஸ்வரன், கறுப்பு கண்ணாடி அணிந்துள்ள ஒருவர் எங்கே பார்க்கின்றார் என எவ்வாறு கூற முடியும்?

நெல்சன் மண்டேலா, ஒபாமா போன்ற உலக பிரசித்தி பெற்றவர்களின் பாதுகாவலர்கள்தான் இவ்வாறு கறுப்பு கண்ணாடி அணிந்து கொண்டிருப்பார்கள். தாங்கள் எங்கே பார்க்கின்றோம் என தமக்கு முன்னால் உள்ளவர்களுக்கு தெரியக்கூடாது என்பதற்காகவே அவர்கள் அவ்வாறு கறுப்புக் கண்ணாடி அணிந்திருப்பார்கள். இந்த நிலையில் அரசு தரப்பு சாட்சி சுவிஸ்குமார் எங்கே பார்த்தார் என்பதனை எவ்வாறு கூறினார்? என தனது வாதத்தை முன்வைத்தார்.

மேலும் தன்னுடன் கொண்டுவந்த கறுப்பு கண்ணாடி ஒன்றையும் காட்டினார். இதனை பார்த்த நீதிபதி இளஞ்செழியன் சட்டத்தரணியை கண்ணாடி அணியுமாறு கூறி தன்னை பார்த்து கொண்டு வலது இடது பக்கமுள்ள ஊடகவியலாளர்களை கண்ணாடி வழியாக பார்க்குமாறு கூறினார். எனினும் சட்டத்தரணி தலையை வலது பக்கம் திருப்ப முயல, இவ்வாறு தான் இலங்கேஸ்வரனும் சுவிஸ்குமார் எங்கே பார்த்திருப்பார் என கூறியிருக்கின்றார் என நீதிபதி கூறினார்.

எனினும் அதனை மறுத்த சட்டத்தரணி 15 அடி தூரத்தில் ஒருவர் நின்றால், அவரை கறுப்பு கண்ணாடி அணிந்து கொண்டு பார்த்தால் எங்கே பார்க்கின்றார்? என கூற முடியாது என கூறினார். இதனை அடுத்து சட்டத்தரணி வைத்திருந்த கண்ணாடியை தான் வாங்கி அணிந்த நீதிபதி இளஞ்செழியன் அதனூடாக சட்டத்தரணியை பார்வையிட்டார். (செ-4)

## கடும் நிபந்தனை...

அத்துடன் கடவுச்சீட்டு நீதிமன்றில் ஒப்படைக்கப்படவேண்டும், வெளிநாடு செல்வதற்கு தடை, மாதத்தின் முதல் திங்கட்கிழமை குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் கையொப்பம் இடவேண்டும் என கடும் நிபந்தனைகள் மன்றினால் விதிக்கப்பட்டது.

அதேவேளை இந்த வழக்கின் மற்றுமொரு சந்தேக நபரான யாழ்.பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய முன்னாள் உப பொலிஸ் பரிசோதகர் சு.ஸ்ரீகஜன் தலைமறைவாகியுள்ளார். அவருக்கு எதிராக மன்றினால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டு உள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (செ-4)

## திருடர்கள் மூவர்...

4 மணியளவில் மூன்று நபர்கள் அனுமதி இன்றி உள்நுழைந்துள்ளார்கள்.

வீட்டின் வாசல்கள் திறந்து காணப்பட்டதை அடுத்து இவர்கள் திருடும் நோக்கத்துடன் உள்ளே சென்று தமது கைவரிசையை காட்டத்தொடங்கியுள்ளார்கள்.

எதேச்சியாக இதனை அவதானித்த அயலவர்கள் ஒன்றிணைந்து குறித்த நபர்களை பிடித்து சரமாரியாக தாக்கி நையப்புடைத்துள்ளனர்.

பின்னர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து அவ்விடத்துக்கு வந்த கோப்பாய் பொலிஸார் குறித்த சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

மேற்படி சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பெருந்திரளான மக்கள் கூடியிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்.பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 24, 26, 28 ஆகிய வயதுடையவர்கள் என தெரிவித்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (செ-9)

## தம்பதியரை...

மணியளவில் இளவாலை வடக்கு புலுவத்தை பகுதியில் உள்ள வீடொன்றில் இடம் பெற்றுள்ளது.

இதில் சுமார் 6 இலட்சம் ரூபா மட்டும் பெறுமதியானதாக நகைகளும் ரூபா 65 ஆயிரம் பணமும் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் பொலிஸாரிடமும் முறையிடப்பட்டுள்ளது.

முன்னதாக அதிகாலை வேளையில் வீட்டுக் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த வயோதிப தம்பதிகளை தாக்கி அச்சுறுத்தியுள்ளனர். தொடர்ந்து வீட்டினுள் வைக்கப்பட்டிருந்த தங்க நகைகள் மற்றும் பணத்தை அச்சுறுத்தி அபகரித்துக் கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

திருடர்களின் தாக்குதலில் காயமடைந்த வயோதிபரான கணவன் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்.

குறித்த திருட்டை நிகழ்த்தியவர்கள் சுமார் 20-25 வயது மதிக்கத்தக்கவர்கள் என பொலிஸில் முறையிடப்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை இளவாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-104)

## வித்தியா படுகொலை...

மாக இரு கண்கண்ட சாட்சியங்களாக சட்டமா அதிபர் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்ட இருவரையும் மற்றும் சிறைச்சாலையில் சுவிஸ்குமாரை சந்தித்த இப்லா என்பவரையும் மையமாக கொண்டே வழக்கு நகர்கின்றது.

இந்த வழக்கின் சந்தேக நபர்களான பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார், மகாலிங்கம் சசிதரன், தில்லைநாதன் சந்திரகாசன், சிவதேவன் துஷாந்த், பழனி ரூபசிங்கம் குகநாதன், ஜெயதரன் கோகிலன், மற்றும் மகாலிங்கம் சசிக்குமார் ஆகியோர் தற்போதும் விளக்கமறியலில் உள்ளார்கள். இவர்களில் முதலாம் மற்றும் ஏழாம் சந்தே நபர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்கு போதிய சாட்சியங்கள் இல்லை என சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் ஆஜராகி இருந்த பிரதி சொலிற்றர் ஜெனரல் குமார்ரட்ணம் நேற்று முன்தினம் நடைபெற்ற தொகுப்புரையில் கூறியிருந்தார்.

எனினும் நேற்றைய தினம் நடைபெற்ற எதிர்த்தரப்பு சட்டத்தரணிகளின் சமர்ப்பணத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் கொண்டுவரப்பட்டுள்ள சாட்சிகள் அனைத்துமே சோடிக்கப்பட்ட சாட்சிகள் என கூறி அதற்கான ஆதாரங்களையும் மன்றில் முன்வைத்தனர். மேலும் தமது தரப்பு வாதிகள் அனைவரையும் குற்றமற்றவர்கள் என கருதி விடுதலை செய்யுமாறும் சட்டத்தரணிகள் தமது வாதத்தை முன்வைத்தனர். இவ்வாறான நிலையில்தான் எதிர்வரும் 27ஆம் திகதி தீர்ப்பிற்காக வழக்கு திகதியிடப்பட்டுள்ளது. (செ-4)

## இளைஞன் மீது...

சுதுமலை அம்மன் கோவில் சந்திப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இதில் சுதுமலை அம்மன் கோவிலடியைச் சேர்ந்த புவனேந்திரன் ரவிக்கிருஸ்ணன் (வயது 28) என்ற இளைஞனே படுகாயம் அடைந்துள்ளார்.

படுகாயம் அடைந்த இளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில் வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-30,7)

## வித்தியா படுகொலை வழக்கில்...

சிவலோகநாதன் வித்தியாவின் வழக்கு தமிழ் மொழி பேசும் மேல் நீதிமன்ற நீதிபதிகளான பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையிலான அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய ரயல் அட்பார் நீதாய விளக்கத்தில் தொடர் விசாரணையாக நடைபெற்று வருகின்றது.

**மோசடி செய்து சிறையில் இருப்பவர் அரச தரப்பு சாட்சி!**

இந்த வழக்கு விசாரணையில் நேற்றைய தினம் எதிரிகள் தரப்பு தொகுப்புரை சமர்ப்பணம் நடைபெற்றன. இதன்போதே எதிரிகள் சார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணிகளான மகிந்த ஜெயவர்த்தன, ரகுபதி, ஜெகதீஸ்வரன் ஆகியோர் மேற்படி சமர்ப்பணங்களை செய்துள்ளனர். குறித்த வழக்கில் காத்திரமான சாட்சியங்கள் இல்லை. சட்டமா அதிபர் திணைக்களம் சாட்சியாக கூறியுள்ள இப்லா என்பவர் மீது ஏற்கெனவே பல மோசடி வழக்குகள் உள்ளன. இவ்வாறான ஒரு மோசடி நபரை எவ்வாறு சட்டமா அதிபர் திணைக்களம் சாட்சியாக கருத முடியும்? இந்த வழக்கில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் போதிய சாட்சியங்கள் எதனையும் கொண்டுவர முடியவில்லை. அதனால் சோடிக்கப்பட்ட சாட்சியங்களை கொண்டு பொய்ச் சாட்சி சொல்லியுள்ளதாக சட்டத்தரணி மகிந்த ஜெயவர்த்தன முதலாவதாக சமர்ப்பணம் செய்தார்.

தொடர்ந்து சட்டத்தரணி ரகுபதி சமர்ப்பணங்களை முன்வைத்தார், அதில் அரச சாட்சியாக மாறிய வழக்கின் பத்தாம் சந்தேக நபரான சுரேஷ்கரன் தன்னை பாதுகாத்து கொள்வதற்காகவே அவர் சாட்சியாக மாறியுள்ளார். இரண்டாவது கண்கண்ட சாட்சியான நடராசா புவனேஸ்வரன் எனப்படும் மாப்பிள்ளை என்பவரும் நாள் முழுக்க குடிகாரனாக உள்ளார். அவ்வாறு உள்ள ஒருவர் எவ்வாறு சம்பவத்தை நேரில் கண்டதாக கூறமுடியும்? முஹமட் இப்லா என்பவர் மோசடி நபர். அவர் சி.ஐ.டி.யினரிடம் இருந்து நன்மைகளை பெறுவதற்காக பொய்ச் சாட்சி கூறியிருக்க முடியும்.

**இயலாமையின் வெளிப்பாடே பயங்கரவாத தடைச்சட்டம்**

இந்த நிலையில் தான் அரச தரப்பு தங்களுடைய இயலாமையை மறைப்பதற்காக குறித்த வழக்கின் சந்தேக நபர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து நாலாம் மாடியில் வைத்து விசாரணை செய்தது. மற்றும் ரயல் அட்பார் முறையில் விசாரணையை ஆரம்பித்தது என பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்த சட்டத்தரணி ரகுபதி, குறித்த கொலை நடைபெற்ற நோக்கங்களாக இரு விடயங்களை சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார். அதில் முதலாவதாக வித்தியாவை துசாந்தன் ஒருதலைபட்சமாக காதல் செய்ததாகவும் அதனை மறுத்த வித்தியாவோடு தவறாக நடக்க முற்பட்டதாகவும் அதனால் வித்தியா துசாந்தனின் கன்னத்தில் செருப்பால் அடித்ததாவும் கூறியுள்ளனர். இரண்டாவது நோக்கமாக ஆசியாவை சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவரை வன்புணர்ந்து கொலை செய்யும் வீடியோ ஒன்றை பெற்று சுவிஸில் உள்ள பாதாள உலக குழுவினருக்கு வழங்குவதற்காகவுமே கொலை நடைபெற்றுள்ளது என கூறியுள்ளனர்.

எனினும் வித்தியாவின் தாயாரான சிவலோகநாதன் சரஸ்வதி தனது மகளுக்கு எந்த காதல் பிரச்சினையும் இல்லை என 13.05.2015 அன்று பிரதி சொலிற்றர் ஜெனரல் குமார்ரட்ணத்திடம் வழங்கிய வாக்குமூலத்தில் கூறியுள்ளார். ஆகவே சட்டமா அதிபர் திணைக்களம் கூறியுள்ள கொலைக்கான முதலாவது நோக்கம் பொய்யாக சோடிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது குறித்த கொலை சம்பவத்தின் போது காணொளி பதிவு செய்யப்பட்டமை தொடர்பில் அரச தரப்பால் நிரூபிக்க முடியாமல் போய்விட்டது. எனவே இரண்டாவது நோக்கமும் பொய்யாகவே அரச தரப்பால் சோடிக்கப்பட்டுள்ளது. அடுத்து பெரியாம்பி தான் வித்தியா சென்ற துவிச்சக்கர வண்டியை முதலில் நிறுத்தியாக அரச தரப்பு சாட்சியான சுரேஷ்கரன் கூறியுள்ளார். எனினும் குறுக்கு விசாரணையின் போது சுரேஷ்கரன் தான் துவிச்சக்கர வண்டியை நிறுத்தியதாக புவனேஸ்வரன் கூறியுள்ளார். இது முரண்பாடான சாட்சியமாகும்.

**வன்புணர்வு, கொலை எங்கு நடைபெற்றது?**

குறித்த கொலை பாழடைந்த வீட்டில் தான நடைபெற்றது என அரச தரப்பு கூறியுள்ளது. இது சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? வன்புணர்வு செய்யப்பட்ட இடம் மற்றும் கொலை செய்யப்பட்ட இடங்களை ஆய்வு செய்ததாகவும், எனினும் அங்கு ஒரு தடயம் கூட கிடைக்கவில்லை என தடயவியல் பொலிஸ் அதிகாரி சாட்சியமளித்துள்ளார். யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி மயூரனும் வித்தியா எங்கு வன்புணரப்பட்டார்? கொலை செய்யப்பட்டார்? என்பது கூற முடியாது என தெரிவித்துள்ளார். இவ்வாறு அரசு தரப்பு சாட்சிகள் எல்லாமே கட்டமைக்கப்பட்ட உண்மைகள் கொண்ட சாட்சிகளாகதான் உள்ளன.

**வித்தியாவின் பிடரியில் துப்பாக்கியால் தாக்கிய காயம் !**

வித்தியாவின் பிடரியில் காணப்படும் காயம் துப்பாக்கி ஒன்றின் பின்பக்கத்தினால் தாக்கப்பட்ட காயமாகும். இதனை மறைப்பதற்கே மரபணு பரிசோதனை வேண்டுமென்றே தாமதிக்கப்பட்டு, அழிவடைய வைக்கப்பட்டுள்ளது. வித்தியாவை ஒரேயொரு நபரே வன்புணர்வு செய்துள்ளார் என சட்டத்தரணி ரகுபதி கூறினார். மேலும் சந்தேகத்திற்கு அப்பால் அரசு தரப்பில் சாட்சிகள் நிரூபிக்கப்படவில்லை எனவும், எதிரிகள் சார்பில் நியாயமான சந்தேகங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறி குறித்த கொலை சம்பவம் அங்கு நடைபெறவில்லை எனவும் மறுத்திருந்தார்.

இறுதியாக சமர்ப்பணம் செய்த சட்டத்தரணி ஜெகதீஸ்வரன், அரச தரப்பின் சாட்சிகள் இந்த வழக்கின் எதிரிகளோடு எந்த வகையிலும் தொடர்பு படவில்லை. கண்கண்ட சாட்சியாக கூறப்படுகின்ற சுரேஷ்கரனின் சாட்சியம் இந்த எதிரிகளின் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க போதுமானதாக இல்லை என கூறினார்.

**அரச சாட்சிகளிடையே முரண்பாடு**

மேலும் மாப்பிள்ளை எனப்படும் புவனேஸ்வரன், வித்தியா கொல்லப்படுவதற்கு முன்னர் கள்ளு குடிக்க வரும் போது சுவிஸ்குமார் மற்றும் அவரோடு வந்தவர்கள் கதைப்பதில்லை என கூறியுள்ளார்.

வித்தியா வன்புணரப்படும் போது எடுக்கப்பட்ட காணொளியை பெரியாம்பி தான் சுவிஸ குமாரிடம் கொடுத்ததாக மாப்பிள்ளை கூறினார். பின்னர் சந்திரகாசனிடம் கொடுத்ததாக கூறியுள்ளார். இதுவும் முரண்பாடானதாகும். ஆகவே மாப்பிள்ளையிடம் வீடியோ கொடுக்கப்பட்டதனை காணவில்லை. இவ்வாறுதான் இலங்கேஸ்வரனின் சாட்சியமும் பொய் என ஆதாரங்களுடன் காட்டியுள்ளேன். முஹமட் இப்லா என்பவரை வைத்து சட்டமா அதிபர் திணைக்களம் திரைக்கதை வசனம் ஒன்றை எழுதியுள்ளது. சுவிஸில் கோப்பை கழுவி கொண்டிருந்த ஒருவரை அங்குள்ள மாபியா கும்பல் ஒன்று அணுகி புங்குடுதீவில் உள்ள பாடசாலை பெண்ணொருவரை வன்புணர்ந்து கொலை செய்யும் வீடியோ ஒன்று தேவை என கூறி இங்கு அனுப்பி வைத்ததாக கதை எழுதியுள்ளது.

ஆசியாவில் பெண்கள் கிடைக்காமல் புங்குடுதீவில் தான் இந்த மாபியா கும்பல் பெண்களை தேடியுள்ளது. இதெல்லாம் நம்புவது போன்றா உள்ளது? சிறைச்சாலை உத்தியோகஸ்தர் அறையில் நிஷாந்த சில்வா வாக்குமூலம் பதிவு செய்யும் போது வைத்தியர்கள் சிலர் நின்றதாக இப்லா கூறியுள்ளார். எனினும் நிஷாந்த சில்வா வைத்தியர்கள் யாரையும் அவதானிக்கவில்லை என கூறியுள்ளார். ஆகவே அரசு தரப்பு சாட்சியங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடானதாக உள்ளதோடு, நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை. எனவே இந்தளவு காலமும் சிறையில் உள்ள தனது கட்சிககாரர்களை விடுதலை செய்யுமாறு தொகுப்புரையை சமர்ப்பணம் செய்தார். இதனை அடுத்து வழக்கு தீர்ப்பிற்காக எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை நீதிபதிகளால் தவணையிடப்பட்டுள்ளது. (செ-4)

# எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்



- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 விதம் இயற்கையானது

(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E) (9447)

எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பு:
எவரெஸ்ட் மருந்தகம்,
உசன், மிருசுவில்,
யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர்
பிரமநாதன் & Co
எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
கைபேசி எண்: 0776389356, 0777153571


# வித்தியா படுகொலை வழ...

நாதன் வித்தியா பாடசாலை செல்லும் போது கடந்த 2015 ஆம்ஆண்டுமேமாதம் 13 ஆம் திகதி கடத்தப் பட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தபட்ட பின்னர் கொடூரமாக கொலை செய்யப்படுகின்றார்.

அன்றைய சூழலில்; இந்த கொடூர கொலை வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும் கோபத்தையும் ஏற்படுத்துகின்றது.

முதலாவதாக புங்குடுதீவு மக்கள் கொலையாளிகளை கண்டுபிடிக்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். தொடர்ந்து தீவக பாடசாலைகளும் ஸ்தம்பிதமடைந்து தீவகங்களில் வித்தியாவின் படுகொலைக்கு நீதி கோரும் போராட்டங்கள் தீவிரமடைய தொடங்குகின்றன.

அந்த மக்களின் உணர்வுகளும்கோபமும் கடல் தாண்டி யாழ் மண்ணையும் தொற்றி கொள்கின்றது.

இதனை அடுத்து யாழ்ப்பாணத்தில்முழு நாள் ஹர்த்தாலும் பெரும் போராட்டங்களும் நடைபெறுகின்றன. தொடர்ந்து வன்முறைகளும் வெடிக்க ஆரம்பிக்கின்றன. இதனால் யாழ்.குடாநாடே போர்க்களமாக மாறுகின்றது. இதனை தொடர்ந்து வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வித்தியாவிற்கான போராட்டம் பரவுகின்றது.

இறுதியாக நாட்டின் தலைநகரிலும் போராட்டங்கள் நடைபெற்றன. இந்த தொடர் போராட்டங்களால் நாட்டின் அரசாங்கமே ஆட்டம் க்ண்டது. இவற்றை அடுத்து அவசர அவசரமாக யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. வித்தியாவின் தாயாரை சந்தித்து ஆறுதல் கூறுகின்றார். வித்தியாவின் கொலையை ட்ரயல் அட்பார் முறையின் மூலம் விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கின்றார்.

எனினும் குறித்த ட்ரயல் அட்பார் நீதிமன்றை தென்பகுதியில் ஏற்படுத்துவதற்கு அரச தரப்பு முயன்றது.

எனினும் வடக்கில் தமிழ் பேசும் நீதிபதிகள் கொண்ட ட்ரயல் அட்பார் விசாரணைமுறையை ஏற்படுத்துமாறு அனைத்து தரப்பினராலும் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. எனினும் தென்பகுதியில் நிறுவுவதற்கு அரசு தரப்பு தொடர்ந்தும்முனைப்பு காட்டிய நிலையில், அதனை எதிர்த்து மீண்டும் மக்கள் போராட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

மக்களுடைய போராட்டத்தின் பலனாக நாட்டின் பிரதம நீதியரசரால் 2017.05.23 அன்று மூன்று தமிழ் மொழி பேசும் மேல் நீதிமன்ற நீதிபதிகளான பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையிலான அன்னலிங்கம் பிரேமசங்கர். மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய ரயல் அட்பார் நீதாய விளக்கம் நியமிக்கப்படுகின்றது.

இந்த நீதாயத்தின் விசாரணைகள் தொடர் விசாரணைகளாக நடைபெற்று நேற்றுடன் அனைத்து விசாரணைகளும் முடிவடைந்துள்ளன.

இந்த வழக்கில் மரபணு மூலம் சந்தேக நபர்கள் குறித்த குற்றத்தில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்படவில்லை, இதனை தவிர தடய பொருட்கள் மூலமும் குற்றச் சாட்டுக்கள் நிரூபணம் செய்யப்படவில்லை. பிரதான

23☛


## தேவை

தையல் நிலையம் ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இரு பாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: 077 844 9170, 077 625 3811 (360)

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

UK - 550/= (C-9578)



CANADA - 400/= மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## உடனடி வேலை வாய்ப்பு
## V2 TRAVELS

(C-9578)



UK-550/=Kg

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை



நீண்ட காலமாக வேலை தேடுபவரா?

5,000/=(பயிற்சியின் போது) //15,000/=(பயிற்சியின் பின்னர்)

நேர்முகத் தேர்வின் ஊடாகத் தெரிவு செய்யப்படும்

தகுதி:- 30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)

49A சப்பல்லேன், யாழ்ப்பாணம்.
0768226241

Velummayilum Foundation

பருத்தித்துறையில் இலவச கணனி வகுப்புக்கள் ஆரம்பம்

- MS Office
- DTP

A/L பரீட்சை எழுதியவர்களுக்கும் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போருக்கும் சிறந்த முறையில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர் மூலம் கற்பிக்கப்படும்.

வேலும்மயிலும் பவுண்டேஷன்
ஓடைகரை வீதி, பருத்தித்துறை.
www.velummayilumfoundation.org
021 226 1933 (C-9634)

MCS IT CAMPUS வழங்கும் மாபெரும் சந்தர்ப்பம்

Special Offer

48000 28000

A/L க.பொ.த உயர்தரப்பரீட்சை தோற்றியோருக்கு ஒரு கற்கைநெறிக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி விரும்பிய அனைத்து கற்கை நெறிகளையும் கற்கலாம்

BIT,Comp.Eng,CIMA

Sinhala,Web Designing,Hardware ,Networking Autocad,Accounting Package,Diploma in English


முதலில் பதிவு செய்யும் 25 பேருக்கு மட்டும்

Type<Name><Course><District><Send to 772395895

MCS IT CAMPUS Near University Of Jaffna (C-9628)


# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை விநாயகரெட்ணம்



யாழ்/மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட உயர்திரு. கணபதிப்பிள்ளை விநாயகரெட்ணம் அவர்கள் 12.09.2017 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான கணபதிப்பிள்ளை - விசாலாட்சி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும், வேலுப்பிள்ளை - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காந்தமலரின் ஆருயிர்க் கணவரும், சாந்தினி, ரோகினி, நந்தினி, நளாயினி, இளங்கோ, சுலோஜினி, வினோதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சோமசுந்தரம், பத்மநாதன், ராஜன், ராகவன், கல்யாணி, சிவகுமார், குபேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், மாகுலம், காலஞ்சென்ற மகாலிங்கம், தையல்நாயகி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி ஆகியோரின் ஆருயிர் அண்ணாவும், காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி, ஈஸ்வரி, காலஞ்சென்ற சேதுராஜா, சிவராஜா, காலஞ்சென்ற உமாபதி, காலஞ்சென்ற உலகேஸ்வரி, விஜியலெட்சுமி, நடனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சர்மிலன், மினிஜா, மிலானி, மிதுர்ஜா, ராஜிகா, ஆரபி, சமரன், சயானா, அபிரா, அக்சயா, ஐஸ்வர்யா, சகாணா, சரன் ஆகியோரின் பேரன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 16.09.2017 சனிக்கிழமை மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரையும், மறுநாள் 17.09.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை பார்வைக்காக வைக்கப்பட்டு பின்னர் 12.30 முதல் 2.30 மணி வரை ஈமக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 3.00 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்.

Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

தகவல்: குடும்பத்தினர்

சோமு: 0019054712558
0014163193782
ரோகினிநாதன்: 00447522151987
இளங்கோ: 004178961172

அ.ஶ்ரீபத்மராசா JP (பெறாமகன்)
கலைவாணிலேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 021 221 2580 (C-9636)


## CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு



20th Batch start on 16.09.2017

வேலைவாய்ப்பு உத்தரவாதம்*
(*Conditions apply)

100% தொழில்சார் செயன்முறை பயிற்சிநெறி

2017 A/L மாணவர்களுக்கு 25% Discount

ICS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி யாழ்ப்பாணம்
076-7013060 , 021-7306000

## Mobile Phone Repairing Course



I Phones & Smart Phones
Hardware , Software and Unlocking

13th Batch start on 16.09.2017 (C-9633)

# சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
# தனிப்பட்ட கவனிப்பு.
# சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

*10 மாணவர்களுக்கான அனுமதி மட்டுமே உள்ளதால். ஆசன முன்பதிவு செய்யவும்.


# கடும் நிபந்தனையு...

மா அதிபர் லலித் எ ஜெயசிங்க கடும் நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நேற்றைய தினம் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. அதன் போது விளக்க மறியலில் தடுத்து வைக்கப் பட்டு இருந்த முன்னாள் வடமாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் எ ஜெயசிங்க மன்றில் முற்படுத்தப்பட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது , முன்னாள் வடமாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் எ ஜெயசிங்க சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் பிணை விண்ணப்பம் செய்தனர்.

அதனை அடுத்து மூன்று லட்சம் ரூபாய் காசு பிணை. மற்றும் தலா 4 லட்சம் பெறுமதியான நான்கு சரீரப்பிணையில் செல்ல அவர் அனுமதிக்கப்பட்டார்.

23☛

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.